முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம், அந்தச் சபையாருக்கு மாத்திரம் எழுதப்பட்டதா அல்லது அக்காலத்திலுள்ள சபைகளெல்லாவற்றிலும் வாசிக்கும்படியாக, ஒரு சுற்றறிக்கை நிருபமாக எழுதப்பட்டதா என்பது பற்றி வேதபண்டிதர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்த நிருபத்தில் பவுல் சொல்லுகிற ஆலோசனைகளும் உபதேசங்களும், ஒரு குறிப்பிட்ட சபையாருக்கு என்று இல்லாமல், எல்லா சபையாருக்கும் பிரயோஜனமுள்ளதாகயிருக்கிறது. ஆவிக்குரிய பிள்ளைகளெல்லோருக்கும் பவுல் சத்தியத்தைத் தெளிவாக உபதேசம் செய்கிறார். எல்லோருக்கும் ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும்போது, அவர் இந்த நிருபத்தை எழுதியிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவருக்கு உபத்திரவம் அதிகரித்தது. உபத்திரவம் அதிகரிக்கும் போது, அவருக்கு தேவகிருபையும் அவருக்கு அதிகரித்தது. தேவனுடைய ஆறுதலை பவுல் அதிகமாகப் பெற்றுக்கொண்டார்.

எபேசியர்கள் சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும். சுவிசேஷத்தின் இரகசியத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நோக்கத்தோடுதான் பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார். இந்த நிருபத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில், எபேசியருடைய ஆவிக்குரிய சிலாக்கியங்களைத் தெளிவுபடுத்துகிறார். எபேசியர்கள் இரட்சிக்கப்பட்டு தேவனோடு உடன்படிக்கையில் இருக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை எபேசியர் 1-3 ஆகிய மூன்று அதிகாரங்களில் தெளிவாக எழுதுகிறார். இரண்டாவது பகுதியில் விசுவாசிகளின் ஆவிக்குரிய கடமைகளைத் தெளிவுபடுத்துகிறார்.

1 அதிகாரம்

நிருபத்திற்கு ஒரு சுருக்கமான முன்னுரை (எபே 1:1,2) அப்போஸ்தலர் பவுல் தேவனுக்கு நன்றி சொல்லி, அவரை ஸ்தோத்திரிக்கிறார். விசுவாசிக்கிற எபேசியர்மீது தேவன் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பொழிவதற்காக பவுல் கர்த்தரைத் துதிக்கிறார் (எபே 1:3-14). பவுல் எபேசியருக்காக கர்த்தரிடம் கருத்தாய் விண்ணப்பம்பண்ணுகிறார் (எபே 1:15-23).

கிருபையும் சமாதானமும் எபே 1 : 1-2

எபே 1:1. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது:

எபே 1:2. நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும்சமாதானமும் உண்டாவதாக.

அப்போஸ்தலர் பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்" என்று சொல்லுகிறார். தேவனுடைய சித்தத்தினால் பவுல் அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர் ஒவ்வொருவரும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, ஊழியக்காரராக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். நம்முடைய ஊழியம் தேவனுடைய சித்தத்தினால் நடைபெறுகிறது என்று நாம் அறிக்கை செய்யவேண்டும். இது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். இதற்காக தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறார். விசுவாசிகளை பரிசுத்தவான்கள் என்று சொல்லுகிறார். விசுவாசிகளெல்லோரும் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எபேசுவிலுள்ள விசுவாசிகளில் அநேகர் பரிசுத்தவான்களாகவும் இருக்கிறார்கள். பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளைப் பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார். விசுவாசிகளாயிராதவர்கள் பரிசுத்தவான்களாயிருக்கமாட்டார்கள் விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய பலத்தையும், தேவகிருபையையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் எபேசுவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லுகிறார். "உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய அன்பையும், சிலாக்கியத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நாம் தகுதியற்றவர்களாக யிருக்கிறோம். தகுதியில்லாத நம்மீது, தேவன் தம்முடைய கிருபையினால், அன்பு கூருகிறார். நமக்கு ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் தருகிறார். தேவகிருபையை நாம் இலவசமாகப் பெற்றுக்கொள்கிறோம். மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் சமாதானத்தினால் உண்டாகிறது. கிருபையின் கனியே சமாதானம். கிருபையில்லாமல் சமாதானம் இல்லை. கிருபையும் சமாதானமும் பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் நமக்கு உண்டாகிறது.

தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தவர். நம்முடைய பிதாவாகிய தேவனிடமிருந்தே கிருபையும் சமாதானமும் நமக்கு வருகிறது. தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், நமக்கு கிருபையும் சமாதானமும் உண்டாகிறது. நமக்கு கிருபையும் சமாதானமும் கொடுப்பதற்கு பிதாவும் குமாரனும் பிரியமாயிருக்கிறார்கள்.

பரிசுத்த வான்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளா யிருக்கிறார்கள். இவர்கள் ஏற்கெனவே கிருபையையும் சமாதானத்தையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த வான்களாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் ஆவியானவரின் கிருபைகளைப் புதிதாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவம் பசுமையாய், ஜீவனுள்ளதாயிருக்கும். தேவகிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும். நாம் நமக்காகவும் ஜெபிக்க வேண்டும். பிறருக்காகவும் ஜெபிக்க வேண்டும். கிருபையும் சமாதானமும் நமக்கும் கிடைக்கவேண்டும், மற்றவர்களுக்கும் கிடைக்கும் என்று ஜெபிக்கவேண்டும்.

நம்முடைய ஜெபங்களினாலும் துதிகளினாலும், தேவஆவியானவர் நமக்கு தெய்வீக ஆசீர்வாதங்களைத் தருகிறார். நமக்கு கிருபையும் சமாதானமும் உண்டு பண்ணுகிறார். ஜெபிக்கும்போது நம்முடைய தேவைகளை தேவனிடத்தில் சொல்லுகிறோம். அவரைத் துதிக்கும்போது, தேவனிடத்திலிருந்து நாம் ஜெபித்ததை விசுவாசத்தோடு பெற்றுக் கொள்கிறோம்.

தேவனுக்கு ஸ்தோத்திரம்
எபே 1 : 3-14

எபே 1:3. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

எபே 1:4. தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,

எபே 1:5. பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,

எபே 1:6. தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.

எபே 1:7. அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

எபே 1:8. அந்தக் கிருபையை அவர் சகலஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்.

எபே 1:9. காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று,

எபே 1:10. தமக்குள்ளே தீர்மானித் திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.

எபே 1:11. மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும் படிக்கு,

எபே 1:12. தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே, நாங்கள் முன் குறிக்கப்பட்ட, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்திரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.

எபே 1:13. நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.

எபே 1:14. அவருக்குச் சொந்த மானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் ஜெபத்தோடும் துதியோடும் இந்த நிருபத்தை எழுத ஆரம்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குள் நாம் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறோம். பிதாவானவர் உன்னதங்களிலே, நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக பவுல் தேவனைத் துதிக்கிறார். அவர் பிதாவைப் பற்றிச் சொல்லும் போது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" என்று சொல்லுகிறார். எல்லா ஆசீர்வாதங்களும் பிதாவாகிய தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது. அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதவாகிய தேவனாயிருக்கிறார். அவர் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களே மேன்மையான ஆசீர்வாதங்கள். இந்த ஆசீர்வாதங்கள் நம்மீது தங்கியிருக்கவேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார். நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினால் ஆசீர்வதிக்கப்படும்போது, மெய்யாகவே ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்போது, அவருக்கு பிரதிபலன் செலுத்தும்விதமாக, நம்மால் அவரை ஆசீர்வதிக்க முடியாது. ஆகையினால் அவருக்கு நன்றி சொல்லுகிறோம். அவரைத் துதிக்கிறோம். ஸ்தோத்திர பலிகளை ஏறெடுகிறோம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் தற்காலிகமானவையல்ல. நிரந்தரமானவை. இவை உன்னதங்களிலுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள். இந்த வாக்கியத்தை நாம் இவ்வாறு விவரிக்கலாம். "தேவன் கிறிஸ்துவுக்குள், உன்னதங்களிலுள்ள காரியங்களில், நம்மை ஆசீர்வதிக்கிறார்" என்றும் சொல்லலாம்.

உன்னதங்களிலுள்ள ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து வருகிறது. அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மனுஷரைத் தகுதிப்படுத்தும். நாம் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும் போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், உன்னதத்திலுள்ள பரலோகத்தின் ஆசீர்வாதங்களையும் கருத்தாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் நம்முடைய நிலமை பரிதாபமாகயிருக்கும். ஆவிக்குரிய ஆசீர்வாதமில்லாமல், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம், பிரயோஜனமற்றதாகவே இருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் இங்கு இரண்டு விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.அவையாவன: 1. தெரிந்தெடுத்தல் 2. முன்குறித்தல்.

இந்தப் பிரபஞ்சத்தில் திரளான எண்ணிக்கையின் ஜனங்கள் இருக்கிறார்கள். இந்த திரள்கூட்டம் ஜனத்திலிருந்து, தேவன் நம்மை தம்முடைய சித்தத்தினால் தெரிந்தெடுத்து, வேறுபிரித்திருக்கிறார். தெரிந்தெடுத்த நம்மை, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, முன்குறித்தும் இருக்கிறார். தெய்வீக ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதற்காகவே நம்மைத் தெரிந்தெடுத்து வேறுபிரித்திருக்கிறார்.

பிதாவாகிய தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய், தமக்கு சுவிகார புத்திரராகும்படி, முன் குறித்திருக்கிறார். ஏற்றவேளை வரும் போது நாம் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படுவோம். தேவபிள்ளைகளுக்குரிய எல்லா ஆசீர் வாதங்களையும் சுதந்தரித்துக்கொள்வோம்.

தேவன் நம்மை எப்போது தெரிந்தெடுத்தார் என்னும் கேள்விக்கு பவுல் தெளிவாக பதில் சொல்லுகிறார். உலகத்தோற்றத்துக்கு முன்னே, தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார். தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படியே இந்தத் தெரிந்தெடுப்பு உண்டாயிற்று. அவருடைய நித்திய சித்தத்தில் நம்மை முன்குறித்திருக்கிறார்.

நம்மிடம் யாராவது உதவி கேட்டால், அவர் உதவி கேட்ட பின்பு, அவருக்கு உதவி செய்யலாமா அல்லது செய்யவேண்டாமா என்று யோசித்து, அதன்பின்பு அதைப்பற்றி தீர்மானம் செய்வோம். தேவன் நம்மை இதுபோல தெரிந்தெடுக்கவில்லை. தம்முடைய ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ளுமாறு, இதுபோல முடிவு செய்யவில்லை. ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு உதவி செய்யும்போது, பலமுறை யோசித்து, நல்ல உதவிகளைச் செய்வார். தன் பிள்ளைக்கு உதவி செய்யவேண்டும் என்னும் எண்ணம் தகப்பனுடைய இருதயத்தின் ஆழத்தில் எப்போதும் பதிந்திருக்கும்.

தேவன் இதுபோலவே நமக்கு உதவி செய்ய விரும்புகிறார். திடீரென்று தமக்கு சுவிகார புத்திரராகும்படி நம்மை தெரிந்தெடுக்கவில்லை. திடீரென்று நம்மை முன் குறிக்கவுமில்லை. உலகத் தோற்றத்திற்கு முன்னே, அவர் கிறிஸ்துவுக்குள்ளே நம்மைத் தெரிந்து கொண்டார். தேவனிடத்தில், நம்மைப்பற்றிய சிந்தனையும், திட்டமும், தீர்மானமும், நாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே உண்டாயிற்று. உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே உண்டாயிற்று.

தேவன் நம்மை ஏற்கெனவே தெரிந்துகொண்டபடியினால், நாம் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறிக்கப் பட்டிருக்கிறோம். நம்மைத் தெரிந்து கொள்வதிலும், முன் குறிப்பதிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முக்கியமான பங்கு வகிக்கிறார்.

நாம் தேவனுக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவருக்கு முன்பாக குற்றமில்லாதவர்களாய் இருக்கவேண்டும். இதற்காகவே தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னே, கிறிஸ்துவுக்குள், நம்மைத் தெரிந்துகொண்டார். நாம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், கிருபையையும், ஆவிக்குரிய ஆசீர் வாதங்களையும் பெற்றுக் கொள்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். இதற்காகவே முன்குறிக்கப்பட்டிருக்கிறோம். இவையெல்லாம் நமக்கு உண்டாக வேண்டுமென்றால், தேவனுக்கு முன்பாக நாம் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். குற்றமில்லாதவர்களாயிருக்க வேண்டும். பரலோகத்தின் ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொள்ள தெரிந்து கொள்ளப்படுகிறவர்கள், பரிசுத்த முள்ளவர்களாகவும் இருக்க வேண்டு மென்று தெரிந்து கொள்ளப்படுகிறார்கள்.

நம்முடைய பரிசுத்தம் மாய்மாலமானதாக இருக்கக்கூடாது. புறம்பான தோற்றத்தில் நாம் பரிசுத்தத்தைக் காண்பிக்க முடியாது. நம்முடைய பரிசுத்தம் உள்ளான பரிசுத்தமாக இருக்கவேண்டும். இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். தேவன்மீதுள்ள அன்பினாலும், பிறர்மீதுள்ள அன்பினாலும் இந்த உண்மையான பரிசுத்தம் நமக்குள் உண்டாகிறது. ஆகையினால் நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகியிருக்க வேண்டுமென்று தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார். நாம் தேவனுக்கு முன்பாக குற்றமில்லாதவர்களாயிருக்க வேண்டும்.

உண்மையான பரிசுத்தமுள்ளவர்கள் தான் பிறர்மீது உண்மையாகவே அன்பு கூருவார்கள். நம்முடைய முன்குறிப்பு தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருந்த, தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை, அவர் அப்போஸ்தலருக்கு அறிவித்திருக்கிறார் (எபே 1:10). தேவன் தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவே, நம்மைத் தெரிந்து கொண்டார். தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படியும், அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவும், நாம் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்கு சுவிகார புத்திராகும்படி முன்குறிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய முன்குறிப்பு நம்முடைய மகிமைக்குப் புகழ்ச்சியானதல்ல. தேவனுடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவே, நாம் தேவனுடைய தயவுள்ள சித்தத்தின் பிரகாரம், தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறோம், முற்குறிக்கப்பட்டிருக்கிறோம்.

தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சி உண்டாக வேண்டும். தேவனுடைய தயவுள்ள சித்தமெல்லாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகவே இருக்கும். தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும் படிக்கு, விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி, முற்குறிக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள் (எபே 1:12). கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களாகிய நம்மிடத்திலும், தேவனுடைய தயவுள்ள சித்தமே நிறைவேற வேண்டும். அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும். நாமும் தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக ஜீவிக்க வேண்டும். நம்முடைய ஒவ்வொரு பேச்சும், கிரியையும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை, அவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அங்கீகரித்திருக்கிறார். "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின, தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக" நம்மை முன்குறித்திருக்கிறார். தேவன் நம்மை நேரடியாக ஏற்றுக்கொள்ளாமல், இயேசு கிறிஸ்துவிலும், இயேசு கிறிஸ்து மூலமாகவும் ஏற்றுக் கொள்கிறார். தேவனுடைய பிரியமானவரான குமாரனினிமித்தமே, தேவன் தம்முடைய பிள்ளைகளை நேசிக்கிறார். இயேசு கிறிஸ்துவே தேவனுக்குப் பிரியமானவர்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால், அவருக்குள், பாவ மன்னிப்பு உண்டாயிருக்கிறது. மீட்பின் கிரயம் செலுத்தாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. நம்முடைய பாவத்தின் சாபங்களையும், குற்றவுணர்வுகளையும், பாவகறைகளையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே நீக்கிப்போடமுடியும். வேறு எந்த உபாயத்தினாலும் பாவத்தின் கறைகளை நீக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நம்முடைய பாவக்கறைகளிலிருந்து நம்மை சுத்திகரிக்க வல்லமையுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவே, ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு வந்து சேருகிறது.

தேவனுடைய கிருபையின் ஐசுவரியம் நம்மை இரட்சிப்புக்குள் வழிநடத்துகிறது. பிதாவானவர் நம்மீது கிருபையாக இருப்பதினால், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காக, தம்முடைய ஒரே பேறான குமாரனுடைய இரத்தத்தின் மூலமாய் நமக்கு மீட்பை உண்டுபண்ணியிருக்கிறார்.

நம்முடைய பாவத்தின் கறைகளை வேறு எந்த உபாயத்தினாலும் சுத்திகரிக்க முடியாது. நம்முடைய இருதயத்தின் சிந்தைகளை சுத்திகரிக்கும் வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தைத் தவிர, வேறு எந்த உபாயத்திற்கும் வல்லமையில்லை. ஆகையினால் தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பை, இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார்.

தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தை நமக்கு வெளிப்படுத்தியது போலவே, அவருடைய கிருபையை சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப்பண்ணியிருக்கிறார். இது கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். தேவன் தம்முடைய கிருபையை சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப்பண்ணியிருக்கிறார். தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்திருக்கிறார்.

இதுவரையிலும் தேவனுடைய காரியங்கள் நமக்கு இரகசியமாகவே இருந்தது. ஆனால் இப்போதோ அவருடைய கிருபையினாலும், அவர் கொடுத்திருக்கிற ஞானத்தினாலும் புத்தியினாலும், தேவனுடைய இரகசியங்கள் நமக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கிருபை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயிற்று. தேவனுடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை மனுப்புத்திரருக்கு அறிவிப்பதற்காக, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி, பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டும் என்று தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருக்கிறார். அவருடைய தயவுள்ள சித்தத்தின் இந்த இரகசியத்தை, தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவன் அறிவித்திருக்கிறார். இரட்சிப்பின் சுவிசேஷமே தேவனுடைய இரகசியம். தேவன் மனுக்குலத்தின் இரட்சிப்பை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். தம்முடைய தீர்மானத்தின் பிரகாரம், கிறிஸ்துவுக்குள்ளே சகலவற்றையும் கூட்டிச் சேர்க்கிறார். பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளும் இயேசு கிறிஸ்துவுக்குள்ளே தேவனுடைய சித்தத்தினால் கூட்டப்படுகிறது. தேவனுடைய எல்லா வெளிப்பாடுகளும் இயேசு கிறிஸ்துவுக்குள் சங்கமமாகிறது. யூதர்களும் புறஜாதியாரும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படுவதினால், அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக் கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளும் கூட்டிச் சேர்க்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே சமதானம் உண்டு பண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பரலோகத்திலுள்ள தேவதூதர்களின் சேனைத்திரள், பூமியிலுள்ள திருச்சபையோடு கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். இதுவே தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருந்த அவருடைய தயவுள்ள சித்தம்.

கிறிஸ்துவுக்குள் நாம் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டிருப்பது, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கிடைத் திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இயேசுகிறிஸ்துவில் நாம் நித்திய ஜீவனையும், நித்திய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்கிறோம். பரலோகம் நமக்கு சுதந்தரம். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும் இருக்கிறோம்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் தேவன் நமக்கு பல ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். தேவன் நமக்கு நியமித்திருக்கிற சுதந்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பூமிக்குரிய இந்த ஆசீர்வாதங்களெல்லாம் மிகவும் கொஞ்சமாகவே இருக்கும். தேவன் தம்முடைய சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிறார். அவருடைய தீர்மானத்தின் படியே நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்.

நாம் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானோம். அப்போது தேவன் நம்மை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால், கிறிஸ்துவுக்குள் முத்திரைபோட்டார். தேவன் நம்மை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறவர். ஆவியானவர் மூலமாய் விசுவாசிகளெல்லோரும் முத்திரை போடப்படுகிறார்கள். தேவனுக் கென்று வேறுபிரிக்கப்படுகிறார்கள்.

கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள். இதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக யிருக்கிறார். அச்சாரம் என்னும் வார்த்தை முன்பணத்தைக் குறிக்கிறது. முன்பணம் செலுத்தப்படும் போது, ஒப்பந்தம் உறுதி பண்ணப்படுகிறது. மீதமுள்ள முழுப்பணமும் செலுத்தப்படும் என்பதற்கு, அச்சாரம் ஒரு முன்தொகையாகும். முழுக்கிரயமும் செலுத்தப்படும் என்பதற்கு அச்சாரம் ஒரு அடையாளம்.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்திற்கு அச்சாரமாயிருக்கிறார். தேவனுடைய மகிமையின் வித்து பரிசுத்த ஆவியானவருக்குள் இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய எல்லா ஆசீர் வாதங்களுக்கும் பரிசுத்த ஆவியானவரே அச்சாரமாகயிருக்கிறார். அவர் நம்மை ஆறுதல் படுத்துகிறார். நமக்கு நித்திய சந்தோஷத்தை வாக்குப் பண்ணுகிறார். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக நாம் மீட்கப்படுவோம். நாம் மீட்கப்படுவதற்கு, ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் மீட்கப்படுகிறோம். இயேசுகிறிஸ்து, தம்முடைய சுயஇரத்தத்தை, நம்மை மீட்கும் மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவோம் (எபே 1:11). தேவனுடைய கிருபையை முந்திப் பெற்றுக்கொண்டவர்கள், அவரை முந்தி மகிமைப்படுத்தவேண்டும். கிறிஸ்துவின் கிருபையை நீண்டகாலமாக அனுபவித்து வருகிறவர்கள், தாங்கள் கிறிஸ்துவின் கிருபையைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து, கிறிஸ்துவை மகிமைப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இதுவே தேவனுடைய தெய்வீக திட்டம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறார். நாம் விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரை போடப்பட்டிருக்கிறோம்.

ஜெபம்
எபே 1 : 15-23

எபே 1:15. ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்த வான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நான் கேள்விப்பட்டு,

எபே 1:16. இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து,

எபே 1:17. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்,

எபே 1:18. தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்,

எபே 1:19. தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப் படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்.

எபே 1:20. எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக,

எபே 1:21. அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து,

எபே 1:22. எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி,

எபே 1:23. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்காக அப்போஸ்தலர் பவுல் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிக்கிறார். கர்த்தர் நமக்காக அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை, தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். நாம் அவற்றை ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் எந்த அளவுக்கு விசுவாசத்தோடு ஜெபித்து, கேட்கிறோமோ, அந்த அளவுக்கு மாத்திரமே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்குக் கொடுக்கப்படும். நம்முடைய விசுவாச அளவுக்கு அதிகமாகவோ அல்லது நாம் ஜெபத்தில் கேட்டுக் கொள்வதற்கு அதிகமாகவோ, நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளமாட்டோம்.

அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளைக் குறித்து நல்ல செய்திகளைக் கேள்விப் பட்டிருக்கிறார். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசத் தோடிருக்கிறார்கள். பரிசுத்தவான்கள் எல்லோர் மேலும் அவர்கள் தங்கள் அன்பைக் காண்பிக்கிறார்கள். பரிசுத்த வான்களை நேசிக்கிறவர்கள், பட்சபாத மில்லாமல் எல்லா பரிசுத்தவான்களையும் நேசிக்க வேண்டும். பரிசுத்தவான்கள் தங்கள் கிருபையில் பலவீனராக யிருந்தாலும், உலகப்பிரகாரமாக சாதாரண ஜனங்களாக இருந்தாலும், ஏழையாகவோ, ஐசுவரியவானாகவோ இருந்தாலும் படித்த பண்டிதர்களாக இருந்தாலும், படிக்காதவர்களாக இருந்தாலும், எல்லா பரிசுத்தவான்கள் மேலும் பட்சபாதமில்லாமல் அன்புகூர வேண்டும்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் தங்களுடைய சுதந்தரத்தின் அச்சாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். கர்த்தருக்குச் சொந்த மானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள். இதற்கு ஆவியானவர் தாமே அவர்களுடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். ஆகையினால் அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்காக இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணி, தன்னுடைய ஜெபங்களில் அவர்களை நினைவுகூருகிறார்.

தேவன் விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியான வரை அச்சாரமாகக் கொடுத்திருப்பதற்காக அவர் கர்த்தரை இடைவிடாமல் ஸ்தோத்திரம்பண்ணுகிறார். அதே வேளையில் பவுல் அவர்களுக்காக ஜெபிப்பதையும் நிறுத்திவிடவில்லை. இடைவிடாமல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். அவர்கள் ஆவியானவரின் அளவை அதிகமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்பதே பவுலின் பிரதான விண்ணப்பம். அவர்களுக்கு ஞானமும் தெளிவும் உண்டாக வேண்டும். அவர்களுடைய ஞானமும் அறிவும் விருத்தியடைய வேண்டும். அப்போஸ்தலர் பவுல் இங்கு உலகப்பிரகாரமான ஞானத்தைப்பற்றிச் சொல்லவில்லை. ஆவிக்குரிய அநுபவ ஞானத்தை இங்கு குறிப்பிடுகிறார்.

பிதாவாகிய தேவனை எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் அறிந்து கொள்ள வேண்டும். அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்காக கர்த்தர் தாமே அவர்களுக்கு ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தரவேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார்.

ஆவியானவருடைய கிருபைகளும் ஆறுதல்களும், கர்த்தரை அறிந்து கொள்ளும் ஞானத்தின் மூலமாக நம்முடைய ஆத்துமாவிற்குக் கொடுக்கப் படுகிறது. பரிசுத்த ஆவி தெளிவை அளிக்கிற ஆவி. சாத்தானுடைய ஆவியோ குழப்பத்தை உண்டுபண்ணுகிற ஆவி. சாத்தான் குழப்பத்தை உண்டுபண்ணி, தேவனை அறிகிற அறிந்து கொள்வதற்கான ஞானத்தைக் கெடுத்துப் போடுகிறான். ஆனால் கர்த்தரோ, தம்மை அறிந்துகொள்வதற்காக, அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஞானத்தையும், தெளிவை அளிக்கிற ஆவியையும் தந்தருளுகிறார்.

கர்த்தரை அறிந்துகொள்கிற ஞானம், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தே நமக்கு வருகிறது. நம்முடைய கர்த்தர் ஞானத்தின் தேவனாகயிருக்கிறார். கர்த்தரிடமிருந்தே நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிக்கும் கிருபைகளும், கர்த்தரை அறிந்து கொள்வதற்கான ஞானமும் வருகிறது. அவர் நமக்கு ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தருளி, நாம் அவரை அறிந்து கொள்வதற்கு உதவிபுரிகிறார். தேவனுடைய ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் தம்முடைய பரிசுத்த வான்களை உபதேசித்து வழிநடத்துகிறார். ஆவியானவர் ஞானத்தின் ஆவியானவராகவும், சத்தியத்தை வெளிப்படுத்துகிற ஆவியானவராகவும் இருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையில் ஆவியானவரின் வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய இருதயத்தில் ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியானவர் வாசம்பண்ண வேண்டும். ஆவியானவருடைய உதவியில்லாமல் கர்த்தரை நம்மால் அறிந்துகொள்ள முடியாது. கர்த்தரை அறிந்துகொள்வதற்காகவே ஆவியானவர் நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். நாம் தேவனுடைய தெய்வீக ஞானத்தைப் பெற்றுக்கொள்ளும் போது, நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏராளமாய்க் கிடைக்கும்.

கர்த்தர் எபேசியருக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று, பவுல் அவர்களுக்காக வேண்டிக் கொள்கிறார். விசுவாசிகள் ஒருவரை யொருவர் நேசித்து, ஐக்கியமாகயிருந்தால் மாத்திரம் போதாது. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரிடமிருந்து பிரகாச முள்ள மனக்கண்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்ப வேண்டும். அதற்காக ஒருவருக்கொருவர் கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். நாம் சாதாரண விசுவாசிகளாக இருந்தால் மாத்திரம் போதாது, நாம் கர்த்தரை அறிந்துகொள்கிற விசுவாசிகளாகவும் இருக்கவேண்டும். நாம் ஆராதிக்கிறவர் இன்னாரென்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

ஆவியானவர் நமக்கு கர்த்தரை அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் தந்தருளுகிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஞானத்தில் நாம் விருத்தியடையவேண்டும். நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்ன தென்று நாம் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் தாமே நம்மை அழைத்திருக்கிறார். நாம் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்பட்டவர்கள். தேவன் நம்மை தம்முடைய சுதந்தரராக அழைத் திருக்கிறார். நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக பரிசுத்த ஆவியானவரை நமக்குக் கொடுத்திருக்கிறார். தேவன் நம்மை அழைத்ததினால், நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்ன தென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவன் நம்மை அழைத்ததில் விசுவாசத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

நாம் தேவனோடு ஐக்கியமாக இருக்கவேண்டுமென்றால் நம்மிடத்தில் விசுவாசம் இருக்க வேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். தேவன் நம்மை அழைத்த அழைப்பை, முதலாவது விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ளவேண்டும். அதன் பின்பு தேவன் நம்மை அழைத்ததினால் நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதற்காக தேவனிடத்தில் கருத்தாய் ஜெபிக்கவேண்டும். நம்முடைய அழைப்பின் நம்பிக்கையை புரிந்து கொள்வதற்கு, கர்த்தர் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும். நம்முடைய மனக்கண்கள் பிரகாசமாகயிருக்கும்போது, ஆவிக்குரிய காரியங்களில் நம்முடைய குழப்பங்கள் நீங்கும். தெளிவு உண்டாகும். நம்முடைய நம்பிக்கை உறுதியாயிருக்கும்.

பரிசுத்தவான்களிடத்தில் கர்த்தருக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் கர்த்தர் அவருடைய சுதந்தரத்தின் அச்சாரமாக பரிசுத்த ஆவியானவரைக் கொடுத் திருக்கிறார். தேவனுடைய கிருபையானது அவருடைய மகிமைக்கு ஆரம்பமாக யிருக்கிறது. நம்முடைய பரிசுத்தமானது நம்முடைய நித்திய சந்தோஷத்திற்கு துவக்கமாகயிருக்கிறது. நம்முடைய சுதந்தரத்தில் தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. நாம் இந்தச் சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை நம்முடைய சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் நமக்கு பரலோகத்தில் பூரணமாக தெளிவுபடுத்தப்படலாம். தேவன் எங்கே இருக்கிறாரோ அங்கேயே அவருடைய மகிமையின் ஐசுவரியம் வாசமாயிருக்கும். நம்முடைய சுதந்தரத்தின் ஐசுவரியத்தை நாம் பரலோகத்தில் பெற்றுக்கொள்வோம். அதைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் கருத்தாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற மகிமையின் ஐசுவரியம் இன்ன தென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

கர்த்தரை விசுவாசிக்கிற நம்மிடத்தில் தேவன் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவத்தைக் காண்பிக்கிறார். நம்முடைய சுயமுயற்சியினால் எந்த ஆத்துமாவையும் கர்த்தரிடத்தில் கொண்டு வரமுடியாது. ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் தேவனுடைய வல்லமை அந்த ஆத்துமாவிற்குள் கிரியை செய்யவேண்டும். தேவனுடைய வல்லமை மகா மேன்மையான மகத்துவமுடையது. இந்த வல்லமை ஆத்துமாக்களில் கிரியை செய்து, அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துகிறது.

அப்போஸ்தலர் பவுல் இந்த வல்லமையைப் பற்றிச் சொல்லும்போது, இந்த வல்லமையானது மகா மேன்மையான மகத்துவமுடையது என்று குறிப்பிடுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இப்படிப்பட்ட மகா மேன்மையான மகத்துவமுடைய வல்லமையையே வெளிப்படுத்துகிறார். தேவனானவர் இந்த வல்லமையினால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அவரிடத்தில் தமது பலத்த சத்துவத்தின் வல்லமையை நடப்பித்தார். கர்த்தரானவர் அவரை விசுவாசிக்கிற நம்மிடத்திலும், இப்படிப்பட்ட பலத்த சத்துவத்தின் வல்லமையையே காண்பிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமையினால், சுவிசேஷத்தின் சத்தியம், இந்த உலகத்தில் நிரூபிக்கப்படுகிறது. கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுடைய ஜீவியத்தில், தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமையினால், பல மாற்றங்கள் உண்டாகிறது. இவை சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு சாட்சி பகருகிறது. தேவனுடைய வல்லமை கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிற்று. அதுபோலவே, அதே வல்லமை, பாவத்தில் மரித்துப்போயிருக்கிற நம்மை, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள, உயிரோடு எழுப்புகிறது. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே வல்லமையே, அவரை விசுவாசிக்கிற நம்மிடத்திலும் கிரியை செய்கிறது. தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமையினால் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தின் முடிவுரையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி விவரமாக எழுதுகிறார். அவர் உன்னதங்களில் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். பிதாவானவர், எல்லாவற்றையும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் அவரையே தலையாக நியமித்திருக்கிறார். இது பிதாவானவர் தம்முடைய குமாரனுக்குக் கொடுத்திருக்கிற ஈவு. கிறிஸ்துவின் மூலமாய் இந்த ஈவு அவருடைய சபைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபைக்கு கிறிஸ்து தலையாகயிருக்கிறார். எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தப்பட்டிருக்கிறது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார். எல்லாவற்றையும் அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவரே சரீரமான சபைக்கு, எல்லாவற்றிற்கும் மேலான தலையாகயிருக்கிறார். தேவனுடைய தெய்வீக வல்லமை பலத்த சத்துவமுள்ளது. அது இந்த உலகத்தில் சர்வவல்லமையோடு கிரியை நடப்பிப்பதுபோல, சபைக்குள்ளும் கிரியை நடப்பிக்கிறது. சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. ஆகையினால் தேவன் சரீரமாகிய சபையை நேசிக்கிறார். சபையை பாதுகாக்கிறார். சபையை பராமரிக்கிறார். தேவன் எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர். எல்லாவற்றிற்கும் நிறைவாக சரீரமான சபை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சபைக்கு, பிதாவானவர், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளியிருக்கிறார்.

BELLWETHER INTERNATIONAL

எபேசியர் - விரிவுரை

EPHESIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர். அவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர். ஆனாலும் சபை இல்லையென்றால், கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியம் குறைவுள்ளவதாகவே இருக்கும். கிறிஸ்துவின் ஊழியத்தை சபையே குறைவில்லாமல் நிறைவுசெய்கிறது. ஒரு

அதுபோலவே சபையில்லாமல் சபைக்குத் தலையில்லை. கிறிஸ்துவானவர் சபைக்குத் தலையாகயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாகயிருக்கிறோம். அவருடைய சரீரமாகிய சபையில் அவயவங்களாகயிருக்கிறோம். நமக்கு கிறிஸ்துவே தலையாகயிருக்கிறார். ராஜ்யமில்லாமல் ராஜா இல்லை.

2 அதிகாரம்

எபேசியர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக மிகவும் பரிதாபமான நிலமையிலிருந்தார்கள் (எபே 2:1-3,11,12). அவர்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு அவர்களுக்குள் மகிமையான மாற்றமுண்டாயிற்று (எபே 2:4-10,13). யூதரும் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட்ட பின்பு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து அநேக சிலாக்கியங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் (எபே 2:14-22). இந்த அதிகாரத்தில் இரட்சிக்கப்படாதவர் களுடைய பரிதாபமான நிலையும், இரட்சிக்கப்பட்டவர்களுடைய ஆசீர் வாதமான நிலையும் விவரிக்கப் பட்டிருக்கிறது.

கோபாக்கினையின் பிள்ளைகள் எபே 2 : 1-3

எபே 2:1. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களா யிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.

எபே 2:2. அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற் கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்.

எபே 2:3. அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

இரட்சிக்கப்படாத ஆத்துமாக்கள் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவைகளாயிருக்கும். பாவங்களில் நிலைத்திருக்கிறவர்கள், தங்கள் பாவங்களில் மரித்தவர்களாகவே இருக்கிறார்கள். பாவம் ஆத்துமாவிற்கு மரணமாயிருக்கிறது. பாவம் எங்கெல்லாம் ஆளுகை செய்கிறதோ, அங்கெல்லாம் ஆவிக்குரிய ஜீவியம் மரித்துப் போன நிலமையிலிருக்கும். பாவத்தில் நிலைத்திருக்கிற அனுபவம், இவ்வுலகத்திற்கு ஏற்றபடி ஜீவிக்கிற அனுபவமாகவே இருக்கிறது.

எபேசியர்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நடந்தார்கள். இந்தப் பிரபஞ்சத்தின் ஜனங்கள் எப்படி நடந்துகொள்வார்களோ அப்படியே எபேசியரும் நடந்து கொண்டார்கள். உலகத்தார் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தார்கள். எபேசியரும் அவர்களைப்போலவே மரித்துப்போன நிலமையிலிருந்தார்கள்.

நாம் சுபாவத்தின்படி பாவத்திற்கும் சாத்தானுக்கும் அடிமைகளாக யிருக்கிறோம். சாத்தான் நம்மை பாவத்தில் கட்டி வைத்திருக்கிறான். இவ்வுலக வழக்கத்திற் கேற்றபடியாக நடக்கிறவர்கள் ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்ற படி நடக்கிறார்கள். துன்மார்க்கர் சாத்தானுக்கு அடிமைகளாகயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியமும் நடத்தையும் சாத்தானுக்கு கீழ்ப்பட்டதாகவே இருக்கும். உலகஜனங்கள் சாத்தானுடைய ஆலோசனையின் பிரகாரம் பாவம் செய்வார்கள். பாவம் செய்கிறவர்கள் சாத்தானுக்கு அடிமைகள். சாத்தான் தன்னுடைய விருப்பத்தின் பிரகாரம் அவர்களை பாவத்தின் பாதையில் வழிநடத்துகிறான். ஆகையினால் அவனுக்கு ஆகாயத்து அதிகாரப்பிரபு என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவன் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற அசுத்த ஆவியாகயிருக்கிறான்.

நல்ல ஆவியானவர் கீழ்ப்படிதலுள்ள ஆத்துமாக்களில் நற்கிரியைகளைச் செய்கிறார். அசுத்த ஆவி துன்மார்க்கரிடத்தில் தீயகாரியங்களைச் செய்கிறது.

நாமெல்லோரும், முற்காலத்திலே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்குள்ளே, நமது மாம்ச இச்சையின்படி நடந்தோம். நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்தோம். நம்முடைய சுபாவத்தின்படி மாம்சத்திற்கு அடிமைகளாகயிருந்தோம். இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாக பாவம் செய்தோம். அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களா யிருந்தோம். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் காணப்படுகிற தீயசுபாவங்கள் நமக்குள்ளும் பிரவேசித்தது. மனுஷனுடைய மாம்சப்பிரகாரமான இச்சைகள் அவனை மாம்சத்திற்கு அடிமைப்படுத்துகிறது. அவன் மாம்ச இச்சையின்படியே நடக்கிறான். தன்னுடைய மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்கிறான். பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறான்.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மாம்ச இச்சையின்படியே நடக்கிறார்கள். தங்கள் மாம்ச சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலவே இருக்கிறார்கள். இதனால் எபேசியரும் மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தார்கள். மனுஷன் மற்றவர்களைப் பார்த்து பாவம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. அவனுடைய மாம்ச சுபாவமே பாவமானதுதான். அவன் தன் மாம்ச இச்சையின்படியே நடந்து பாவத்தில் விழுந்துவிடுகிறான். மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்யும்போது, அவன் பாவத்தை விரும்பிச் செய்கிறான்.

பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை வரும். அவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகளாகயிருக்கிறார்கள். தேவனுடைய தெய்வீக கிருபை நமக்குக் கிடைக்க வில்லையென்றால், நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே இருப்போம். ஆகையினால் கீழ்ப் படியாமையின் பிள்ளைகள் மனந்திரும்பி, தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்ள வேண்டும். தேவகிருபை நமக்குள் பெருகும்போது நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாகயிராமல் தேவனுடைய பிள்ளைகளாகயிருப்போம். அவருடைய மகிமைக்கு சுதந்தரராவோம்.

கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்
எபே 2 : 4-10

எபே 2:4. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே.

எபே 2:5. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

எபே 2:6. கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக,

எபே 2:7. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடே கூட உட்காரவும் செய்தார்.

எபே 2:8. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

எபே 2:9. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல;

எபே 2:10. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்தோம். தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். இது நம்மால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைப் பாராட்டாதபடிக்கு இது நம்முடைய கிரியைகளினால் உண்டானதல்ல (எபே 2:8,9). நம்முடைய இரட்சிப்பு நம்முடைய சுயகிரியைகளினால் உண்டாவதில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு நாம் காரணமல்ல. இது தேவனுடைய ஈவு. நம்முடைய சுயவல்லமையையும், சுயபக்தியையும், சுயசக்தியையும் நினைத்து பெருமைப்பாராட்ட நமக்கு இடமில்லை. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு நம்மிடத்தில் எந்தத் தகுதியுமில்லை. தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார். நம்மிடத்தில் ஏற்பட்டிருக்கிற மனமாற்றத்திற்கு தேவனே காரணம். நம்முடைய மனமாற்றத்திற்கு அவரே ஆரம்பமாகயிருக்கிறார்.

தேவன் தம்முடைய அன்பினால் நம்மை உயிர்ப்பித்திருக்கிறார். அவருடைய அன்பினாலேயே அவருடைய கிருபை நமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்தோம். தேவனோ தம்முடைய அன்பினால் நம்மை நோக்கிப்பார்த்து, தம்முடைய கிருபையினால் நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்திருக்கிறார். நாம் தேவனை விட்டு தூரவிலகியவர்களாகயிருந்தோம். தேவனோ தம்முடைய இரக்கத்தினால் நம்மைச் சேர்த்துக் கொண்டார். தேவனுடைய அன்பே பெரிய அன்பு. அவருடைய இரக்கமே ஐசுவரியமுள்ள இரக்கம்.

நாம் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய ஈவு. மனந்திரும்பிய ஒவ்வொரு பாவியும் இரட்சிக்கப்பட்ட பாவியாகயிருக்கிறார். தேவனுடைய கிருபையே மனுஷரை இரட்சிக்கிறது. தேவனுடைய நன்மையையும் சிலாக்கியத்தையும் பெறுவதற்கு நம்மிடத்தில் எந்தத் தகுதியுமில்லை. ஆனாலும் தேவன் தம்முடைய கிருபையினால் நமக்கு நன்மை செய்கிறார். நமக்கு இரக்கம் காண்பிக்கிறார். அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். அவர் நம்மை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்காமல், தம்முடைய கிருபையினால் இரட்சிக்கிறார். இயேசுகிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம். விசுவாசமும் இரட்சிப்பும் தேவனுடைய ஈவு. சகலமும் தேவனுடைய கிருபையினால் நடைபெறுகிறது. ஆகையினால் தங்களுடைய இரட்சிப்பைக் குறித்து ஒருவரும் பெருமை பாராட்டுவதற்கு இடமில்லை. நம்முடைய இரட்சிப்பு நம்முடைய கிரியைகளினால் உண்டானதல்ல.

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்தோம். தேவனோ தம்முடைய கிருபையினால் நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். தேவனுடைய கிருபை நம்முடைய ஆத்துமாவில் கிரியை செய்கிறது. நம்முடைய ஆத்துமாவுக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறது. மரணம் வரும்போது நம்முடைய சரீரத்தின் அவயவங்களெல்லாம் செயலிழந்துபோகும். எந்த ஒரு அவயவத்திற்கும் ஒரு வல்லமையும் இருக்காது. மரணம் சரீரத்தின் எல்லா அவயவத்தையும் ஆளுகை செய்து அவற்றை செயலிழக்கச் செய்துவிடும். பாவத்தில் மரித்துப்போன மனுஷனால் ஒரு நன்மையும் செய்யமுடியாது.

நம்முடைய தேவனோ தம்முடைய கிருபையினால் மரணத்தின் கட்டுக்களை அவிழ்க்கிறார். அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை உயிர்ப்பிக்கிறார். உயிர்ப்பிக்கப்பட்ட பாவி புதிய ஆத்துமாவாகயிருக்கிறார். இவர் தேவனால் பிறந்திருக்கிறார். மரித்தவர்களாயிருந்த நம்மை, தேவன் தம்முடைய கிருபையினால், கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறோம். கிறிஸ்து ஜீவனுள்ளவர். அவரைப்போலவே நாமும் ஜீவனுள்ளவராயிருக்கிறோம்.

தேவன் தம்முடைய கிருபையினால், கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பினார். நாம் பாவத்தில் மரித்தவர்களாக, பாவத்திற்குள் அடக்கம் பண்ணப் பட்டிருந்தோம். மரித்துப்போன நம்மை தேவன் உயிரோடு எழுப்பியிருக்கிறார். தேவன் இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அப்போது அவரோடுகூட எல்லா பரிசுத்த வான்களையும் உயிரோடு எழுப்பினார். தேவன் இயேசுகிறிஸ்துவை உயிரோடு எழுப்பி, பரலோகத்தில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரச் செய்தார். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மையும் அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்திருக்கிறார்.

நாம் பாவத்தில் பிறந்தவர்கள். மண்ணினால் உருவாக்கப்பட்டவர்கள். ஆனாலும் தேவன் நம்முடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதி, நம்மை ஜீவாத்துமாவாக ஆக்கியிருக்கிறார். நாமோ பாவம் செய்து, நம்முடைய பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்தவர்களாயிருந்தோம். தேவனோ நம்மை உயிரோடே எழுப்பியிருக்கிறார். நம்முடைய ஆத்துமாக்களைப் பரிசுத்தப் படுத்தியிருக்கிறார். பரிசுத்தப்படுத்தப் பட்டிருக்கிற ஆத்துமாக்கள் உன்னதங்களிலே இயேசுகிறிஸ்துவோடு கூட உட்காரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த உலகத்தின் மேன்மை பரலோகத்தின் மேன்மைக்கு ஒப்பானதல்ல. இந்த உலகத்தில் நமக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும், ஐசுவரியங்கள் இருந்தாலும் இவையெல்லாம் பரலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கு ஒப்பானதல்ல. நாம் பரலோகத்திலே இயேசு கிறிஸ்துவோடு உட்கார்ந்து, அவரோடுகூட ஆளுகையும் செய்வோம். கர்த்தருக்குப் பிரியமானவர்கள் பரலோகத்தில் இயேசு கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்வார்கள்.

அக்கிரமங்களினால் மரித்த வர்களாயிருந்த நம்மை இயேசு கிறிஸ்துவோடு உயிர்ப்பிப்பது தேவனுடைய தெய்வீக சித்தம். அவருடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக மனுக் குலத்திற்கு இரட்சிப்பு உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்யவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதற்காகவே தேவன், கிறிஸ்து இயேசுவுக்குள், நம்மிடத்தில் தயவை வைத்திருக்கிறார். நம்முடைய இரட்சிப்பின் மூலமாய் தேவனுடைய தயவும், கிருபையும், இரக்கமும் நிரூபிக்கப்படுகிறது. வருங்காலங்களில், தேவனுடைய தயவினாலே, இரட்சிக்கப்பட முடியும் என்னும் விசுவாசம் பாவிகளாக யிருக்கிறவர்களுக்குள் உண்டாகும்.

தேவன் தம்முடைய தயவினாலும் கிருபையினாலும் நம்மை இரட்சிக்கிறார். நம்முடைய இரட்சிப்பு மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட முடியும் என்னும் நம்பிக்கை அவர்களுக்குள்ளும் உண்டாகிறது. நம்முடைய இரட்சிப்பின் மூலமாய் மற்றவர்களும் தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. தேவனுடைய கிருபையினால், பாவிகளாகயிருக்கிற அவர்களும், இரட்சிக்கப்பட முடியும் என்னும் நம்பிக்கையும் உற்சாகமும் அவர்களுக்குள் உண்டாகிறது.

அக்கிரமங்களில் மரித்தவர்களாக யிருந்த நம்மை, தேவன் தம்முடைய கிருபையினால், கிறிஸ்து இயேசுவுக்குள் உயிர்ப்பித்தார். நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். நற்கிரியைகளைச் செய்வதற்காகவே நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக சாதாரண மனுஷர்களாக மாத்திரமல்ல, தேவனுடைய பார்வையில் பரிசுத்த வான்களாகவும் இருக்கிறோம். இரட்சிக்கப்பட்ட மனுஷன் புதிய சிருஷ்டியாக இருக்கிறான். தேவனே நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டித்திருக்கிறார். தேவன் நமக்காக செய்திருக்கிற பாவநிவாரண பிராயச்சித்தத்தின்படியே, தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டித்திருக்கிறார்.

நாம் நற்கிரியைகளைச் செய்ய வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இதற்காகவே தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டித்திருக்கிறார். நாம் நற்கிரியைகளில் நடக்கும்படி, தேவன் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியுமிருக்கிறார். நாம் நற்கிரியைகளில் நடக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இதனால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். நம்முடைய மனமாற்றத்தினாலும், நம்முடைய பரிசுத்தத்தினாலும் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். "நற்கிரியைகளில் நடப்பது" என்பதற்கு, "நம்முடைய பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வது" என்று பொருள். இரட்சிக்கப்பட்ட நாம் கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். நம்முடைய பேச்சும் செயலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். அவை கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். மறுபடியும் பிறந்தவர்களாகிய நாம் நற்கிரியைகளை மாத்திரம் செய்ய வேண்டும்.

விருத்தசேதனமில்லாதவர்கள்
எபே 2 : 11-13

எபே 2:11. ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப் படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப் பட்ட நீங்கள்,

எபே 2:12. அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமா யிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்.

எபே 2:13. முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

எபேசியர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு மிகவும் பரிதாபமான நிலமையிலிருந்தார்கள். அக்கிரமங் களினாலும் பாவங்களினாலும் அவர்கள் மரித்தவர்களாயிருந்தார்கள். முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்தார்கள். விருத்தசேதனமுள்ளவர்கள் எபேசியரை விருத்தசேதனமில்லாதவர்கள் என்று எண்ணினார்கள். இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக தாங்கள் இருந்த பரிதாபமான நிலமையை எபேசியர்கள் நினைத்துக் கொள்ளவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள், தேவனுடைய கிருபையினால் தாங்கள் இரட்சிக்கப்பட்டதை மறந்துவிடக் கூடாது. தங்களுடைய பழைய பாவசுபாவத்திலிருந்து தேவன் தங்களை விடுவித்து இரட்சித்ததை நினைத்துக் கொள்ளவேண்டும்.

எபேசியர்கள் மாம்சத்தின்படி முன்னே புறஜாதியாராயிருந்தார்கள். பாவத்திலும் அக்கிரமத்திலும் ஜீவித்தார்கள். யூதர்கள் மாம்சத்தில் கையினாலே விருத்தசேதனம் செய்து கொண்டார்கள். அவர்கள் எபேசியரை விருத்தசேதனமில்லாதவர்களென்று அற்பமாய் எண்ணினார்கள். எபேசியரை புறஜாதியார் என்று சொல்லி ஒதுக்கித் தள்ளினார்கள். அவமானப்படுத்தினார்கள். தேவனற்றவர்கள் என்று சொல்லி அவர்களை விலக்கி வைத்தார்கள். முன்னே மாம்சத்தின்படி எபேசியர்கள் புறஜாதியாராயிருந்தார்கள்.

முன்னே எபேசியருக்குள் இயேசு கிறிஸ்து வாசம் பண்ணவில்லை. அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை. அவர்களுக்கு தேவனோடு ஐக்கியமில்லை. கிறிஸ்து இல்லாமல் ஜீவிக்கிற ஆத்துமா மிகவும் பரிதாபமான நிலமையிலிருக்கும். கிறிஸ்துவைச் சேராதவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் சபையைச் சேராதவர்கள். கிறிஸ்துவின் சபையில் ஐக்கியமாகயிருப்பது சபையாருக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். சபையில் அங்கம் வைத்திருக்கும் போது, தேவனுடைய பெரிதான ஆசீர்வாதங்களுக்கு அவர்கள் சுதந்தரராயிருக்கிறார்கள்.

கிறிஸ்துவைச் சேராதவர்கள் வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராயிருக்கிறார்கள். கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களோடு மாத்திரமே தேவன் உடன்படிக்கை பண்ணுகிறார். கிறிஸ்துவைச் சேராதவர்களுக்கு தேவனுடைய வாக்குத் தத்தத்தின் உடன் படிக்கையில் பங்குமில்லை பாத்தியமுமில்லை. எபேசியர்கள் முன்னே கிறிஸ்துவைச் சேராதவர்கள். ஆகையினால் அவர்களும் வாக்குத் தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராகவே இருந்தார்கள்.

கிறிஸ்துவைச் சேராதவர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் வாக்குத்தத்திற்கும் அந்நியர்கள், நம்பிக்கையும் அற்றவர்கள். அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்து அவர்களுக்கு எந்தவிதமான நல்ல நம்பிக்கையுமில்லை. அவர்கள் தேவனால் கைவிடப்பட்டவர்கள் போல இருந்தார்கள். இந்த உலகத்திலே தேவனற்றவர்களாயிருந்தார்கள். இந்த உலகத்தில் அவர்கள் நாஸ்திகரைப்போல இருந்தார்கள். அவர்கள் ஏராளமான தெய்வங்களை வழிபட்டாலும், அவை உண்மையான தெய்வமல்ல. அவர்களிடத்தில் பக்தியிருந்தாலும், அது ஒன்றான மெய்த்தேவனிடம் காண்பிக்கப்படுகிற பக்தியல்ல. ஆகையினால் அவர்கள் தேவனற்றவர்களாகவே இருந்தார்கள்.

முன்னே தேவனுக்கு தூரமாயிருந்த எபேசியர்கள், இப்போது கிறிஸ்து இயேசுவுக்குள், கிறிஸ்துவின் இரத்தத்தினால், சமீபமாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிற்று. அவர்கள் கிறிஸ்துவை விட்டும், தேவனை விட்டும், தேவனுடைய எல்லா நன்மைகளை விட்டும், தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களை விட்டும் தூரமாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ கிறிஸ்து இயேசுவுக்குள் சமீபமாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய ஜனங்களுக்கு உதவி செய்கிறார். இந்த உதவி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாயிற்று. தேவனுக்கு சமீபமாயிருக்கிற ஒவ்வொரு விசுவாசியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், பாவநிவாரணபலிக்கும், அவருடைய திருஇரத்தத்திற்கும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே, முன்னே தேவனுக்குத் தூரமாயிருந்த நாம், இப்போது சமீபமாயிருக்கிறோம்.

விசுவாசிகளின் சிலாக்கியங்கள்
எபே 2 : 14-22

எபே 2:14. எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,

எபே 2:15. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி,

எபே 2:16. பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

எபே 2:17. அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.

எபே 2:18. அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.

எபே 2:19. ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

எபே 2:20. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;

எபே 2:21. அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;

எபே 2:22. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து, இரட்சிக்கப்பட்ட யூதரும் புறஜாதியாரும் மேன்மையான அநேக சிலாக்கியங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். பகையாக நின்றவர்கள் இப்போது ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே நம்முடைய சமாதானமாகவும், சமாதானக் காரணராகவும் இருக்கிறார். அவர் நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணி, நம்மை தேவனோடு ஒப்புரவாக்கினார்.

இயேசு கிறிஸ்துவின் மூலமாய் யூதருக்கும் புறஜாதியாருக்கும் சமாதானம் உண்டாயிற்று. இவ்விருதிறத்தாரும் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தகர்த்துப் போட்டார். நியாயப் பிரமாணமானது இங்கு "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தேவாலயத்தில் யூதரையும் புறஜாதியாரையும் பிரிக்கிற நடுச்சுவருக்குச் சமமானது.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் புறஜாதியாருக்கு தனிப்பிரகாரமும், யூதருக்குத் தனிப்பிரகாரமும் இருக்கும். யூதருக்குரிய பிரகாரத்தில் யூதர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். புறஜாதியார் அந்தப் பிரகாரத்தில் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்துப் போட்டார். யூதரையும் புறஜாதியாரையும் ஒன்றாக்கினார். இருவருக்கும் பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்துப்போட்டார்.

இயேசுகிறிஸ்து இவற்றை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார். தம்முடைய மாம்சத்தில் பாடுகளை அனுபவித்து, தம்முடைய சரீரத்தை சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுத்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை ஒழித்தார். இனிமேல் மனுஷனை அடிமைப்படுத்த நியாயப்பிரமாணத்திற்கு அதிகாரமில்லை. இயேசு கிறிஸ்து யூதரையும் புறஜாதியாரையும் ஒன்றாக்கியிருக்கிறார். இவ்விருதிறத் தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, சமாதானம் பண்ணியிருக்கிறார்.

பாவிகள் யூதராகயிருந்தாலும் புறஜாதியாராகயிருந்தாலும் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக அவருக்கு சத்துருக்களாகயிருக்கிறார்கள். தேவனுடைய பரிசுத்தத்திற்கு பகைவர்களாக இருக்கிறார்கள். இவ்விருதிறத்தாரும் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். பாவிகளாயிருக்கிற யூதரையும் புறஜாதியாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்குகிறார்.

மனுஷனுடைய பாவத்தினால் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே பகை உண்டாயிற்று. அந்தப் பகையை கிறிஸ்து தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே சமாதானம் உண்டுபண்ணுவதற்கு இயேசு கிறிஸ்து காரணரானார். தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவிலிருந்த பகையை இயேசுகிறிஸ்து சிலுவையினால் கொன்றார். இதனால் யூதருக்கும் புறஜாதியாருக்கும் அநேக அநுகூலங்கள் உண்டாயிற்று. இவ்விருதிறத்தாருக்கும் அநேக சிலாக்கியங்கள் கிடைத்தது.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷனாக அவதரித்த போது, அவர் யூதமார்க்கத்தைச் சேர்ந்த சந்ததியிலிருந்து வந்தார். இதனால் யூதர்கள் கிறிஸ்துவுக்கு சமீபமாயிருந் தார்கள். அவர் புறஜாதியாருக்குத் தூரமாயிருந்தார். புறஜாதியார் கிறிஸ்துவுக்குத் தூரமாயிருந்தாலும், அவர் அவர்கள் மத்தியில் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிக்கிற ஊழியக் காரராக வந்தார்.

இவ்வறாக இயேசு கிறிஸ்து தூரமாயிருந்த புறஜாதியாருக்கும், சமீபமாயிருந்த யூதர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவித்தார். இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தினால் மனுஷருக்கும் தேவனுக்கும் இடையில் இருந்த பகை நீங்கிற்று. சமாதான முண்டாயிற்று. இவ்விருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பெற்றிருக்கிறார்கள்.

நாம் தேவனுடைய சமுகத்தில் வரவேண்டுமென்பதற்காகவே, கிருபாசனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிருபாசனத்தில் சேரும் சிலாக்கியத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். நம்முடைய பாவங்களுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய திருஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தி நம்மை மீட்டுக் கொண்டார். இதனால் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை கிறிஸ்து மூலமாய் நாம் பெற்றிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவரே பிதாவினிடத்தில் சேர வாஞ்சிக்கும் இருதயத்தை நமக்குக் கொடுக்கிறார். அந்த ஒரே ஆவியினாலே நாம் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை கிறிஸ்துவின் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்து நம்மை தேவனுக்கு ஒப்புரவாக்கியிருக்கிறார். ஆகையினால் நாம் இனி அந்நியரோ அல்லது பரதேசிகளோ அல்ல. இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு புறம்பானவர்களல்ல. வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் அல்ல. நாம் இனி நம்பிக்கையில்லாதவர்களல்ல. நாம் இந்த உலகத்தில் தேவனற்றவர்களுமல்ல.

நாம் பரிசுத்தவான்களுடைய ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறோம். கர்த்தருடைய சபை ஒரு நகரத்தோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு பரிசுத்தவானும் அந்த நகரத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். பரிசுத்த வான்களெல்லாரும் ஒரே நகரத்தாராக இருக்கிறோம். ஒரே வீட்டாராக யிருக்கிறோம். தேவனுடைய வீட்டில் நாமெல்லோருமே ஊழியக்காரராகவும், தேவனுடைய பிள்ளைகளாகவும் இருக்கிறோம்.

அந்த மாளிகைக்கு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அஸ்திபாரங்களாகயிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலைக் கல்லாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் அந்த மாளிகையை தம்முடைய பெலத்தினால் தாங்குகிறார். கிறிஸ்துவின் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் எல்லா பரிசுத்த வான்களும் விசுவாசத்தினால் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறார்கள். பரிசுத்த ஆலயத்தில் தேவனோடும், அவருடைய பரிசுத்தவான்களோடும் நெருங்கிய ஐக்கியம் உண்டாயிருக்கும். தேவனுடைய ஆலயத்தில் அவருடைய நாமம் பிரஸ்தாபப்படுத்தப்படும். தேவனுடைய ஆலயத்தில் அவருடைய கிருபையும் பெலமும் நிறைந்திருக்கும்.

பரிசுத்த ஆலயம் கர்த்தருக்குள் கட்டப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் மேல், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும், தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டி கட்டப்பட்டு வருகிறோம். தேவன் எல்லா விசுவாசிகளுடைய இருதயத்திலும் இப்போது வாசம்பண்ணுகிறார். நாம் தேவனோடு நித்தியகாலமாக வாசம் பண்ணுவோம் என்பதற்கு, தேவன் இப்போது நமக்குள் வாசம்பண்ணுவது அச்சாரமாகயிருக்கிறது.

3 அதிகாரம்

எபேசியர் மூன்றாம் அதிகாரம் இரண்டு பிரிவாக எழுதப்பட்டிருக்கிறது. முதலாவது பகுதியில் அப்போஸ்தலர் பவுல் எபேசியருக்கு தன்னைப்பற்றிய விவரங்களை எழுதுகிறார் (எபே 3:1-13). இரண்டாவது பகுதியில் அவர் எபேசியருக்காக கர்த்தரிடத்தில் கருத்தாய் வேண்டிக்கொள்கிறார் (எபே 3:14-21). இந்த நிருபத்தில் பவுல் எபேசியருக்குச் சொல்லுகிற ஆலோசனைகளும், அறிவுரைகளும், அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிற ஜெபமும் இடம்பெற்றிருக்கிறது. நம்முடைய உபதேசத்தில் தேவனுடைய கிருபையும் அநுக்கிரகமும் நிறைந்திருக்கவேண்டும். தேவன் நமக்கு ஒத்தாசை செய்யவில்லையென்றால் நம்முடைய பிரயாசமெல்லாம் வீணாய்ப்போய்விடும்.

பவுலாகிய நான்
எபே 3 : 1-13

எபே 3:1. இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்.

எபே 3:2. உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வகிருபைக்குரிய நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே;

எபே 3:3. அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமா யிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

எபே 3:4. இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

எபே 3:5. அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்.

எபே 3:6. இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.

எபே 3:7. தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன்.

எபே 3:8. பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

எபே 3:9. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே,

எபே 3:10. உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங் களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,

எபே 3:11. இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

எபே 3:12. அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்கு தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.

எபே 3:13. ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே.

அப்போஸ்தலர் பவுல் அநேக பாடுகளையும் வேதனைகளையும் சகித்துக்கொள்கிறார். தன்னுடைய பாடுகளைப்பற்றிச் சொல்லும்போது, "இதினிமித்தம்" தான் பாடுகளை அனுபவிப்பதாக இந்த நிருபத்தில் எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் யூதருக்கும், புறஜாதியாருக்கும் பொதுவானது. விசுவாசிக்கிறவர்களெல்லோருமே கிறிஸ்துவின் மூலமாய் ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்போஸ்தலர் பவுல் புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறார். யூதர்கள் பவுலின் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களுக்கு விரோதமாக அவர் உபதேசிக்கிறார் என்று யூதர்கள் பவுலின்மீது குற்றம் சொன்னார்கள். இதினிமித்தம் பவுலுக்கு அநேகப்பாடுகள் உண்டாயிற்று. அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய பாடுகளைப்பற்றிச் சொல்லும்போது "இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டு கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுல் கட்டுண்டவராகயிருக்கிறார். பவுல் எபேசியருக்கு எழுதின இந்த நிருபத்தை சிறைச்சாலையிலிருந்து எழுதியதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பவுல் கட்டுண்டவராகயிருக்கிறார். இந்தக் கட்டு கிறிஸ்து இயேசுவினிமித்தம் அவருக்கு உண்டாயிற்று. கிறிஸ்துவினுடைய ஊழியக்காரர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்படும்போது, தாங்கள் கிறிஸ்து இயேசுவினிமித்தம் சிறைச்சாலைகளில் கட்டுண்டவர்களாக இருப்பதாக நினைத்துக் கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இப்போது சிறைச்சாலையிலிருக்கிறார். அவர் சிறையிலிருந்தாலும் கிறிஸ்துவைப்பற்றிக் கொள்கிறார். கிறிஸ்துவும் பவுலைக் கைவிட்டுவிடாமல், பவுலை தம்முடைய பிள்ளையாக அங்கீகரிக்கிறார். பவுல் புறஜாதியாராயிருக்கிறவர்களுக்கு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதினால் அவருக்கு கட்டுக்கள் உண்டாயிற்று. பவுல் நன்மை செய்ததினால் பாடுகளை அனுபவிக்கிறார். கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள், தங்களுக்கு எவ்வளவு துன்பங்கள் வந்தாலும், சத்தியத்தை விசுவாசத்தோடு அறிக்கை செய்யவேண்டும்.

பவுல் தன்னுடைய பாடுகளைப்பற்றி இந்த நிருபத்தில் மறுபடியுமாக இவ்வாறு சொல்லுகிறார். "ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அனுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்து போகாதிருக்க வேண்டிக்கொள்கிறேன். அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே" (எபே 3:13). பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த போது அவர் அங்கு அநேக உபத்திரவங்களை அனுபவித்தார். உபத்திரவத்தினால் பவுல் சோர்ந்து போகவில்லை. தேவன் தனக்குக் கொடுத்த ஊழியத்தை நிறுத்திவிடவில்லை.

கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினிமித்தம், தனக்கு எப்படிப்பட்ட உபத்திரவங்கள் வந்தாலும், அப்போஸ்தலர் பவுல் அவற்றை பொறுமையோடு சகித்துக்கொள்கிறார். உபத்திரவங்கள் மத்தியிலும் அவர் சோர்ந்து போகாமலிருக்கிறார். தன்னுடைய உபத்திரவங்கள் எபேசியருக்கு மகிமையாயிருப்பதாகக் குறிப்பிடுகிறார். ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக தேவன் தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்புகிறார். அதே வேளையில் தம்முடைய அப்போஸ்தலர்களை அவர்களுக்காக பாடுகளை அனுபவிக்கவும் அனுமதிக்கிறார்.

தேவனுடைய விசேஷித்த வெளிப்பாடு பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தம்முடைய விசேஷித்த வெளிப்பாட்டினால் தேவன் பவுலை தம்முடைய ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார். புறஜாதியாருக்காக, பவுலுக்கு தேவனுடைய கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. பவுலுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வ கிருபைக்குரிய நியமம் இன்னதென்று அவர்களும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பவுல் சுவிசேஷத்தைப்பற்றிச் சொல்லும்போது, அதை "தெய்வ கிருபை" என்று சொல்லுகிறார். ஏனெனில் சுவிசேஷமானது, பாவத்திலிருக்கிற மனுஷருக்கு தேவனுடைய கிருபையினால் ஈவாக கிடைத்திருக்கிறது. சுவிசேஷம் மனுஷருக்கு கிடைத்திருக்கிற தேவ ஈவு. மனுஷர் தங்கள் சுயமுயற்சியினால் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

ஆவியானவர் தம்முடைய கரங்களில் சுவிசேஷத்தை வல்லமையான கருவியாகப் பயன்படுத்துகிறார். சுவிசேஷத்தின் மூலமாய், தேவகிருபையானது, மனுஷருடைய ஆத்துமாக்களில் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிறது. தேவனுடைய பலத்த சத்துவத்தால் பவுலுக்கு தேவகிருபை வரமாக அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிருபையினாலே பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரராயிருக்கிறார் (எபே 3:7).

"சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன்" என்று தமிழ் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மூலபாஷையின் அர்த்தத்தின்படி, இந்த வார்த்தையை "சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனாக்கப்பட்டேன்" என்று மொழிபெயர்க்கவேண்டும். பவுல் தானாக ஊழியக்காரராகிவிடவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால், இந்தச் சுவிசேஷத்திற்கு, அவர் ஊழியக் காரராக்கப்பட்டிருக்கிறார். பவுல்செய்ய வேண்டிய சுவிசேஷ ஊழியத்திற்கு தேவனே அவரை பலப்படுத்துகிறார். அவருக்குக் கிருபைகளைக் கொடுக்கிறார். அவரை ஆதரிக்கிறார். தேவனுடைய பலத்த சத்துவத்தால் பவுல் ஊழியக்காரராக்கப்பட்டிருக்கிறார்.

பவுலுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிற எல்லா ஊழியக்காரர்களுக்கும், தேவனுடைய பலத்த சத்துவத்தால் தெய்வகிருபை அளிக்கப்படுகிறது. தேவன் மனுஷரை எந்த ஊழியத்திற்கு அழைக்கிறாரோ, அந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களைத் தகுதிப்படுத்துகிறார். தம்முடைய பலத்த சத்துவத்தினால் தம்முடைய ஊழியக்காரர் மத்தியில் கிரியை நடப்பிக்கிறார்.

தேவன் தம்முடைய விசேஷித்த வெளிப்பாட்டினால், அப்போஸ்தலர் பவுலை ஊழியத்திற்குத் தகுதிப்படுத்துகிறார். புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு உடன் சுதந்தரராயிருக்கிறார்கள். அவர்கள் ஒரே சரீரத்திற்கு உள்ளானவர்களாயிருக்கிறார்கள். தேவன் கிறிஸ்துவுக்குள் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு புறஜாதிகளும் உடன்பங்காளிகளாயிருக்கிறார்கள். இந்த இரகசியத்தை தேவன் பவுலுக்கு வெளிப்படுத்தி அறிவித்திருக்கிறார். புறஜாதியாருக்காக பவுலுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வகிருபைக்குரிய நியமமும் இதுதான் (எபே 3:3). தேவன் இந்தச் சத்தியத்தை தம்முடைய அப்போஸ்தலருக்கு அறிவித்திருக்கிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷ சபையில் யூதரும் புறஜாதியாரும் சமமாய் இணைக்கப்படுவது மிகப்பெரிய இரகசியம். இந்தச் சத்தியம் இங்கு "இரகசியம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்தச் சத்தியமானது இதுவரையிலும் தேவனுடைய இருதயத்தில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. தேவன் இதுவரையில் இந்த இரகசியத்தை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. இந்த இரகசியம் "கிறிஸ்துவின் இரகசியம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த தெய்வீக இரகசியம் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டு, அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த இரகசியத்தில் கிறிஸ்துவுக்கு முக்கிய பங்குண்டு.

தேவன் கிறிஸ்துவுக்குள் பண்ணின வாக்குத்தத்திற்கு புறஜாதிகளும் உடன்பங்காளிகளாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை கிறிஸ்துவுக்குள் பண்ணியிருக்கிறார். தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், தம்முடைய இரகசியத்தை கிறிஸ்துவின் மூலமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து பவுல் எபேசியருக்கு ஏற்கெனவே சுருக்கமாக எழுதியிருக்கிறார். அதை அவர்கள் வாசித்திருக்கலாம். அதை வாசிக்கையில், கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து, பவுலுக்கு உண்டாயிருக்கிற அறிவை அவர்கள் அறிந்துகொள்ளலாம். சத்திய வசனத்தை வாசித்தால் மாத்திரம் போதாது. அதன் இரகசியத்தை நாம் அறிந்துகொள்ளவும் வேண்டும்.

கிறிஸ்துவின் இரகசியம் இப்போது அவருடைய அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரகசியம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை (எபே 3:6).

கிறிஸ்துவின் இரகசியமானது நீண்டகாலமாகவே மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படாமல், இரகசியமாகவே இருந்தது. இந்த இரகசியம் வெளிப்படுத்தப்படும் வரையிலும், மனுபுத்திரர் இந்த இரகசியத்தை அறிந்துகொள்ளாமல், ஆவிக்குரிய இருளிலிருந்தார்கள். இந்த இரகசியம் தங்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆகையினால் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு தாங்கள் மாத்திரமே சுதந்தரவாளிகளென்று யூதர்கள் நினைத்தார்கள். தேவன் கிறிஸ்துவுக்குள் பண்ணின வாக்குத்தத்தங்களுக்கு புறஜாதிகள் உடன்பங்காளிகள் என்னும் இரகசியத்தை அவர்கள் உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களுடைய பாரம்பரியமான பழக்க வழக்கங்களிலும், உபதேசங்களிலும் யூதர்கள் தரித்திருந்தார்கள். தேவனுடைய இரகசியத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

அப்போஸ்தலர் பவுலுக்கு கிறிஸ்துவின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரகசியத்தை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தேவன் தனக்கு வெளிப்படுத்தியிருக்கிற இரகசியத்தை, பவுல் மனுபுத்திரருக்கு உண்மையாய் உபதேசம்பண்ணுகிறார். இதினிமித்தம், புறஜாதியாராயிருக்கிற அவர்கள் பொருட்டு, கிறிஸ்து இயேசுவினிமித்தம், பவுல் கட்டுண்டவராக சிறைச்சாலையிலிருக்கிறார். இதற்காக அவர் சோர்ந்துபோய்விடவில்லை. தேவனுடைய இரகசியம் அறிவிக்கப்படுவதற்கு எந்த மனுஷனும் தகுதியுள்ளவரல்ல. தேவன் தம்முடைய கிருபையினாலேயே, தம்முடைய இரகசியத்தை, இப்பொழுது மனுபுத்திரருக்கு அறிவிக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் மற்ற அப்போஸ்தலரோடு தன்னை ஒப்பிட்டுச் சொல்லுகிறார். கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து பவுலுக்கு அறிவு உண்டாயிருக்கிறது. புறஜாதியாரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் அவருடைய ஆசீர்வாதங்களுக்கு, யூதரோடு உடன் சுதந்தரராயிருக்கிறார்கள். ஒரே சரீரத்திற்குள்ளானவர்களாயிருக்கிறார்கள். தேவன் கிறிஸ்துவுக்குள் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு, புறஜாதியாரும் யூதரோடு உடன் பங்காளிகளாயிருக்கிறார்கள். இந்த இரகசியம் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரகசியத்தைப் பெற்றுக்கொள்வது மிகப்பெரிய சிலாக்கியம். ஆனால் பவுலோ தன்னை தாழ்த்துகிறார். பரிசுத்தவான்கள் எல்லாரிலும் தான் சிறியவனென்று தன்னைப்பற்றி தாழ்மையாக அறிக்கை செய்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறார். இதற்காகவே பவுலுக்கு தேவனுடைய கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல், அப்போஸ்தலரெல்லாரிலும் பிரதானமானவர். ஆனால் அவரோ தான் பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவனென்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். பெருமையுள்ளவருக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவருக்கோ அவர் தம்முடைய கிருபையைக் கொடுக்கிறார். பவுல் தன்னுடைய ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறார். தன்னையோ தாழ்த்துகிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி சொல்லும்போது, "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம்" என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவில் கிருபை, இரக்கம், அன்பு ஆகியவை அளவற்ற ஐசுவரியமாக நிரம்பி வழிகிறது. இவை யூதருக்கும் கிடைக்கும். புறஜாதியாருக்கும் கிடைக்கும். கிறிஸ்துவின் ஐசுவரியம் அளவற்றது. அதை யாராலும் அளந்து பார்க்கமுடியாது. அதன் ஆழம் எவ்வளவு என்று யாராலும் அளந்து சொல்ல முடியாது. கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிப்பதுதான் அப்போஸ்தலருடைய ஊழியம்.

புறஜாதிகளிடத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கிற கிருபை தனக்கு அளிக்கப்பட்டிருப்பதாக பவுல் தாழ்மையோடு சொல்லுகிறார். பரிசுத்தவான்கள் எல்லாரிலும் தான் சிறயவனாகயிருந்தாலும், இந்தக் கிருபை தனக்கு அளிக்கப்பட்டிருப்பதாக, பவுல் தாழ்மையோடு அறிவிக்கிறார். இந்தச் சிலாக்கியம் பவுலுக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைக் கேள்விப்படுகிற பாக்கியம் புறஜாதியாருக்கும் கிடைத்திருக்கிறது.

நாம் இப்பிரபஞ்சத்தில், உலகப்பிரகாரமாக ஏழைகளாகயிருக்கலாம். ஆனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும்போது, கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்திற்கு நாமும் பங்காளிகளாகயிருக்கிறோம். இந்த ஐசுவரியத்தை நாம் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், கிறிஸ்து இதை நமக்குக் கொடுக்கவில்லை என்பது பொருளல்ல. அவர் தம்முடைய அளவற்ற ஐசுவரியத்தை நமக்குக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். நாமோ அதைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. கிறிஸ்துவின் ஐசுவரியத்தை நாம் பெற்றுக்கொள்ளவில்லையென்றால் அது நம்முடைய தவறு.

தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் கிறிஸ்துவைப்பற்றி இரகசியம் மறைந்திருந்தது. இந்த இரகசியம் இப்பொழுது தேவனுடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த இரகசியம் இன்னதென்றும், தேவனுக்குள் ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்றும், பவுலுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த இரகசியத்தை எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை தனக்கு அளிக்கப்பட்டிருப்பதாக பவுல் அறிக்கை செய்கிறார் (எபே 3:11).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதரையும் புறஜாதியாரையும் இரட்சிக்கிறார். இயேசுகிறிஸ்து உலக இரட்சகர். பட்சபாதம் பார்க்கிறவரல்ல. தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்திருக்கிறார். யூதரையும் புறஜாதியாரையும் சிருஷ்டித்திருக்கிறார். தேவனுடைய அநந்த ஞானமானது, இப்பொழுது, சபையின் மூலமாய் உன்னதங்களிலுள்ள துரைத் தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய தெய்வீக சித்தம் (எபே 3:10).

தேவனுடைய ஞானம் அநந்தமானது. அவருடைய ஞானத்திற்கு அளவேயில்லை. அவர் எல்லா காலங்களையும் நிதானித்து அறிந்திருக்கிறார். எல்லாவற்றையும் சிருஷ்டித்திருக்கிறார். சபையையும் ஸ்தாபித்திருக்கிறார். தம்முடைய ஞானத்தை சபையின் மூலமாய் அறிவிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களும் அதிகாரங்களும், தேவனுடைய அநந்த ஞானத்தை, சபையின் மூலமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே தேவன் இயேசுகிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானம் (எபே 3:9).

அப்போஸ்தலர் பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை போற்றிப் புகழுகிறார். தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டே எல்லாவற்றையும் சிருஷ்டித்ததாக அறிக்கை செய்கிறார். தேவன் தம்முடைய அநாதி தீர்மானங்களை இயேசுகிறிஸ்துவுக்குள் கொண்டிருந்தார். பவுல் இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடு பற்றிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குள் பவுலுக்கு தைரியமும், திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிற்று.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கு தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் உண்டாயிருக்கிறது. தேவனை “அப்பா பிதாவே” என்று அழைக்கிற சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்தச் சிலாக்கியமும், தைரியமும், திடநம்பிக்கையும் நமக்கு இயேசுகிறிஸ்துவுக்குள் உண்டாயிருக்கிறது. தேவனிடத்தில் வரும்போது நாம் மனத்தாழ்மையோடும், அதே வேளையில் தைரியத்தோடும் வரலாம். தேவனுடைய சமுகத்திலிருந்து நமக்கு ஆறுதலைக் கொடுக்கிற நல்ல வார்த்தைகளைப் பெற்றுக் கொள்ளலாமென்று நம்பிக்கையோடு வரலாம். இந்த நம்பிக்கை கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயிருக்கிறது.

வேண்டிக்கொள்ளுகிறேன்
எபே 3 : 14-21

எபே 3:14. இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய,

எபே 3:15. நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு,

எபே 3:16. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,

எபே 3:17. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,

எபே 3:18. சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;

எபே 3:19. அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

எபே 3:20. நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,

எபே 3:21. சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்காக கருத்தாய் ஜெபிக்கிறார். தான் அவர்களுக்காக ஜெபிப்பதைப்பற்றிச் சொல்லும்போது, "இதினிமித்தம்" என்று சொல்லி தன்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்கிறார். இதினிமித்தம் என்பது, இதற்கு முந்திய வசனத்தில், "நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக் கொள்கிறேன்" என்னும் காரியமாகயிருக்கலாம். அல்லது இந்த அதிகாரத்தின் முதல் வசனத்தில், "புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டு பவுல் இயேசுகிறிஸ்துவினிமித்தம் கட்டுண்டவராயிருக்கிறார்" என்னும் காரியமாகயிருக்கலாம்.

அப்போஸ்தலர் பவுல் ஜெபம்பண்ணும்போது "நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" ஜெபம்பண்ணுகிறார். நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது, நம்முடைய இருதயத்தில் பரிசுத்தமும், பயபக்தியும் நிறைந்திருக்க வேண்டும். நம்முடைய பக்தியை, நம்முடைய செய்கையின் மூலமாக வெளிப்படுத்தவேண்டும். தேவன் அங்கீகரிக்கும் விதத்தில் நம்முடைய பயபக்தியை வெளிப்படுத்தலாம். தன்னுடைய பயபக்தியைக் காண்பிக்கும் விதத்தில் பவுல், கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு ஜெபிக்கிறார்.

சபையானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சார்ந்திருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்திற்கும் நாமகாரணராயிருக்கிறார். பரலோகத்திலிருக்கிற பரிசுத்தவான்கள் இப்போது மகிமையின் கிரீடத்தை அணிந்திருக்கிறார்கள். பூமியிலுள்ள பரிசுத்தவான்கள் தேவனுடைய கிருபையினால் இங்கு ஊழியம் செய்கிறார்கள். பரலோகத்தின் மகிமையை சுதந்தரித்துக்கொள்வோம் என்னும் நம்பிக்கையோடு நாம் பூமியில் வாசம்பண்ணுகிறோம். பரலோகத்தில் இருக்கிற பரிசுத்தவான்களும், பூலோகத்திலிருக்கிற பரிசுத்தவான்களும் ஒரே குடும்பத்தாராயிருக்கிறோம். நம் எல்லோருக்குமே "கிறிஸ்தவர்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. "கிறிஸ்தவர்" என்னும் நாமத்திற்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நாமகாரணராகயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைக்கவேண்டுமென்று பிதாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். தேவன் அவர்களை அழைத்த அழைப்புக்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். எந்த ஊழியத்தைச் செய்வதற்காக தேவன் அவர்களை அழைத்திருக்கிறாரோ, அந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களுக்கு ஆவிக்குரிய பெலன் உண்டாயிருக்க வேண்டும். தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, அவருடைய ஆவியினாலே, அவர்கள் உள்ளான மனுஷனிலே வல்லமையாய்ப் பலப்படவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்காக ஜெபம்பண்ணும்போது, தேவன் தம்முடைய மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே அவர்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறார். தேவனுடைய ஆவியினாலும், அவருடைய மகிமையினுடைய ஐசுவரியத்தினாலும், விசுவாசிகளுக்கு அநுக்கிரகம் உண்டாகவேண்டும். தேவனுடைய ஆவியானவர் நம்முடைய உள்ளான மனுஷனைப் பலப்படுத்துகிறார். உள்ளான மனுஷனில் பலப்படுவதே நமக்கு மெய்யான பலன். சரீர பலன் பலவீனமுள்ளது. ஆவியின் பலனோ வல்லமையானது.

கிறிஸ்துவானவர் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளின் இருதயங்களில் வாசமாயிருக்க வேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவை உண்மையாய் விசுவாசிக்கிற ஒவ்வொரு விசுவாசியின் ஆத்துமாவும், கிறிஸ்து வாசம் பண்ணுகிற வாசஸ்தலமாயிருக்கிறது. கிறிஸ்துவின் ஆவியானவர் எங்கே வாசம்பண்ணுகிறாரோ, அங்கே கிறிஸ்துவும் வாசம்பண்ணுகிறார். அவர் விசுவாசத்தினாலே நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்வதற்கு, விசுவாசம் நம்முடைய ஆத்துமாவின் கதவை அவருக்குத் திறந்து கொடுக்கிறது. விசுவாசம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆத்துமாவுக்குள்ளே வரவேற்கிறது. விசுவாசம் நம்மை கிறிஸ்துவின் ஆவியானவருக்கு கீழ்ப்படியச்செய்கிறது. விசுவாசத்தினாலே நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகளின் ஆத்துமாவில் கிறிஸ்துவின் அன்பு நிறைந்திருக்கவேண்டும். அவர்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாயிருக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். அநேகருக்கு தேவனிடத்திலும், அவருடைய ஊழியக்காரரிடத்திலும் அன்பு உண்டு. ஆனால் இந்த அன்பு தற்காலிகமானது. குறைவுள்ளது. திடீரென்று தோன்றி மறையக்கூடியது. கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கும்போது, நாம் அவருடைய அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகயிருப்போம். கிறிஸ்துவின் நன்மையான காரியங்களும், அவருடைய மேலான அன்பும் நமக்குள் நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புவோம்.

தேவனுடைய அன்பு விசுவாசிகளுடைய இருதயத்தில் நிலைபெற்றிருக்கவேண்டும். தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும், அவர் நம்மீது அன்பாயிருக்கிறார் என்றும் நாம் விசுவாசத்தோடு சொல்லவேண்டும். அவருடைய அன்பு மாறாதது. நாம் கிறிஸ்துவின் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றிருக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவில், நாம் தேவனை நேசிக்கும்போது, அவருடைய அன்பு நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கும். நாம் கிறிஸ்துவின்மீது அன்புகூரும்போது, நாம் அவருடைய அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகயிருப்போம்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவினுடைய அன்பின் விசேஷித்த தன்மையை உணர்ந்துகொள்ளவேண்டும். இதை அவர்கள் சகல பரிசுத்தவான்களோடும்கூட உணர்ந்து கொள்ளவேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். விசுவாசிகளாகிய நாம் மற்ற பரிசுத்தவான்களைவிட மேலானவர்கள் என்று ஒருபோதும் எண்ணக்கூடாது. பரிசுத்தவான்களோடு நம்மையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களைப்போல நாமும் பரிசுத்தவான்கள்தான் என்று சொல்லவேண்டுமேயல்லாமல், நாம் அவர்களைவிட பெரிய பரிசுத்தவான்கள் என்று ஒருபோதும் சொல்லக்கூடாது.

பரிசுத்தவான்கள் இந்த உலகத்தில் ஜீவிக்கையில், தம்முடைய அன்பின் ஒரு பகுதியை உணர்ந்துகொள்ள, தேவன் அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய அன்பை எந்த அளவுக்கு நமக்கு வெளிப்படுத்துகிறாரோ, அந்த அளவுக்கு அவருடைய அன்பை நாம் உணர்ந்துகொள்ளமுடியும். அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் அன்பை இங்கு வெகுவாக மேன்மைப்படுத்துகிறார்.

கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த அளவுகளை நாம் உணர்ந்துகொள்ளும்போது, கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு பெரியது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். கிறிஸ்துவினுடைய அன்பின் ஐசுவரியம் மனுஷருடைய அறிவுக்கு எட்டாதது. அந்த அன்பை அறிந்துகொள்ள எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் வல்லவர்களாகயிருக்க தேவன் அவர்களுக்கு அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார்.

நாம் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களாயிருக்க வேண்டும். எல்லா பரிசுத்தவான்களுமே கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய சுயமுயற்சியினால் அறிவுக்கெட்டாத காரியங்களை நம்மால் அறிந்துகொள்ள முடியாது. ஆனால் பவுலோ அதை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்று நமக்காக ஜெபிக்கிறார். நாம் ஆரம்பத்தில் ஜெபிக்கும்போது, கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ளும் அறிவு நமக்கு ஓரளவு கிடைக்கும். இன்னும் தொடர்ந்து ஜெபிக்கும்போது, இந்த அறிவு நமக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படும். இப்படியே தேவன் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, அறிவுக்கெட்டாத அந்த அன்பை நாம் அறிந்துகொள்ள உதவிசெய்வார். அதை அறிந்துகொள்ள நாம் வல்லவர்களாகயிருக்க வேண்டுமென்றும், தேவன் நமக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்றும் பவுல் ஜெபம்பண்ணுகிறார்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். நாம் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்பட முடியும். நம்முடைய சுயமுயற்சியினால் இதைப்பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் தேவனுடைய மகிமையின் ஐசுவரியத்தினால், இதைப்பெற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நாம் நிரப்பப்பட முடியும். அவர் தம்முடைய சகல பரிபூரணத்தாலும் நம்மை நிரப்ப ஆயத்தமாயிருக்கிறார். நம்முடைய அளவுக்குத்தக்கதாக தேவன் நம்மை நிரப்புவார். நம்முடைய தேவைக்குத்தக்கதாக தேவன் நம்மை நிரப்புவார். கிறிஸ்துவினுடைய நிறைவிலிருந்து நாம் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். நம்முடைய அளவுக்குத்தக்கதாக, தேவனுடைய சகல பரிபூரணத்தினால் நாம் நிரப்பப்படுகிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தேவனைத் துதித்து இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார். தேவனை மகிமைப்படுத்துகிறார். நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் அவர் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர் என்று பவுல் கர்த்தரைத் துதிக்கிறார். தேவனிடத்தில் நிறைவான கிருபையும், நிறைவான இரக்கமும் உண்டு. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் தேவனிடத்திலிருந்து எவ்வளவு கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொண்டாலும், தேவனுடைய கிருபையும் இரக்கமும் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. ஒருபோதும் வற்றிப்போவதுமில்லை. ஆகையினால் நாம் ஜெபிக்கும்போது தேவனுடைய சர்வவல்லமையை விசுவாசித்து ஜெபிக்கவேண்டும். அவர் நமக்கு எல்லா வேளைகளிலும், எல்லா காரியங்களிலும் போதுமானவராக யிருக்கிறார். நமக்குள்ளே மிகவும் அதிகமாய் கிரியை செய்ய அவருக்கு வல்லமையுள்ளது.

தேவனுடைய வல்லமையை நாம் ஏற்கெனவே ருசித்துப் பார்த்திருக்கிறோம். அவர் நமக்காக அநேகக் காரியங்களைச் செய்திருக்கிறார். அவர் நமக்குள்ளாக பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் அவர் நமக்குள்ளே கிரியை செய்திருக்கிறார். அவருடைய வல்லமையின்படியே, அவர் பரிசுத்தவான்களுக்குள்ளே கிரியை செய்கிறார். இன்றும் கிரியை செய்துகொண்டிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தை எழுதி முடிக்கும்போது தேவனுக்கு மகிமை உண்டாவதாக என்று சொல்லி முடிக்கிறார். சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தேவனுக்கு மகிமை உண்டாகவேண்டும். தலைமுறை தலைமுறைக்கும், சதாகாலங்களிலும் தேவனுக்கே மகிமை உண்டாகவேண்டும். சபையானது தேவனை துதிக்கிற ஸ்தலம். இந்தப்பிரபஞ்சம் பரவி விரிந்திருந்தாலும், சபையிலேயே தேவனுக்குத் துதி உண்டாகிறது. சபையிலிருக்கிற யூதரும் புறஜாதியாரும் தேவனைத் துதிக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராக யிருக்கிறார். அவரே இந்தத் துதிகளுக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். தேவனுடைய எல்லா கிருபைகளும், எல்லா ஈவுகளும் நமக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே வருகிறது. நம்முடைய துதிகளும் கிறிஸ்து இயேசுவின் மூலமாகவே தேவனுடைய சமுகத்திற்குப் போகிறது. தேவனைத் துதிக்கிற துதி தற்காலிகமானதல்ல. தலைமுறை தலைமுறைக்கும், சதாகாலங்களிலும் தேவனுக்கு மகிமை உண்டாகவேண்டும். அப்படியே மகிமை உண்டாவதாக, "ஆமென்" என்று சொல்லி பவுல் இந்த அதிகாரத்தை நிறைவுசெய்கிறார்.

4 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தின் மூன்றாவது அதிகாரத்தில், விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுக்குள் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற அநேக சிலாக்கியங்களையும், அநேக ஆசீர்வாதங்களையும் எழுதியிருக்கிறார். நான்காவது அதிகாரத்தில் விசுவாசிகளுடைய கடமைகளை தெளிவாகச் சொல்லுகிறார். நம்முடைய விசுவாசமும், நம்முடைய நடத்தையும் இசைந்திருக்கவேண்டும். முரண்படக் கூடாது. ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவேண்டும்.

விசுவாசிகளின் பொதுவான கடமைகளை அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் எடுத்துச் சொல்லுகிறார் (எபே 4:1). விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும். ஒருவரையொவருர் அன்பினால் தாங்கவேண்டும் (எபே 4:2-16). விசுவாசிகள் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும் (எபே 4:17-24). இந்த ஆலோசனைகளைத் தவிர பவுல் மேலும் சில ஆலோசனைகளையும் விசுவாசிகளுக்குச் சொல்லுகிறார் (எபே 4:25-32).

அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்கள் எபே 4 : 1

எபே 4:1. ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டும். அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது ரோமாபுரியில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவராக இருக்கிறார். தம்முடைய கட்டுக்களைப்பற்றி பவுல் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். தன்னுடைய கட்டுகளைக் குறித்து பவுல் வெட்கப்படவில்லை.

கர்த்தர் நிமித்தம் பவுல் கட்டுண்டவராக இருந்தாலும், எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு புத்தி சொல்லுகிறார். தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதினால், தனக்கு உதவிபுரிய வருமாறு பவுல் அவர்களிடம் கேட்கவில்லை. தன்னை சிறைச்சாலையிலிருந்து விடுதலை பண்ணுவதற்கு, என்னென்ன காரியங்களெல்லாம் செய்யவேண்டுமோ, அவையெல்லாவற்றையும் துரிதமாய்ச் செய்யுமாறு பவுல் அவர்களிடம் கேட்டுக்கொள்ளவில்லை. அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடக்கவேண்டும் என்றே பவுல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகிறோம். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தப் பெயருக்கு ஏற்ற பிரகாரம் நாம் ஜீவிக்கவேண்டும். தேவனுடைய ராஜ்யத்திற்கும், அவருடைய மகிமைக்கும் பங்குள்ளவர்களாக இருக்கும்படி நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். நாம் இவற்றிற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம். இவ்வளவு பெரிய சிலாக்கியங்களுக்கு சொந்தக்காரராகிய நாம், அதற்கேற்ற பிரகாரம் பயபக்தியாய் ஜீவிக்க வேண்டும். நற்சாட்சியுடையவர்களாய் இருக்கவேண்டும்.

அன்பு
எபே 4 : 2-16

எபே 4:2. மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,

எபே 4:3. சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

எபே 4:4. உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு;

எபே 4:5. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,

எபே 4:6. எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

எபே 4:7. கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

எபே 4:8. ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

எபே 4:9. ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

எபே 4:10. இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

எபே 4:11. மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்,

எபே 4:12. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

எபே 4:13. அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.

எபே 4:14. நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

எபே 4:15. அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

எபே 4:16. அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அன்பே பிரதான பிரமாணம். கிறிஸ்துவின் உபதேசமெல்லாம் அன்பை மையமாக வைத்தே கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவின் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களெல்லோரும் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும். அன்பினால் ஒருவரையொருவர் தாங்கவேண்டும். விசுவாசிகளெல்லோரும் ஒற்றுமையாய் ஜீவிக்கவேண்டும். இந்த ஒற்றுமையைப் பெற்றுக்கொள்வதற்கு, நம்மிடத்தில் மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் இருக்கவேண்டும்.

நம்மிடத்தில் மனத்தாழ்மையிருக்கும் போது பெருமையிருக்காது. தாழ்மை பெருமைக்கு விரோதமானது. நம்மிடத்தில் சாந்தகுணம் இருக்கும்போது, நாம் மற்றவர்களை கோபப்படுத்தமாட்டோம். மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்க வேண்டும் என்னும் தீயஎண்ணமும் நமக்குள் இருக்காது. நம்மிடத்தில் நீடிய பொறுமையும் இருக்கவேண்டும். நீடிய பொறுமையுடையவர்கள் தங்களுக்கு விரோதமாக யார் எப்படிப்பட்ட தீங்குகளைச் செய்தாலும் அவற்றைச் சகித்துக்கொள்வார்கள். அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று சதிபண்ணமாட்டார்கள்.

நாம் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசிகளுக்கு உதவி செய்யவேண்டும். ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கவேண்டும். நன்மையான காரியங்களைச் செய்யவேண்டும். தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் கிருபை கொடுத்திருக்கிறார். அந்தக் கிருபையை நாம் மற்ற விசுவாசிகளோடு பகிர்ந்து கொள்ளவேண்டும்.

சில சமயங்களில் விசுவாசிகளாகிய நாம் மனுஷருக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் தவறு செய்திருப்போம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்மை நாமே மன்னிப்பதற்கு நமக்கு கடினமாகயிருக்கும். நம்மையே மன்னிக்க முடியாத நம்மால், மற்றவர்களை மன்னிப்பது மிகவும் சிரமமாகயிருக்கும். பிறரை மன்னிக்காமல், அவர்களோடு நம்மால் ஐக்கியமாகயிருக்க முடியாது. ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ள முடியாது. பெருமையும் கோபமும் நம்மிடத்தில் இருக்குமென்றால் அது சமாதானத்தைக் கெடுத்துப்போடும். பெருமை எல்லா தீங்கிற்கும் காரணமாயிருக்கும். மனத்தாழ்மையும் சாந்தமும் சமாதானத்தை உண்டுபண்ணும். மனத்தாழ்மையுள்ளவர்கள் பிறரோடு ஒத்துப்போவார்கள். பெருமையுள்ளவர்கள் யாரோடும் ஒத்துப்போகமாட்டார்கள். எல்லோரோடும் சண்டை போடுவார்கள்.

விசுவாசிகளாகிய நம்மிடத்தில் ஆவியின் ஒருமைப்பாடு காணப்பட வேண்டும். விசுவாசிகளின் ஒற்றுமையும் ஐக்கியமும் அவர்களுடைய ஆவியிலும், இருதயத்திலும் வாசம் பண்ணுகிறது. எல்லா விசுவாசிகளும், வேறுபாடில்லாமல் ஒன்றுபோல சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. எல்லா விசுவாசிகளுடைய ஆராதனை முறைமைகளும் ஒன்றுபோல் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு பண்ணமுடியாது. ஆனால் நம்முடைய இருதயத்திலும் நம்முடைய ஆத்துமாவிலும் ஆவியின் ஒருமைப்பாடு இருக்கவேண்டும். நாமெல்லோருக்கும் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவும் இருக்கவேண்டும். சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

"ஜாக்கிரதையாயிருங்கள்" என்னும் வார்த்தை சுவிசேஷத்தில் பயன்படுத்தப்படுகிற வார்த்தை. நம்மால் செய்ய முடிகிற அனைத்தையும் நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். மற்றவர்கள் நம்மோடு சண்டை போடும்போது, நாம் மிகுந்த கவனத்தோடு, பெருமுயற்சியெடுத்து, அவர்களோடு சண்டைபோடுவதைத் தவிர்த்துவிடவேண்டும். நாம் சமாதானத்தினால் கட்டப்பட்டிருக்க வேண்டும். நம்முடைய சிந்தனைகளையும் செயல்களையும் சமாதானம் ஆளுகை செய்யவேண்டும்.

பல நூல்களை ஒன்றாக இணைத்து கயிறு திருக்கிறார்கள். ஒரு நூலைவிட திரிக்கப்பட்ட கயிறு மிகுந்த பலமுள்ளது. இதுபோலவே நம்மிடத்தில் சமாதான கட்டு இருக்கும்போது அது சமுதாயத்தை வலுப்படுத்துகிறது. சமாதானம் சமுதாயத்தை பெலப்படுத்துகிறது. சமுதாயத்திலுள்ள எல்லோரும் ஒன்றுபோல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகயிருப்பார்கள். இருந்தாலும் இவர்களெல்லோரும் ஒன்றுசேரும்போது, அந்த சமுதாயம் வலுவுள்ளதாகயிருக்கும்.

கான்கிரீட் கட்டட வேலை செய்வதற்கு இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்துகிறோம். எல்லா கம்பிகளும் ஒரே அளவு நீளமாகவும், ஒரே அளவு பருமானகவும் இருப்பதில்லை. கம்பிகளுக்குள் வித்தியாசமிருக்கும். ஆனாலும் இந்தக் கம்பிகள் எல்லாவற்றையும் இணைத்து கட்டும்போது, அது மிகுந்த பலனைக் கொடுக்கும். கட்டிடத்திற்கு அது வலுவைச் சேர்க்கும். கம்பிகளின் நீளத்தில் வித்தியாசமுண்டு. ஆனால் எல்லா கம்பிகளும் இணைக்கப்படும்போது அதனால் அதிக பலமுண்டு. ஒரு தனிக்கம்பி எவ்வளவு நீளமாகவும், எவ்வளவு பருமனாகவும் இருந்தாலும், பல கம்பிகளாக சேர்ந்து கட்டப்பட்டுள்ள கம்பிகள் அதிகப் பலனைத்தரும்.

விசுவாசிகள் மத்தியிலே ஆவியின் ஒருமை காணப்படவேண்டும். விசுவாசிகள் சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளவேண்டும். அன்பினால் ஒருவரையொருவர் தாங்கவேண்டும். நமக்கு ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. ஒரு சரீரத்தில் இரண்டு இருதயங்கள் இருந்தால் அது மனுஷசரீரமாக இருக்காது. இராட்சத குணமுள்ளதாகவே இருக்கும். ஒரு சரீரத்திற்கு ஒரே ஒரு இருதயம் மாத்திரம் இருக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள். நம் எல்லோரையும் ஒரே ஆவியானவரே ஆளுகை செய்கிறார். நாம் எல்லோருமே ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும் ஒரே கிறிஸ்துவில்தான் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஒரே பரலோகத்தைத்தான் நோக்கிப் பார்க்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரே இருதயம் தான் இருக்கவேண்டும்.

நமக்கு ஒரே கர்த்தர் தான் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவே அவர். நமக்கு ஒரே விசுவாசம்தான் இருக்கிறது. சுவிசேஷமே அந்த விசுவாசம். எல்லா விசுவாசிகளும் ஒரே சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா விசுவாசிகளையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரே விசுவாசத்தினால் இரட்சித்திருக்கிறார். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே கிருபையையே கொடுத்திருக்கிறார்.

விசுவாசிகளாகிய நம் எல்லோருக்கும் ஒரே ஞானஸ்நானம் தான் உண்டு. இந்த ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறோம். நம் எல்லோருக்கும் ஒரே தேவனும் ஒரே பிதாவும் உண்டு. ஒரே தேவன் தம்மை விசுவாசிக்கிற எல்லோரையும் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்திருக்கிறார். எல்லா விசுவாசிகளையும் தம்முடைய சபையில் ஐக்கியமாக இணைத்திருக்கிறார்.

நம்முடைய தேவன் எல்லார்மேலும், எல்லாரோடும், நம் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். தேவனுடைய கிருபை நம்மைத் தாங்குகிறது. அவர் நம்மைப் பாதுகாத்துப் பராமரிக்கிறார். ஒரே தேவன், தம்முடைய ஆவியினால், எல்லா விசுவாசிகளுக்குள்ளும் வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும் அநேகராகயிருந்தாலும், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நமக்கு ஒரே இருதயமும், ஒரே ஆவியும், ஒரே ஆத்துமாவும் இருக்கவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு அநேக வரங்களைக் கொடுக்கிறார். கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்கு கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. சபையிலுள்ள விசுவாசிகள் பல விஷயங்களில் ஒத்துப்போனாலும், அவர்களுக்குள் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். ஏதாவது சில காரியங்களில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாகும். நமக்குள் வேற்றுமை இருந்தாலும், நம்முடைய அன்பில் வித்தியாசம் இருக்கக்கூடாது. நம் எல்லோரையும் ஒன்றுபோலவே நேசிக்கவேண்டும். ஏனெனில் நாமெல்லோருக்கும் தேவகிருபை கிறிஸ்துவிடமிருந்தே வந்திருக்கிறது.

விசுவாசிகள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற கிருபையைக் குறித்து யாரோடும் கோபப்பட வேண்டியதில்லை. பொறாமைப்பட வேண்டியதில்லை. சண்டைபோட வேண்டியதில்லை. ஏனெனில் கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக, நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஊழியக்காரர்களுக்கும், எல்லா விசுவாசிகளுக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு, வரங்களையும் கிருபைகளையும் அளிக்கிறார். ஆகையினால் நாம் ஒருவரையொருவர் அன்பினால் தாங்கவேண்டும். ஏனெனில் நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து யாருக்கெல்லாம் கிருபை அளித்திருக்கிறாரோ, தம்முடைய வரங்களை யாருக்கெல்லாம் கொடுத்திருக்கிறாரோ, அவர்களெல்லோரும் ஒருவரையொருவர் அன்பினால் தாங்கவேண்டும். அப்போஸ்தலர் பவுல் இந்த வசனப்பகுதியில் ஒரு சில வரங்களை விசேஷமாகக் குறிப்பிடுகிறார்.

தாவீது ராஜாவின் வார்த்தைகளை பவுல் இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். "தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" (சங் 68:18). தாவீது "வரங்களை பெற்றுக்கொண்டீர்" என்று சொல்லுகிறார். பவுல் இதை மேற்கோளாகச் சொல்லும்போது "வரங்களை அளித்தார்" என்று எழுதுகிறார் (எபே 4:8).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு ஏறினார். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, அவர் பரலோகத்திற்குப் பரமேறிப்போனார். அங்கு அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் பரமேறிப்போனபோது வெற்றிபெற்றவராக அங்குபோனார். சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கினார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், யுத்தத்தில் சத்துருக்களை வெற்றிபெற்றதைக் குறிப்பிடுவதற்கு, "சிறைப்பட்டவர்களை சிறையாக்குதல்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒருவேளை மற்றவர்களைச் சிறைப்படுத்தியிருக்கலாம். அல்லது மற்றவர்களிடம் சிறைப்பட்டிருக்கலாம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை சிறைப்படுத்தியவர்களை சிறைப்படுத்தியிருக்கிறார். பாவம், பிசாசு, மரணம் ஆகியவை நம்மைச் சிறைப்படுத்தியிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ இவற்றை தம்முடைய சிலுவையின்மீது வெற்றி சிறந்தார். அவர் பரலோகத்திற்கு பரமேறிப்போனபோதுதான், அவருடைய வெற்றி பூரணமாயிற்று.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு ஏறி வரங்களைப் பெற்றுக்கொண்டார். மனுஷர்களுக்கு வரங்களை அளிப்பதற்காகவே அவற்றைப் பெற்றுக்கொண்டார். இயேசுகிறிஸ்து உன்னதத்திற்கு ஏறினார் என்பதைச் சொல்லும்போது, அவர் பூமியின் தாழ்விடங்களில் அதற்கு முன்னே இறங்கினார் என்றும் பவுல் குறிப்பிடுகிறார் (எபே 4:9). இயேசுகிறிஸ்து மனுஷ அவதாரம் எடுப்பதற்காக பரலோகத்திலிருந்து இந்தப் பூமிக்கு வந்து இறங்கினார். கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அவரை அடக்கம்பண்ணியபோது அவர் பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்.

இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார் (எபே 4:10). அவர் வானங்களிலுள்ள பரலோகத்திற்கு ஏறினார். எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக ஏறினார். தம்முடைய சபையிலுள்ள எல்லா விசுவாசிகளையும் வரங்களினாலும் கிருபைகளினாலும் நிரப்பத்தக்கதாக அவர் பரலோகத்திற்கு ஏறினார்.

இயேசுகிறிஸ்து பரமேறின போது, அவர் என்னென்ன கிருபைகளையும் வரங்களையும் கொடுத்தார் என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அவர் சிலரை அப்போஸ்தலராக ஏற்படுத்தினார் (எபே 4:13). இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபோது, அவர் சபைக்குக் கொடுத்த பிரதான வரம் சமாதானத்தின் ஊழியமும், ஒப்புரவாகுதலின் ஊழியமும் ஆகும். ஊழியத்தின் வரம், கிறிஸ்துவானவர் பரமேறிப்போனதின் கனியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து சபைக்கு இரண்டு விதமான ஊழியங்களைக் கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் ஆகியோர் தேவனுடைய விசேஷித்த ஊழியத்தைச் செய்கிறார்கள். இவர்களுக்கு அப்போஸ்தலர்கள் தலைவராகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களுக்கும் உபதேசங்களுக்கும் இவர்கள் சாட்சிகளாகயிருக்கிறவர்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக, அப்போஸ்தலர்களை எல்லா இடங்களுக்கும் அனுப்பினார்.

தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டு வசனங்களை ஜனங்களுக்கு விவரித்துச் சொல்லுகிறார்கள். சுவிசேஷகர்கள் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் சுவிசேஷகர்களை தங்களோடு உடன் அழைத்துக்கொண்டு பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து, தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் ஊழியக்காரர்களைப்பற்றிச் சொல்லும் போது, கிறிஸ்து சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் என்று எழுதுகிறார். வேதபண்டிதர்களில் சிலர் இவ்விரண்டு ஊழியமும் ஒரே ஊழியம்தான் என்று சொல்லுகிறார்கள். வேறு சிலரோ இவை இரண்டும் வெவ்வேறு ஊழியங்கள் என்று கருத்து சொல்லுகிறார்கள். மேய்ப்பர்கள் ஸ்தல சபைகளுக்குத் தலைவராகயிருக்கிறார்கள். போதகர்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக, தம்முடைய கிருபையுள்ள ஐசுவரியத்தின்படியே, சபைகளுக்கு வெவ்வேறு வரங்களைக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்து தம்முடைய சபையை நேசிக்கிறார். தம்முடைய சபையை ஆசீர்வதிக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் நமக்கு வரங்களைக் கொடுக்கிறார். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தவேண்டும். சுவிசேஷ ஊழியத்தின் வேலை நேர்த்தியாய் நடைபெறவேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய வேண்டும். இதற்காகவே கர்த்தர் தம்முடைய வரங்களை நமக்குக் கொடுத்து, தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் விசுவாசத்தைவிட்டுப் பின்வாங்கிப் போயிருப்பார்கள். பாவத்தில் ஜீவிப்பார்கள். ஆவிக்குரிய ஐக்கியத்திலிருந்து பிரிந்து போய்விடுவார்கள். இப்படிப்பட்டவர்களை மறுபடியும் கர்த்தரைப்பற்றும் விசுவாசத்திற்குள் அழைத்துவரவேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை சீர்பொருந்தப்பண்ண வேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மறுபடியும் வளர்ச்சியும் முன்னேற்றமும் உண்டாகவேண்டும். அவர்களுடைய ஜீவியத்தில் ஆவியின் கனி வெளிப்படவேண்டும். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு வரங்களைக் கொடுக்கிறார்.

மேலும் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு வரங்களைக் கொடுக்கிறார். சபையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பது கிறிஸ்துவின் சித்தம். சபையானது கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளம். சபை பக்திவிருத்தியடையும்போது, சபையில் புதிய அங்கத்தினர்கள் ஏராளமாகச் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். சபை தேவகிருபையில் பெருகும். சபையிலுள்ள எல்லா விசுவாசிகளும் பரலோகத்திற்குப்போக ஆயத்தமடைவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக ஆகவேண்டும். கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகவேண்டும். கிறிஸ்துவைப்பற்றிய அறிவு நமக்கு சிறிதளவு மாத்திரம் இருந்தால்போதாது. நம்முடைய அறிவு நமக்குள் தெளிவில்லாமல் சந்தேகமுள்ளதாக இருக்கக்கூடாது. நமக்கு நிறைவான அறிவு உண்டாகவேண்டும். விசுவாசத்திலும் அறிவிலும் நாம் ஒருமைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தர் நமக்குக் கொடுக்கிற வரங்களிலும் கிருபைகளிலும் நாம் பூரண புருஷராகவேண்டும். கிருபைகளிலும் வரங்களிலும் நாம் வளர்ச்சி பெற வேண்டும். நம்மிடத்திலுள்ள சிறுபிள்ளைத் தனமான குறைபாடுகளெல்லாம் நம்மைவிட்டு நீங்க வேண்டும். கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக நாம் பூரண புருஷராகவேண்டும் (எபே 4:11). விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவின் நிறைவிலிருந்து எல்லா கிருபைகளையும் பெற்றுக் கொள்கிறோம். தேவகிருபைகளைப் பெற்றுக்கொண்டு நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ச்சி பெறவேண்டும். பூரண புருஷராகும் வரைக்கும் நாம் வளரவேண்டும்.

நாம் ஜீவிக்கிற இந்த உலகம் குறைவுள்ளது. இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும் வரையிலும் நம்மால் பூரண புருஷராக வளர்ச்சி பெறமுடியாது. நமக்கு நிறைவான வளர்ச்சி உண்டாகாது. பரலோகமே பூரணமானது. நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும் வரையிலும், நம்மால் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வளர்ச்சி அடையமுடியாது. நாம் பரலோகத்திற்குப் போகும்போது நமக்கு நிறைவான வளர்ச்சி உண்டாயிருக்கும். அங்கு நாம் பூரணபுருஷராகயிருப்போம். நாம் இந்தப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரைக்கும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தொடர்ந்து வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இனி குழந்தைகளாயிருக்கக்கூடாது. நம்முடைய அறிவில் சிறுபிள்ளைத்தனம் இருக்கக்கூடாது. நம்முடைய விசுவாசத்தில் பலவீனம் இருக்கக்கூடாது. நாம் நிலையில்லாமல், தடுமாறி நடக்கக்கூடாது. சோதனைகளுக்கு நம்மை சீக்கிரத்தில் ஒப்புக்கொடுத்து விடக்கூடாது. சிறுபிள்ளைகளை எளிதில் வஞ்சித்துவிடலாம். நாம் காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அங்கும் இங்கும் அலைகிறவர்களாக இருக்கக்கூடாது. பலவிதமான போதகங்களைக் கேட்டு, அவற்றில் எதைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று தெரியாமல், கலக்கத்தோடிருக்கக்கூடாது. சுக்கான் இல்லாத கப்பல் கடலில் நிலைதடுமாறும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் அதுபோல நிலை தடுமாறக்கூடாது.

வானத்திலுள்ள மேகம் காற்று அடிக்கிற திசையிலெல்லாம் போகும். அது ஒரு இடத்திலும் நிலைத்து நிற்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், காற்றினால் அடித்துச் செல்லப்படுகிற மேகங்களைப்போல இருக்கக்கூடாது. நமக்கு மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகம் இன்னதென்று தெரிந்திருக்கவேண்டும். நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டும். வேதவசனத்தை தினமும் வாசிக்கவேண்டும். கிறிஸ்துவின் ஆவியானவர் தம்முடைய கிருபைகளை நமக்குக் கொடுக்கவேண்டுமென்று நாம் அநுதினமும் ஜெபிக்கவேண்டும். தேவனுடைய இரகசியங்களைக் காண்பதற்கு, அவர் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று, நாம் கருத்தாய் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டும். அன்புடன் சத்தியத்தைப் பேசவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அன்பே பிரதானம். அந்த அன்போடு சத்தியமும் நமக்குள் நிலைத்திருக்கவேண்டும். நாம் சத்தியத்தை வெறும் வார்த்தைகளினால் பேசினால் மாத்திரம் போதாது, அதை அன்புடன் பேசவேண்டும். சத்தியத்தை அன்புடன் கைக்கொள்ளவும் வேண்டும். சத்தியமும் சமாதானமும் எப்போதுமே இணைந்து கிரியை நடப்பிக்கும்.

தலையாகிய கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலேயும் வளரவேண்டும். கிறிஸ்துவுக்குள் நிலைபெற்றிருக்க வேண்டும். வேரூன்றி நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி பெறவேண்டும். கிறிஸ்துவைப்பற்றிய அறிவு, அன்பு, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் ஆகிய எல்லாவற்றிலேயும் நாம் வளரவேண்டும். கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் நாம் வளரவேண்டும். நாம் இனி குழந்தைகளாயிராமல், பூரண புருஷராக இருக்கவேண்டும். மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிற தந்திரமும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவை நெருக்கமாய்ப் பற்றிக்கொள்ளும்போது, விசுவாசத்திலும் அன்பிலும் அதிகமாய் வளர்ச்சி பெறுவோம், நாம் அவரையே சார்ந்து ஜீவிப்போம். நமக்கு தேவகிருபை அதிமாய்க் கொடுக்கப்படும். விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்போம். ஒருவரையொருவர் அன்பினாலே தாங்குவோம்.

அப்போஸ்தலர் பவுல் நம்முடைய பௌதீக சரீரத்தையும், கிறிஸ்துவின் சூட்சம சரீரத்தையும் இங்கு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். சரீரத்தின் அவயவங்கள் இணைக்கப்படுவதற்கு கணுக்கள் தேவை. அதுபோலவே விசுவாசிகளை கூட்டி இணைப்பதற்கு அன்பும், ஒருமனமும் தேவை. விசுவாசிகளிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியும், முன்னேற்றமும் காணப்படவேண்டுமென்றால் அவர்கள் தேவகிருபையில் வளர்ச்சி பெறவேண்டும்.

சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும், தன்தன் அளவுக்குத்தக்கதாய் கிரியை செய்யும். இதனால் சரீர வளர்ச்சி உண்டாகிறது. கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கிற ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக, தேவகிருபைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய வரங்களையும், கிருபைகளையும் பெற்றுக்கொண்டவர்கள், அவற்றை தங்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும், அத்துடன், சபையிலுள்ள மற்ற விசுவாசிகளின் பிரயோஜனத்திற்கும் பயன்படுத்தவேண்டும். சபை விசுவாசிகள் மத்தியிலே அன்பினால் பக்திவிருத்தி உண்டாகவேண்டும். விசுவாசிகள் மத்தியிலே பரஸ்பர அன்பு காணப்படும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் நேர்த்தியாய் வளர்ச்சி பெறும். அன்பினாலே சபையாகிய சரீரம் வளர்ச்சி பெறுகிறது. சபையில் பக்தி விருத்தி உண்டாகிறது.

பொதுவான ஆலோசனை
எபே 4 : 17-24

எபே 4:17. ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள்.

எபே 4:18. அவர்கள் புத்தியில் அந்தகாரப் பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து;

எபே 4:19. உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

எபே 4:20. நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை.

எபே 4:21. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே.

எபே 4:22. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரியமோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,

எபே 4:23. உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,

எபே 4:24. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

விசுவாசிகள் தங்கள் இருதயத்திலும் ஜீவியத்திலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். பவுல் பரிசுத்தத்தைப்பற்றி ஆலோசனை சொல்லும்போது, "ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்கு சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில்" என்று ஆரம்பிக்கிறார். மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல, எபேசு சபையிலுள்ள விசுவாசிகள், இனி நடக்கக்கூடாது. புறஜாதியார் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்ட பின்பு, இரட்சிக்கப்படாத புறஜாதியாரைப்போல ஜீவிக்கக்கூடாது. விசுவாசிகள் அவிசுவாசிகள் மத்தியில் ஜீவிக்கலாம். ஆனால் விசுவாசிகளின் ஜீவியம் அவிசுவாசிகளின் ஜீவியத்தோடு ஒத்துப்போகக்கூடாது.

புறஜாதியார் தங்கள் புத்தியில் அந்தகாரப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆத்தும இரட்சிப்பின் ஞானம் கிடைக்கவில்லை. அவர்கள் இருளில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வெளிச்சத்தைவிட இருளையே நேசிக்கிறார்கள். புறஜாதியார் தங்கள் அறியாமையினால், தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கிறார்கள். பரிசுத்த ஜீவியத்திற்கு அவர்கள் விலகி ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவர்கள் துணிகரமாக, தேவனுடைய ஜீவனுக்கு தூரவிலகி அந்நியராயிருக்கிறார்கள்.

அவர்களுடைய அறியாமைக்கு, அவர்களுடைய இருதயக் கடினமே காரணம். தேவன் தம்முடைய கிரியைகளின் மூலமாக, புறஜாதியாருக்கும் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆனால் அவர்களோ தேவனை காணாதவாறு, தங்களுடைய இருதயங்களைக் கடினப் படுத்துகிறார்கள். அறியாமையிலிருக்க வேண்டும் என்று தீர்மானித்து, அவர்கள் அறியாமைலிருக்கிறார்கள். இவர்களுடைய அறியாமைக்கு இவர்களே காரணம்.

புறஜாதியார் உணர்வில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி மழுங்கிப்போயிற்று. தங்களுடைய பாவங்களைக் குறித்தோ, பாவங்களின் பயங்கரமான விளைவுகளைக் குறித்தோ அவர்களுக்கு உணர்வில்லை. தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். தங்களுடைய மாம்சத்தின் இச்சைக்குக் கீழ்ப்படிந்து, சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கிறார்கள்.

புறஜாதியார் பாவத்திற்கும் பிசாசுக்கும் அடிமைகளாகயிருக்கிறார்கள். சகல அசுத்தங்களையும் ஆவலாய் நடப்பிக்கிறார்கள். மனுஷருடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்க வேண்டும். அது மழுங்கிப்போய் உணர்வில்லாமல் இருக்குமென்றால், அவர்கள் தங்களை எல்லா அசுத்தங்களுக்கும் ஒப்புக்கொடுத்து விடுவார்கள். பாவங்களை ஆசையாய் நிறைவேற்றுவார்கள்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் புறஜாதியாரைப்போல கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. எபேசியர் 4:20-ஆவது வசனத்தை இவ்வாறு மொழிபெயர்க்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "நீங்களோ அப்படிப்பட்டவர்களல்ல. நீங்கள் கிறிஸ்துவை கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்" என்றே இந்த வாக்கியத்தை மொழிபெயர்க்கவேண்டும். கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டவர்கள் பாவத்திலிருந்தும், இருளிலிருந்தும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளும்போது, அவர்களுடைய ஜீவியம் முழுவதும் இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருக்கும். கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளாதவர்களைவிட, கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டவர்களின் ஜீவியம் மிகவும் மேன்மையுள்ளதாகவும், ஆசீர்வாதமுள்ளதாகவும் இருக்கும்.

ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவேண்டும். கற்றுக்கொள்ளும்படியாக கிறிஸ்து நமக்கு சுவிசேஷமாக இருக்கிறார். நாம் சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவைக் கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்துவே நமக்கு தம்மைப்பற்றிப் போதிக்கிறார். அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வது பற்றிச் சொல்லும்போது, "இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே" என்று சொல்லுகிறார்.

நாம் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவே நம்முடைய போதகர். கிறிஸ்து நமக்கு சத்தியத்தைப் போதிக்கிறார். தம்மிடத்திலுள்ள சத்தியத்தை அவர் நமக்குப் போதிக்கிறார். இயேசுகிறிஸ்துவிலுள்ள சத்தியமே மெய்யான சத்தியம். அந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்துவே நடைமுறையில் செயல்படுத்துகிறார். கிறிஸ்துவின் உபதேசத்திலும், அவருடைய ஜீவியத்திலும், மெய்யான சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சத்தியம் வல்லமையுள்ளது. இயேசுகிறிஸ்துவினிடத்தில் சத்தியம் வெளிப்படும்போது, அது வல்லமையோடு வெளிப்படுகிறது.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் பழைய மனுஷனை களைந்துபோட வேண்டும். முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே பழைய மனுஷன் கெட்டுப்போயிருக்கிறான். அப்போஸ்தலர் பவுல் நம்முடைய பாவத்தைக் களைந்துபோடவேண்டும் என்று சொல்லுவதற்கு, நம்முடைய வஸ்திரத்தைக் களைந்துபோடுவதை ஒரு உவமையாகச் சொல்லுகிறார்.

நம்முடைய பரிசுத்தத்தில் இரண்டு அம்சங்கள் உண்டு. அவையாவன: 1. பழைய மனுஷனைக் களைந்துபோடுதல் 2. புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல். பழைய மனுஷன் என்பது ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்துக் கொண்ட ஜென்ம பாவத்தைக் குறிக்கிறது. ஆதாமின் பாவம் மனுக்குலத்திற்குள் கடந்து வந்திருக்கிறது. நாம் இந்த உலகத்தில் பிறக்கும்போதே, ஜென்ம பாவத்தோடு பிறக்கிறோம்.

ஜென்ம பாவம் நம்மை மோசம்போக்குகிறது. பாவம் நம்முடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிறது. பாவத்தை சிலுவையில் அறையவேண்டும். பாவத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் அது ஒவ்வொரு நாளும் பெரிதாக வளர்ந்து, நம்மை மோசம்போக்கிவிடும். நமக்குள் மோசம்போக்கும் இச்சைகள் உண்டாகும்.

இச்சைகளினால் தங்களுக்கு சந்தோஷம் வருமென்று மனுஷர் நினைக்கிறார்கள். ஆனால் அந்த சந்தோஷம் தற்காலிகமானது. ஆரம்பத்தில் சந்தோஷமாகயிருக்கும். முடிவில் அது நம்மை மோசம்போக்கிவிடும். இப்படிப்பட்ட இச்சைகளை, பழைய வஸ்திரங்களைக் களைந்துவிடுவதுபோல, நம்மை விட்டுக் களைந்துபோடவேண்டும். பழைய வஸ்திரத்தைத் தரித்திருக்கும்போது நமக்குள் வெட்கமும் அவமானமும் உண்டாகும். அதுபோலவே மோசம்போக்குகிற இச்சைகள் நம்மிடத்தில் இருக்கும்போது அவமானமும் வெட்கமும் உண்டாகவேண்டும். மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நாம் களைந்துபோடவேண்டும். இந்த இச்சை நம்முடைய முந்தின பாவநடக்கைகளால் நமக்குள் உண்டாயிற்று.

பழைய மனுஷனை களைந்துபோட்டால் மாத்திரம் போதாது. நாம் புதிய மனுஷனையும் தரித்துக்கொள்ளவேண்டும். பாவமான காரியங்களை நம்மைவிட்டு நீக்கிப்போட்டால் மாத்திரம் போதாது. நமக்குள் தேவகிருபையினால் நிறைந்திருக்கும் நற்குணங்கள் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய உள்ளத்தில் நாம் புதிதான ஆவியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

புதிய மனுஷன் என்பது புதிய சுபாவத்தைக் குறிக்கிறது. நாம் தேவனுடைய சாயலாக, புதிய சிருஷ்டியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இந்த புதிய மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டவன். வெறுமையிலிருந்தும் குழப்பத்திலிருந்தும் தேவன் இந்தப் புதிய மனுஷனை சிருஷ்டித்திருக்கிறார். தேவனுடைய சர்வவல்லமையினால் இந்த புதிய சிருஷ்டிப்பு உண்டாயிருக்கிறது.

நாம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆத்துமாவை விட்டு தேவசாயல் நீங்கிப்போகும்போது, நம்முடைய ஆவிக்குரிய நிலமை மிகவும் பரிதாபமாகயிருக்கும். நாம் பாவத்தில் விழுந்தவர்களாகயிருப்போம். நம்முடைய இருதயத்தில் பாவசிந்தனை நிரம்பியிருக்கும். பழைய மனுஷன் பாவசாயலுடையவனாகயிருக்கிறான். புதிய மனுஷனோ தேவசாயலைப் பெற்றிருக்கிறான். புதிய சாயலில் தேவனுடைய மகிமையும், சந்தோஷம் பிரத்தியட்சமாக வெளிப்படும். நாம் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இதுவே புதிய சிருஷ்டி. இதுவே புதிய ஜீவன்.

மெய்யான நீதி என்பது தேவனுடைய நீதியைக் குறிப்பிடுகிறது. இது விசுவாசத்தினால் உண்டாகிறது. யூதருடைய பாரம்பரிய முறைமையின் பிரகாரமோ அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வதன் மூலமோ மெய்யான நீதி உண்டாகாது. நாம் தேவசாயலைத் தரித்துக்கொள்ளும்போது, நமக்குள் மெய்யான நீதி காணப்படும். நம்மிடம் மெய்யான பரிசுத்தம் இருக்கும். தேவனுடைய சுபாவம் நம்மூலமாய் வெளிப்படும்.

விசேஷித்த ஆலோசனை
எபே 4 : 25-32

எபே 4:25. அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.

எபே 4:26. நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது;

எபே 4:27. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

எபே 4:28. திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நல்மான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்.

எபே 4:29. கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

எபே 4:30. அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

எபே 4:31. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது.

எபே 4:32. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். இதற்காக மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நாம் களைந்துபோடவேண்டுமென்று பவுல் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். அத்துடன் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும் பவுல் ஆலோசனையாகச் சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் புதிய மனுஷனுக்குரிய வஸ்திரங்களை பவுல் தெளிவுபடுத்துகிறார். நாம் பொய்யைக் களைந்துபோடவேண்டும். அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசவேண்டும்.

புறஜாதியார் பொய்சொல்லக் கவலைப்படமாட்டார்கள். பொய்சொல்வதன் மூலமாக ஒருவருக்கு நன்மை உண்டாகுமென்றால் தாராளமாய்ப் பொய்சொல்லலாம் என்பது புறஜாதியாரின் உபதேசம். உண்மை பேசி ஒருவருக்கு தீங்கு உண்டாக்குவதைவிட, பொய்பேசி ஒருவருக்கு நன்மை உண்டாக்குவது நலம் என்பதே புறஜாதியாரின் கொள்கை. புதிய மனுஷனோ எந்தச் சூழ்நிலையிலும் பொய்பேசக்கூடாது. அவன் தன்னைவிட்டுப் பொய்யைக் களைந்துபோடவேண்டும். மற்றவர்களோடு நாம் பேசுகிற எல்லா பேச்சிலும் உண்மை மாத்திரமே இருக்கவேண்டும். தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறவர்களெல்லோரும் உண்மை பேசவேண்டும். நாம் பேசுகிற பேச்சை நம்முடைய மனச்சாட்சி நிதானித்து அறிந்து, நமக்குப் புத்தி சொல்லவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் உண்மையைப் பேச கடன்பட்டவர்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் அன்பு கூருகிறவர்களாகயிருந்தால், ஒருவரையொருவர் வஞ்சிக்காதவர் களாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் விசுவாசிகளாகிய நாமெல்லோருமே ஒரே சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம். நாமெல்லோருமே விசுவாசக் குடும்பத்தில் பிள்ளைகளாயிருக்கிறோம். விசுவாசிகளுடனே பொய் பேசினால், நமக்குள் மெய்யான சந்தோஷமும், மெய்யான சமாதானமும் இருக்காது. ஆகையினால் விசுவாசிகள் பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசவேண்டும்.

பொய்சொல்லுவது மிகப்பெரிய பாவம். கோபப்படுவதும் பாவம்தான். ஆனாலும் நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். விசுவாசிகள் கோபப்படுவதற்கு பவுல் சற்றே அனுமதி கொடுக்கிறார். நாம் எந்த அளவுக்குக் கோபப்படலாம் என்பது தேவனுக்குத்தான் தெரியும். ஆனால் நாம் பாவம் செய்யாதிருக்கவேண்டுமென்பது நம் எல்லோருக்குமே தெரிந்திருக்கவேண்டும். நாம் எதற்கு வேண்டுமானாலும் கோபப்படலாம் என்று பவுல் அனுமதி கொடுக்கவில்லை. நாம் பாவத்தைக் குறித்தே கோபப்படவேண்டும். வேறு எதைக் குறித்தும் கோபப்படக்கூடாது.

கோபப்படும்போது அது பிறரை பழிவாங்கும் உணர்ச்சியாகவும் மாறிவிடும். இருதயத்தில் கோபம் பற்றியெறியும்போது மன்னிக்கும் சுபாவம் நம்மைவிட்டு நீங்கிவிடும். ஆகையினால்தான் பவுல் "கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்" என்று சொல்லிவிட்டு, "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" என்றும் சொல்லுகிறார். நமக்கு கோபம் வரும்போது, கோபத்தின் எரிச்சல் உடனே தணிந்துபோகவேண்டும். கோபம் நமக்குள் பெலன்கொள்ளக்கூடாது. சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக நம்முடைய எரிச்சல் தணிந்துவிடவேண்டும். நமக்கு விரோதமாக தீங்கு செய்தவரோடு, சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக ஒப்புரவாகிவிடவேண்டும்.

கோபப்படுவது பாவமல்ல. கோபம் தன்னில்தானே பாவமானதுமல்ல. ஆனாலும் கோபப்படுவதைக் குறித்து நாம் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். நம்முடைய கோபத்தைக் கட்டுப்படுத்தவில்லையென்றால், அது நம்மை பாவத்தின் குழியில் தள்ளிவிடும். கோபத்திற்கு இடங்கொடுத்து, பிசாசுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது. ஒருவர் கோபத்தில் நிலைத்திருக்கும்போது, அவருடைய இருதயம் முழுவதிலும் எரிச்சல் நிறைந்திருக்கும். அன்பு குறைந்துபோகும். கோபப்படுகிறவர்களின் இருதயத்தில் பிசாசின் சுபாவங்கள் குடியிருக்கும். ஆகையினால் நாம் பிசாசுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது. பிசாசானவன் நம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறவன். அவனுடைய கட்டுக்கதைகளுக்கும், தூஷண வார்த்தைகளுக்கும் நாம் செவிகொடுக்கக்கூடாது.

திருடுவது பாவம். அப்போஸ்தலர் பவுல் திருடுவதற்கு விரோதமாகவும் எச்சரித்துச் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் திருட்டுத் தொழிலில் ஈடுபடக்கூடாது. தங்கள் கைகளினால் நலமான வேலைகளைச் செய்து பிரயாசப்படவேண்டும். பிறரிடத்திலிருந்து திருடி எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, குறைச்சலுள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும். திருடாமலிருந்தால் மாத்திரம் போதாது. நம்முடைய கைகளினால் நலமான வேலைகளையும் செய்யவேண்டும். நம்முடைய கடமைகளைச் செய்யவேண்டும். பாவம் செய்யாமலிருந்தால் மாத்திரம் போதாது. நன்மையும் செய்யவேண்டும்.

சும்மாயிருக்கிற சோம்பேறிகள் திருட ஆரம்பித்துவிடுவார்கள். சோம்பல்தனம் திருட்டுத்தனத்தை உற்பத்தி பண்ணுகிறது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் ஒருபோதும் சோம்பலுள்ளவர்களாயிருக்கக் கூடாது. கண்ணியமான, நலமான வேலைகளைச் செய்ய பிரயாசப்படவேண்டும். விசுவாசிகள் சட்டத்திற்குப் புறம்பான வேலைகளை செய்யக்கூடாது. நேர்மையான தொழிலை மாத்திரம் செய்யவேண்டும். நலமான வேலைகளை மாத்திரம் செய்யவேண்டும்.

நாம் சுறுசுறுப்பாக வேலை செய்யும்போது, தவறு செய்யவேண்டும் என்னும் சோதனை நமக்கு வராது. கடின உழைப்பு சோதனையிலிருந்து நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளும். சோதனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மாத்திரம் நாம் நலமான வேலை செய்யவேண்டுமென்று பவுல் சொல்லவில்லை. நாம் குறைச்சலுள்ளவர்களுக்குக் கொடுக்கத் தக்கதாய், நமக்கு பொருளாதார ஆசீர்வாதங்கள் உண்டாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் இருந்தால்தான் பிறருக்குக் கொடுக்கமுடியும். திருடிச் சேர்ப்பதைவிட, கைகளினால் நலமான வேலைகளைச் செய்து, நேர்மையாய்ச் சம்பாதிக்கவேண்டும்.

வேலை செய்து நம்மை நாமே போஷித்துக்கொண்டால் போதுமானதல்ல. நாம் பிறருடைய தேவைகளையும் கவனிக்கவேண்டும். விசேஷமாக குறைச்சலுள்ளவர்களுக்கு கொடுத்து உதவிபுரியவேண்டும். நம்மிடத்திலுள்ளதை பிறருக்குக் கொடுக்கும்போது, நமக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான். கர்த்தர் தாம் பட்ட கடனை திரும்பிச் செலுத்துவார். நாம் எவ்வளவு சம்பாதித்தாலும், தேவனுக்குரியதை தேவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். குறைச்சலுள்ளவர்கள் தேவனுடைய சார்பாக, தேவனுடைய பங்கை பெற்றுக்கொள்கிறார்கள்.

நம்முடைய நாவின் வார்த்தைகளைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். பிரயோஜனமுள்ள வார்த்தைகளையும், பக்திவிருத்திக் கேதுவான வார்த்தைகளையும் நாம் பேசவேண்டும். கெட்ட வார்த்தை ஒன்றும் நம்முடைய வாயிலிருந்து புறப்படக்கூடாது. பக்திவிருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகளையே பேசவேண்டும். நம்முடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி நாம் பேசவேண்டும்.

அசுத்தமான வார்த்தைகள் தொற்றுநோயைப்போன்றவை. அவை விஷத்தன்மையுள்ளவை. அழுகிய மாம்சத்தைப்போன்று தீங்கு விளைவிக்கக்கூடியவை. கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய சம்பாஷணைகளைக் குறித்து மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். ஆகையினால் நமக்கும், நம்முடைய பேச்சைக் கேட்கிற மற்றவர்களுக்கும், பிரயோஜனமுண்டாகும்படி பேசவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய நாவினால் மற்றவர்களைத் துக்கப்படுத்தக்கூடாது. நம்முடைய நாவு இயேசுவின் நாமத்தில் பிறரை ஆசீர்வதிக்கவேண்டும். கிறிஸ்துவிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு, நம்முடைய பேச்சு ஜனங்களை வழிநடத்தவேண்டும். ஒவ்வொரு வார்த்தையைப் பேசும்போது சிந்தித்துப் பேசவேண்டும். நம்முடைய பேச்சைக் கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகுமா என்று யோசித்துப் பேசவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் மறுபடியும் கோபத்தையும், எரிச்சலையும் குறித்து எச்சரிக்கிறார். விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பினால் நிறைந்திருக்கவேண்டுமென்று மறுபடியும் ஆலோசனை சொல்லுகிறார். கசப்பு, கோபம், மூர்க்கம் ஆகிய தீயசுபாவங்கள் நம்மைவிட்டு நீங்கவேண்டும். இவையெல்லாம் நம்முடைய இருதயத்திற்குள்ளாக மற்றவர்களுக்கு விரோதமாகத் தீங்குசெய்கிறது. நாம் கூக்குரலிடும்போது, நம்முடைய வார்த்தைகள் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் இராது. கசப்பு, கோபம், மூர்க்கம் ஆகியவை நம்முடைய கூக்குரல் மூலமாய் வெளிப்படும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய நாவைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன் இஷ்டத்திற்கு விட்டுவிடக்கூடாது. நாம் தூஷண வார்த்தைகளைப் பேசக்கூடாது. நாம் யார்மீது கோபமாகயிருக்கிறோமோ அவர்களுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுவோம். ஒருவர் தூஷண வார்த்தைகளைப் பேசும்போது அவருடைய இருதயத்திற்குள் கோபமும் எரிச்சலும் நிறைந்திருக்கும்.

கோபம் அதிகரிக்கும்போது மூர்க்கமுண்டாகிறது. மூர்க்க குணமுள்ளவர்கள் பிறருக்கு விரோதமாகத் தீங்கு செய்வார்கள். மற்றவர்களுக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுவார்கள். இப்படிப்பட்ட தீயகுணங்கள் நம்மைவிட்டு நீங்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். நாம் இந்தத் தீயகுணங்களைப் பெற்றிருப்பதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருக்கவேண்டும். இருதயத்தில் அன்பு நிறைந்திருக்கும்போது, நமக்குள் தயவும் மனஉருக்கமும் இருக்கும். நம்மிடத்தில் உள்ளான அன்பு நிறைந்திருக்கும்போது, நம்மூலமாய் தயவும் மனஉருக்கமும் வெளிப்படும்.

மனஉருக்கமுள்ள இருதயம் இரக்கமுள்ளதாகயிருக்கும். மற்றவர்கள் வேதனைப்படும்போது மனஉருக்கமுள்ளவர்கள் அவர்களுக்காக இரங்குவார்கள். பரிதாபப்படுவார்கள். அவர்களுக்கு உதவி செய்ய விரும்புவார்கள்.

நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உண்டாவதற்கு வாய்ப்புள்ளது. விசுவாசிகளும் மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக தவறு செய்ய வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்குள் தேவன் நாம் செய்த தப்பிதங்களையெல்லாம் நமக்கு மன்னித்திருக்கிறார். தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட நம்மிடத்தில், மன்னிக்கும் இருதயம் இருக்கவேண்டும். தேவன் மன்னித்தது போல நாமும் மன்னிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் பவுல் இங்கு சொல்லுகிற நற்குணங்களெல்லாம் நிறைந்திருக்க வேண்டும். நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். நற்கிரியைகளைச் செய்யாதவர்களிடத்தில் தெய்வபயமும், தெய்வபக்தியும் இருக்காது. அவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளமாட்டார்கள். பக்தியின் வேஷத்தைத் தரித்து மாய்மாலம் பண்ணுவார்கள்.

நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தக்கூடாது. தேவனுடைய பரிசுத்த சுபாவத்திற்கும், அவருடைய சித்தத்திற்கும் விரோதமாக, நாம் சிந்திக்கவோ, பேசவோ, கிரியை நடப்பிக்கவோ கூடாது. பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய ஆளுகைக்கும் கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் பண்ணக்கூடாது.

தேவனுடைய பரிசுத்த ஆவியை நாம் துக்கப்படுத்தினால், அவருடைய பிரசன்னம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நாம் மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்றிருக்கிறோம். உயிர்த்தெழுதலின் நாளின்போது, நம்முடைய சரீரம், மரணத்தின் கட்டுக்களிலிருந்து விடுதலைபெற்று, மீட்கப்படவேண்டும். அப்போதுதான் நமக்கு பூரண சந்தோஷமுண்டாகும். எல்லா விசுவாசிகளும் தாங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்றிருக்கிறார்கள்.

தேவன் விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும் வேறு பிரித்திருக்கிறார். தமக்குச் சொந்தமான விசுவாசிகளை தேவன் முத்திரையிடுகிறார். பரிசுத்த ஆவியானவரே அந்த முத்திரை. நாம் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவர் நம்மிடத்திலுள்ள பரிசுத்த ஆவியை எடுத்துப்போடுவார். ஆகையினால் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருக்க, நாம் மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணவேண்டும். ஆவியானவரின் ஆலோசனைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும்.

5 அதிகாரம்

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றும், நற்கிரியைகளைச் செய்யவேண்டுமென்றும் பவுல் எபேசியருக்கு ஆலோசனை சொல்லுகிறார் (எபே 5:1,2). விசுவாசிகளுக்குள்ளே எந்தவிதமான அசுத்தமும் காணப்படக்கூடாது. அவர்கள் தங்களுக்கு தகாதவைகளைச் செய்யக்கூடாது (எபே 5:3-20). விசுவாசிகள் தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபே 5:21-33).

அன்பிலே நடந்துகொள்ளுங்கள் எபே 5 : 1,2

எபே 5:1. ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,

எபே 5:2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்தவாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். நம்முடைய பாவங்களையெல்லாம் மன்னித்திருக்கிறார். நாம் தேவனைப் பின்பற்றுகிறவர்கள். தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததுபோல, நாமும் அன்பிலே நடந்துகொள்ளவேண்டும். தேவனைப் பின்பற்றுகிறவர்களுடைய ஜீவியம் நற்சாட்சியுள்ளதாக இருக்கவேண்டும். நமக்குள் விசுவாசமும் இருக்கவேண்டும். நாம் நற்கிரியைகளையும் செய்யவேண்டும்.

தேவன் பரிசுத்தர். தேவனைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமும் தேவனைப்போலவே பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். தேவன் இரக்கமுள்ளவர். நாமும் இரக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர் பரிபூரணர். நாமும் பரிபூரணராயிருக்கவேண்டும்.

தேவனைப்பின்பற்றுகிறவர்களாகிய நாம், தேவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். அவருடைய பரிசுத்தமான சாயலைத் தரித்துக்கொள்ளவேண்டும். தேவன் நல்லவர். நன்மை செய்கிறவர். நாமும் பிறருக்கு நன்மை செய்கிற விஷயங்களில், தேவனைப் பின்பற்றவேண்டும். அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததுபோல, நாமும் மற்ற விசுவாசிகளிடத்தில் அன்புகூரவேண்டும். அன்புகூருவதிலும் தேவனைப் பின்பற்றவேண்டும்.

நாம் தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாகயிருக்கிறோம். பெற்றோருக்குப் பிரியமான பிள்ளைகள், பெற்றோரின் சுபாவங்களைப் பின்பற்றுவார்கள். பெற்றோரின் முகசாயல் பிள்ளைகளிடத்தில் காணப்படும். பெற்றோரின் குணாதிசயத்தையும் பிள்ளைகள் பெற்றிருப்பார்கள். கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாகிய நம்மிடத்திலும், தேவனுடைய அன்பும், அவருடைய இரக்கமும் நிரம்பியிருக்கவேண்டும். அவருடைய சாயல் நம்மிடத்தில் வெளிப்படவேண்டும்.

பிரியமான பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடத்திலிருந்து நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்வார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அதிகமாய் நேசிக்கும்போது, பெற்றோரின் நல்ல சுபாவங்கள் பிள்ளைகளிடத்தில் அதிகமாய்க் காணப்படும். நாம் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாகயிருக்கிறோம். நாம் தேவனுடைய சுபாவங்களில் அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய கிருபையும், அன்பும், நற்கிரியைகளும் வெளிப்படவேண்டும். நம்மிடத்தில் தேவனுடைய கிரியைகள் வெளிப்படும்போதுதான், நம்மிடத்திலுள்ள தேவசாயல் வெளிப்படும்.

நாம் தேவனைப் பின்பற்றுகிறோம் என்று நம்முடைய வாயினால் அறிக்கை செய்துவிட்டு, தேவனுடைய சுபாவத்திற்கு முரண்பட்ட காரியங்களைச் செய்யக்கூடாது. தேவனுக்குப் பிரியமான பிள்ளைகள் மாத்திரமே தேவனுடைய சுபாவங்களைப் பெற்றிருப்பார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அன்பிலே நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அன்பே ஆதாரம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் அன்பை மையமாக வைத்தே ஆரம்பமாக வேண்டும், வளர்ச்சி பெறவேண்டும். முடிவுபெறவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்மில் அன்புகூர்ந்திருக்கிறார். கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்தவாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்புகூர்ந்திருக்கிறார். கிறிஸ்துவின் அன்புக்கு அவருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோரும் உடன்பங்காளிகளாக யிருக்கிறோம். ஆகையினால் நாமும் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். அன்பிலே நடந்துகொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்ததினால்தான், அவர் நமக்காக தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். தம்மை சுகந்தவாசனையான காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். தேவன் தம்முடைய பலியையும் காணிக்கையையும் அங்கீகரித்துக்கொள்ளும் விதத்தில், கிறிஸ்து தம்மை அர்ப்பணித்தார். தேவன் கிறிஸ்துவின் காணிக்கையையும் பலியையும் அங்கீகரித்தார். அவருடைய காணிக்கையிலும் பலியிலும் பிரியமானார். நாமும் அன்புகூருவதில் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். அன்புகூருவதில் தேவனுடைய சாயலைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்
எபே 5 : 3,4

எபே 5:3. மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது.

எபே 5:4. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.

நம்முடைய அன்பு பரிசுத்தமாயிருக்கவேண்டும். மாம்சத்தின் இச்சைகள், அசுத்தமான சுபாவங்கள் ஆகியவை நம்மைவிட்டு நீங்கிப்போகவேண்டும். அன்பிலே நடக்கிற நம்மிடத்தில் வேசித்தனமும் மற்ற எந்த அசுத்தமும் காணப்படக்கூடாது. இந்தப் பாவங்கள் துணிகரமானவை. இவை நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடும். இவற்றின் விளைவு மிகவும் பயங்கரமாகயிருக்கும். ஆகையினால் இவைகளின் பேர்முதலாய் நமக்குள்ளே சொல்லப்படக்கூடாது. பாவங்களின் பெயர்களை நம்முடைய நாவினால் உச்சரிக்கவும்கூடாது.

பாவத்தின் கிரியைகளை பவுல் எச்சரிக்கிறார். பாவங்களைவிட்டு நாம் விலகி ஜீவிக்கவேண்டும். பாவத்தை ஏனோதானோவென்று எளிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவற்றிற்கு விரோதமாக மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் வேசித்தனமோ, அசுத்தமோ, பொருளாசையோ காணப்படக்கூடாது. இவை மாத்திரமல்ல வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம் ஆகியவையும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு தாகாத காரியங்களாகும்.

வம்பு வார்த்தைகளைப் பேசுகிறவர் புத்தியீனமாகப் பேசுகிறார். தெளிந்த சிந்தனையில்லாமல் பேசுகிறார். அவருடைய பேச்சினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. ஒரு சிலர் நகைச்சுவையாகப் பேசுவார்கள். பவுல் இதைத் தடைபண்ணவில்லை. ஆனால் நாம் பேசுகிற நகைச்சுவை வம்பில் முடிந்து விடக்கூடாது. யாருக்கும் பாதிப்பில்லாமல் நகைச்சுவையாகப் பேசலாம். வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம் ஆகியவை கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு தகாதவைகள் என்று பவுல் எச்சரிக்கிறார்.

புத்தியீனமான இந்தப் பேச்சுக்களில் ஆபத்து நிறைந்திருக்கிறது. இவை நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு சாட்சி சொல்லாது. விசுவாசிகள் சந்தோஷமாகயிருக்க வேண்டும். உற்சாகமாகயிருக்கவேண்டும். நம்முடைய சந்தோஷத்தில் ஞானமும் இருக்கவேண்டும். நாம் புத்தியீனமாகப் பேசி சந்தோஷப்படக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஸ்தோத்திரஞ்செய்தலே தகும் என்று பவுல் சொல்லுகிறார். தேவன் நமக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். நமக்கு அதிகமாய் இரக்கம் காண்பித்திருக்கிறார். நம்மை தாராளமாய் ஆசீர்வதித்திருக் கிறார். நமக்கு அதிக நன்மை செய்த தேவனை எப்போதும் ஸ்தோத்திரிக்க வேண்டும். கர்த்தரைத் துதிப்பதில் நாம் சந்தோஷப்படவேண்டும். கர்த்தரைத் துதிக்கிற துதியே விசுவாசிகளுக்கு பேரானந்தமாக இருக்கவேண்டும்.

தேவன் நமக்குச் செய்த ஒவ்வொரு நன்மைகளையும் நினைத்து நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். அவர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்து அவரைப் புகழவேண்டும். கர்த்தரைத் துதிப்பதே விசுவாசியினுடைய இருதயத்தில் மெய்யான சந்தோஷத்தைத் தரும். நம்முடைய நேரத்தையெல்லாம் கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணுவதற்கு செலவு பண்ணும்போது, வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம் ஆகியவற்றைப் பேசுவதற்கு நமக்கு நேரம் இருக்காது.

எச்சரிக்கையாயிருங்கள்
எபே 5 : 5-8

எபே 5:5. விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.

எபே 5:6. இப்படிப்பட்டவை களினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

எபே 5:7. அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்.

எபே 5:8. முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்மை சகல அசுத்தங்களிலிருந்தும் காத்துக்கொள்ளவேண்டும். பாவமான காரியங்களிலிருந்து எப்படி விலகியிருப்பது என்று பவுல் எபேசியருக்கு ஆலோசனை சொல்லுகிறார். தேவனுடைய ராஜ்யத்தை யார் சுதந்தரிப்பார்களென்றும், அதில் யார் சுதந்தரமடைவதில்லையென்றும் விசுவாசிகள் அறிந்திருக்கிறார்கள். உலக சிநேகம் ஆவிக்குரிய விக்கிரகாராதனையாக இருக்கிறது. இவர்களுக்கு இவர்களுடைய வயிறே தேவன். பொருளாசையுள்ளவன் தனக்கு பணத்தை தெய்வமாக்குகிறான். பணத்தை ஆராதிக்கிறான். பொருளாசைக்காரன் கிறிஸ்துவை ஆராதிப்பதற்குப் பதிலாக, உலகப்பொருளை ஆராதிக்கிறான். உலகப்பொருளுக்கு ஊழியம் செய்கிறான். விபச்சாரக்காரன், அசுத்தன், விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரன் ஆகியோர் யாரும் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லை.

தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய பரிசுத்தவான்களும், அவருடைய ஊழியக்காரர்களும் சுதந்தரமடைவார்கள். இவர்கள் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். மாம்ச இச்சைக்கும், உலக சிநேகத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். இவர்கள் தேவனுடைய கிருபைக்கு அந்நியராயிருக்கிறார்கள். தேவனுடைய மகிமையில் இப்படிப்பட்ட பாவிகளுக்கு பங்குமில்லை, பாத்தியமுமில்லை. ஆகையினால் தேவனுடைய ராஜ்யத்திற்கு நம்மை அந்நியராக்கும் பாவங்களுக்கு நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவற்றை விட்டு சீக்கிரமாய் விலகி வந்துவிடவேண்டும்.

மாம்ச இச்சை, உலக சிநேகம் ஆகியவைகளின் நிமித்தமாக கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருகிறது. ஆகையினால் ஒருவரும் நம்மை வீண்வார்த்தைகளினால் மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒரு சிலர் பாவத்தைக் குறித்து பரியாசம்பண்ணுவார்கள். ஏளனமாய்ப் பேசுவார்கள். பாவம் செய்வதினால் நமக்கு ஒரு தீங்கும் உண்டாகாது என்று வீண்வார்த்தைகளைப் பேசுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். தங்களுடைய வார்த்தைகளைக் கேட்கிற மற்றவர்களையும் மோசம்போக்குகிறார்கள். இவர்களுடைய வார்த்தைகள் வீண்வார்த்தைகள்.

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஜீவிப்பது மிகப்பெரிய பாவம். மனுஷருடைய வீண்வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதும் நமக்குப் பாவமாகயிருக்கும். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை யென்றால், நாம் கீழ்ப் படியாமையின் பிள்ளைகளாகயிருப்போம். இப்படிப்பட்டவர்களுக்கு தேவ கோபாக்கினை வரும். தேவனுடைய கோபம் பாவிகள்மீது இப்பிரபஞ்சத்திலேயே வரலாம். ஒருவேளை இவர்கள் இப்பிரபஞ்சத்தில், தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்பித்தாலும், மறுமையில் தப்பிக்க முடியாது. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல், மறுஉலகத்தில் தேவகோபாக்கினை நிச்சயமாக வரும். ஆகையினால் நாம் மனுஷருடைய வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர் களுக்கு பங்காளிகளாயிருக்கக்கூடாது. அவர்களுடைய பாவங்களில் பங்குபெறக்கூடாது. அவர்களுடைய தண்டனைகளிலும் பங்குபெறக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் முற்காலத்திலே அந்தகாரத்திலிருந்தோம். ஆனால் இப்போதோ கர்த்தருக்கு வெளிச்சமாயிருக்கிறோம். வெளிச்சத்தின் பிள்ளைகளா யிருக்கிறோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நமக்கு வெளிச்சத்தில் நடக்கவேண்டிய கடமையுள்ளது.

அப்போஸ்தலர் பவுல் எபேசியரின் முற்காலத்து ஜீவியத்தை அந்தகாரம் என்று குறிப்பிடுகிறார். பாவத்தில் ஜீவிப்பது அந்தகாரத்தில் ஜீவிப்பதற்கு சமமானது. பாவிகள் இருளில் இருக்கிறவர்களைப்போல தடுமாறுகிறார்கள். அவர்களுக்கு எங்கு இருக்கிறோம் என்பதும் தெரியாது, எங்கு போகிறோம் என்பதும் தெரியாது. என்னசெய்கிறோம் என்பதும் அவர்களுக்குப் புரியாது.

எபேசியர்கள் இப்பொழுது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறார்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளா யிருக்கிறார்கள். தேவன் வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு ஒரு சில கடமைகளைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வரவேண்டும்.

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நாம் சோதித்துப் பார்க்கவேண்டும். தேவன் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அதை நாம் கருத்தாய்த் தேடிப்பார்க்கவேண்டும். தேவனுடைய சித்தம் என்ன என்பதை முழுமனதோடு ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போது தேவனுக்குப் பிரியமானது எது என்பதையும், தேவனுக்குப் பிரியமில்லாதது எது என்பதையும் நாம் புரிந்துகொள்வோம். கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாகிய நாம், கர்த்தருக்குப் பிரியமானது இன்னது என்பதை சோதித்துப் பார்த்து, அதை நம்முடைய ஜீவியத்தில் செய்யவேண்டும்.

ஆவியின் கனி
எபே 5 : 9-17

எபே 5:9. ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.

எபே 5:10. கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்.

எபே 5:11. கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்.

எபே 5:12. அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.

எபே 5:13. அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப் பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிற தெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது.

எபே 5:14. ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

எபே 5:15. ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல் நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து,

எபே 5:16. நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

எபே 5:17. ஆகையால், நீங்கள் மதியற்றவர் களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் ஆவியின் கனியைக் கொடுக்கவேண்டும். ஆவியின்கனி சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும். வெளிச்சத்தின் பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரால் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நீதியின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கிற ஆவியின்கனி, நற்குணமும், நீதியும், உண்மையும் உள்ளதாக இருக்கவேண்டும். நம்முடைய பேச்சிலும் செய்கையிலும் உண்மை இருக்கவேண்டும். உண்மையில்லாமல் நம்மால் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கமுடியாது. உண்மையில்லாதவர்கள் மாய்மாலம் பண்ணுகிறார்கள். அவர்கள் அந்தகாரத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள்.

அந்தகார கிரியையானது கனியற்றது. நாம் அப்படிப்பட்ட அந்தகார கிரியைகளோடோ, அவற்றைச்செய்கிற பாவிகளோடோ எந்த ஐக்கியமும் வைத்துக்கொள்ளக்கூடாது. பாவத்தின் கிரியைகளே அந்தகாரத்தின் கிரியைகள். அந்தகாரத்தின் கிரியைகள் கனியற்ற கிரியைகள். அந்தகாரத்தில் ஜீவிக்கிறவர்களால் ஒரு நன்மையும் செய்யமுடியாது. அவர்களுடைய ஜீவியம் பிரயோஜனமற்றதாகவே இருக்கும். அந்தகாரத்தில் ஓடுகிறவர்கள் முடிவில் ஒன்றையும் சாதிக்கமாட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது.

அந்தகாரத்தின் பிள்ளைகள் அந்தகார கிரியைகளில் சந்தோஷப்படலாம் என்று நினைக்கிறார்கள். தங்கள் பாவங்களினால் தங்களுக்கு பிரயோஜனமுண்டாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் முடிவில் அவர்களுக்கு நஷ்டமே உண்டாகும். அவர்களுடைய ஆத்துமா நஷ்டமடையும். ஆகையினால் அவர்களுடைய அந்தகார கிரியைகளுக்கு நாம் உடன்படக்கூடாது. நாம் பாவிகளுடைய பாவங்களில் பங்குபெறும்போது, அந்தப் பாவங்கள் நிமித்தம் கிடைக்கும் தண்டனைகளிலும் நாம் பங்குபெறுவோம். பாவம் செய்கிறவர்கள் தண்டனைக்குத் தப்பமுடியாது. இதை நாம் மனதில் நினைத்து, கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் ஜீவிக்கவேண்டும்.

பாவக்கிரியைகளுக்கு நாம் உடன்படாமல் ஜீவித்தால் மாத்திரம் போதாது. அவைகளை கடிந்துகொள்ளவும் வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். மற்றவர்களின் பாவங்களுக்கு விரோதமாக நாம் எச்சரித்துச் சொல்லவேண்டும். மற்றவர்களுடைய பாவங்களை நாம் கடிந்துகொள்ளவேண்டும். அவர்களுடைய பாவங்களை நம்முடைய வார்த்தைகளினாலும், நம்முடைய பரிசுத்த ஜீவியத்தினாலும் அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

அந்தகாரத்தின் பிள்ளைகள் ஒளிப்பிடத்தில் அவலட்சணமான கிரியைகளைச் செய்கிறார்கள். அந்தக் கிரியைகளை நம்முடைய வாயினால் சொல்லுகிறதும் நமக்கு அவலட்சணமாயிருக்கிறது. அவர்களோடு ஐக்கியமாகயிருப்பதும் நமக்கு அவலட்சணம். அவர்களுடைய பாவங்களை சொல்லுவதும் நமக்கு அவலட்சணம். அவர்களுடைய கிரியைகளில் எதுவும் வெளிச்சத்தில் நடைபெறுவதில்லை. எல்லாம் ஒளிப்பிடத்தில் செய்யப்படுகிறது. துன்மார்க்கர் வெட்கப்படாமல் செய்கிற காரியங்களின் பெயர்களைக்கூட, பரிசுத்தவான்களாகிய நாம் நம்முடைய வாயினால் சொல்லுவதற்கு வெட்கப்படவேண்டும்.

துன்மார்க்கருடைய அவலட்சணமான கிரியைகளெல்லாம் கடிந்துகொள்ளப்படும். அது வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும். பயபக்திக்குரிய நம்முடைய நடத்தையினாலும், நம்முடைய பரிசுத்த ஜீவியத்தினாலும், துன்மார்க்கருடைய அவலட்சணமான கிரியைகள் வெளியரங்கமாகும். அவை ஒளிப்பிடத்தில் செய்யப்பட்டாலும், நம்முடைய நற்சாட்சியினாலும், நம்முடைய பரிசுத்தத்தினாலும் அவை வெளியரங்கமாகும்.

வெளியரங்கமாக்கு கிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக யிருக்கிறோம். நம்முடைய வெளிச்சத்தில், மற்றவர்கள் ஒளிப்பிடத்தில் செய்கிற அவலட்சணமான கிரியைகளை வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். நாம் இந்த உலகத்தில் சத்தியத்திற்கு வெளிச்சமாக இருக்கிறோம். துன்மார்க்கருடைய அவலட்சணமான கிரியைகளை வெளிப்படுத்துகிற வெளிச்சமாக இருக்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் எபேசியருடைய ஆவிக்குரிய கடமைகளை இங்கு விவரித்துச் சொல்லுகிறார். எபேசியர்கள் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். ஆனபடியினால், அவர்கள் ஞானமற்றவர்களைப் போல நடக்கக்கூடாது. ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடக்கவேண்டும். இதுவரையிலும் தூங்குகிற அவர்கள் விழிக்கவேண்டும். அவர்கள் மரித்தோரை விட்டு எழுந்திருக்கவேண்டும். அப்போதுதான் கிறிஸ்து அவர்களை பிரகாசிக்கச் செய்வார்.

எபேசு சபையிலுள்ளவர்கள் மனந்திரும்பி தங்கள் பாவத்தைவிட்டு விலகிவரவேண்டும். கிறிஸ்து அவர்களை பிரகாசிக்கச் செய்வார். கிறிஸ்துவின் பிரகாசத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், தூங்குகிற அவர்கள் விழித்துக்கொள்ளவேண்டும். நாம் துன்மார்க்கருடைய அந்தகார கிரியைகளை கடிந்துகொள்ளும்போது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்குப் பிரசங்கம் செய்கிறோம். கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறோம். பாவிகளுக்கு அவர்களுடைய பாவங்களை உணர்த்துகிறோம். கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்தைச் செய்வதற்கு, நாமும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். ஆகையினால் அவர்களோடு நாம் பங்காளிகளாயிருக்கக்கூடாது. நம்முடைய ஜீவியத்தில் ஆவியின்கனி வெளிப்படவேண்டும். மற்றவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்துகிற நம்மிடத்தில் பாவம் காணப்படக்கூடாது. நம்மை நாமே சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய நடத்தையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மற்றவர்களிடத்தில் அந்தகார கிரியைகள் காணப்படுவதினால், நாம் அவற்றைக் கடிந்துகொள்கிறோம். நாம் கடிந்துகொள்கிற அப்படிப்பட்ட அந்தகார கிரியைகள் நம்மிடத்தில் காணப்படக்கூடாது.

பிறரை கடிந்துகொள்கிற நாமே, கடிந்துகொள்ளப்பட வேண்டியவர்களாக இருப்போமென்றால், நாம் ஞானமற்றவர்களைப் போல நடக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளப் பார்க்கவேண்டும்.

நாம் மற்றவர்களுடைய பாவங்களை கடிந்துகொள்ளும்போது, நம்முடைய பார்வையில் நாம் பரிசுத்தவான்களாயிருப்பதுபோல தெரியும். நம்முடைய நடத்தையும் சுபாவமும் பரிசுத்தமானதுபோல நம்முடைய மனதிற்குத் தோன்றும். ஆனாலும் உண்மையிலேயே நாம் பரிசுத்தவான்களா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளவேண்டும்.

ஒரு சிலர் தங்கள் இருதயத்தில் பரிசுத்தமில்லாமலேயே, மற்றவர்களுடைய அசுத்தத்தைக் கடிந்துகொள்வார்கள். நாம் பாவிகளாகயிருக்கையில், மற்றவர்களுடைய பாவங்களை கடிந்துகொள்வதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. மிகுந்த கவனமாய் நடந்துகொண்டால்தான் நம்முடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள முடியும். கவனமாய் நடக்காமல், ஏனோதானோவென்று ஜீவித்தால், நம்முடைய இருதயத்தில் பரிசுத்தமிருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகையினால் நாம் ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

"கவனமாய் நடப்பது" என்பதற்கு "சரியான பாதையில் நடப்பது" என்று பொருள். சரியான பாதையில் நடக்கும்போது, தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் நாம் நடக்கிறோமா என்பதை அவ்வப்போது உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும். நம்முடைய நடத்தையும், சத்திய வசனமும் ஒத்துப்போகிறதா என்பதையும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். ஞானமுள்ளவர்களாய் நடக்கவேண்டும்.

ஞானமில்லாதவர்கள் கவனக்குறைவாக நடப்பார்கள். தாங்கள் விரும்பியதைச் சாதிக்கவேண்டுமென்று, தங்களுக்குப் பிடித்த வழியில் நடப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ஞானமில்லாமல் நடந்து, பாவத்தில் விழுந்து விடுவார்கள். தங்களுடைய ஆத்துமாவை அழித்துப்போடுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடக்கவேண்டும். சரியான வழி எது என்பதை தேவன் நமக்கு உபதேசிக்குமாறு அவருடைய பாதபடியில் அமர்ந்திருந்து கற்றுக்கொள்ளவேண்டும். கவனமாய் நடக்கிறவர்கள் ஞானமுள்ளவர்கள். கவனமில்லாமல் நடக்கிறவர்கள் ஞானமற்றவர்கள்.

அப்போஸ்தலர் பவுல் எபேசியரிடம் "காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று ஆலோசனை சொல்லுகிறார். இதற்கு வாய்ப்புக்களை தேடி கண்டுபிடித்து, அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று பொருள். இந்த வாக்கியம் வியாபார உலகத்தில் பயன்படுத்தப்படுகிற பழமொழி. ஒரு பொருளை விற்கிறவர் சமயம் பார்த்து விற்கவேண்டும். விற்பதற்கு வாய்ப்பிருக்கும்போது அந்தப் பொருளை விற்றுவிடவேண்டும். தாங்கள் செய்கிற வியாபாரத்தை நேர்த்தியாகச் செய்வதற்கு, ஒவ்வொரு வேளையும் எப்படிப்பட்டது என்பதை நிதானித்து அறிந்து வைத்திருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், நமக்குக் கிடைத்திருக்கிற காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். நம்முடைய காலத்தை நாமே ஆளுகை செய்யவேண்டும். நாம் கிருபையின் காலத்தில் ஜீவிக்கிறோம். இக்காலத்தில், தேவகிருபையை, நம்முடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு ஏற்றபிரகாரமாய், பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவன் நமக்கு காலத்தையும் நேரத்தையும் கொடுத்திருக்கிறார். நம்முடைய காலம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவு. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டால் முடிவு ஆசீர்வாதமாக இருக்கும். காலத்தை அசட்டைபண்ணினாலோ, கர்த்தர் கொடுக்கிற வாய்ப்புக்களை பயன்படுத்தாமல் சும்மாயிருந்துவிட்டாலோ, முடிவில் நமக்கு ஒரு ஆசீர்வாமும் கிடைக்காது. ஆகையினால், தேவனுடைய சித்தத்தின் பிரகாரம், நமக்குக் கிடைத்திருக்கிற காலத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

தேவன் நமக்கு இப்போது கொடுத்திருக்கிற காலத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால், பிற்காலத்தில் நமக்கு பேரிழப்பு உண்டாகும். இந்த இழப்பை சரிசெய்வதற்கு, நாம் இரண்டு மடங்கு காலத்தை செலவிடவேண்டியதாயிருக்கும். ஏனெனில் நாட்கள் பொல்லாதவை களாயிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை எழுதியபோது, விசுவாசிகளுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று. அப்போது, ஒவ்வொரு விசுவாசியும் தங்களுக்குக் கிடைத்திருக்கிற காலத்தை நல்லமுறையில் பிரயோஜனப்படுத்திக்கொண்டார்கள்.

நாட்கள் இப்போது பொல்லாதவைகளாயிருக்கிறது. இந்த நாட்கள் இனிமேல் இன்னும் அதிகப் பொல்லாதவைகளாயிருக்கும். நாளுக்குநாள் பொல்லாப்பு கூடும். பொல்லாப்பு ஒருபோதும் குறைவதில்லை. மனுஷர் பொதுவாக தங்களுடைய காலத்தைக் குறை சொல்லுவார்கள். தங்களுக்கு நல்ல காலம் பிறக்கவில்லையென்று வருத்தப்படுவார்கள். எல்லாமே தீமையாய் நடைபெறுவதாக அங்கலாய்ப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ நம்முடைய காலத்தைக் குறை சொல்லக்கூடாது. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள ஆவனசெய்யவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மதியற்றவர்களாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ள வேண்டும். தேவனுடைய சித்தத்தோடு நெருங்கி ஜீவிக்கவேண்டும். தேவனுடைய சித்தம் இன்னது என்பதை அவருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து தியானிக்கவேண்டும். மதியற்றவர்கள் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளமாட்டார்கள். தங்களுடைய சுயசித்தத்திற்கும் கர்த்தருடைய சித்தத்திற்கும் அவர்களால் வித்தியாசம் காணமுடியாது. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ மெய்ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளவேண்டும்.

ஆவியினால் நிறைந்து
எபே 5 : 18-20

எபே 5:18. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து;

எபே 5:19. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி,

எபே 5:20. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து,

எபேசியரில் சிலர் மதுபான வெறியோடிருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எச்சரித்துச் சொல்லுகிறார். அதே சமயத்தில் கிறிஸ்துவுக்குள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கடமைகளையும் தெளிவுபடுத்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறிகொள்ளக்கூடாது. மதுபானம் பண்ணுவது பாவம். பவுல் மதுபான வெறியைப்பற்றி இங்கு எச்சரிக்கிறார். அளவுக்கு அதிகமாக மது அருந்தி, வெறித்திருப்பதை பவுலின் வார்த்தை கண்டித்து உணர்த்துகிறது.

மதுபானம் அருந்துகிறவர்கள் புத்தி மயக்கத்திலிருப்பார்கள். அவர்களுக்குள் தெளிந்த சிந்தனையிருக்காது. மதுபானம் அருந்துவது பாவம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மதுபானம் அருந்துவது தடையாகயிருக்கும். மதுபானத்தினால் நிறைந்திருக்கிறவர்கள், புத்திமயக்கத்தினால் தகாத காரியங்களைச் செய்வார்கள். பாவத்தில் விழுந்துவிடுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, மதுபானவெறியினால் நிறைந்திராமல், ஆவியினால் நிறைந்திருக்கவேண்டும்.

மதுபான வெறியினால் நிறைந்திருக்கிறவர்களால், ஆவியினால் நிறைந்திருக்க முடியாது. நாம் ஆவியானவரின் கிருபைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆவியானவரின் சந்தோஷமும், சமாதானமும் நம்முடைய இருதயத்தை நிரப்பவேண்டும். மதுபான வெறிகொள்கிறவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களினால் நிரம்பியிருப்பார்கள். நாமோ ஆவியில் நிரம்பி, ஆவிக்குரிய காரியங்களில் நிரம்பியிருக்கவேண்டும். ஆவியானவரின் சந்தோஷத்தை நாம் நிறைவாய்ப் பெற்று அனுபவிக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிள்ளைகளுக்கு, பரிசுத்த ஆவியானவரை அருளுகிறார். ஆவியானவரின் அளவு நமக்கு கொஞ்சமாய்க் கொடுக்கப்பட்டிருக்குமென்றால், நாம் அதில் திருப்தியடையக்கூடாது. நம்மை இன்னும் அதிகமாய் நிரப்புமாறு கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும். நாம் ஆவியினால் நிறைந்திருக்கவேண்டும். ஆவியினால் நிறைந்திருக்கிறவர்கள் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்வார்கள்.

நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். மதுபானவெறி கொண்டிருக்கிறவர்கள் வாய் உளறி பாடுவார்கள். மற்றவர்களை திட்டுவார்கள். சில சமயங்களில் தங்கள் நாவை அடக்கமுடியாமல், கெட்ட வார்த்தைகளையும் பேசிவிடுவார்கள். ஆவியினால் நிறைந்திருக்கிற நாமோ, நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணவேண்டும். விசுவாசிகளின் சந்தோஷம் துதிபாடல்களில் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தரைத் துதித்து, கீர்த்தனம்பண்ணி பாடும்போது, நம்முடைய இருதயமும் ஆத்துமாவும் சந்தோஷத்தினால் பூரிக்கிறது.

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும். ஆவியினால் நிறைந்து, தங்களுக்குத் தாங்களே புத்திசொல்லிக்கொள்ளவும் வேண்டும். சபையில் விசுவாசிகள் மத்தியில் கூடியிருக்கும்போது, கர்த்தருடைய பிள்ளைகள் ஆவியினால் நிறைந்து, தங்களுக்கு புத்திசொல்லிக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் உபதேசம் உலகப்பிரகாரமான ஆடம்பரங்களுக்கும், உலகப்பிரகாரமான சந்தோஷங்களுக்கும் விரோதமானது. ஆனாலும் நாம் ஆவியினால் நிறைந்து சந்தோஷப்பட வேண்டுமென்று வேதவாக்கியம் சொல்லுகிறது. ஆவியில் நிறைந்து நாம் மகிழ்ந்து களிகூரவேண்டும். இது பரிசுத்தமான சந்தோஷம். இந்தப் பரிசுத்தமான சந்தோஷத்திற்கு விரோதமாய் கிறிஸ்து ஒருபோதும் உபதேசம்பண்ணவில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் சந்தோஷப்படுவதற்கு ஒரு காரணமுண்டு. நாம் நம்மை சிருஷ்டித்த கர்த்தரைத் துதித்து சந்தோஷப்படுகிறோம். நம்முடைய ஆத்துமாவை இரட்சித்த கர்த்தரை போற்றிப் புகழ்ந்து சந்தோஷப்படுகிறோம். நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் அதிகரிப்பதினால் நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுக்களையும் பாடுகிறோம்.

நாம் நம்முடைய இருதயங்களில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணுகிறோம். நம்முடைய வார்த்தையினால் மாத்திரமல்ல, நம்முடைய உள்ளான அன்பினாலும் கர்த்தரைத் துதிக்கிறோம். நம்முடைய ஸ்தோத்திரமும் துதியும் மனுஷரைப் புகழாமல் கர்த்தரையே புகழவேண்டும். கர்த்தரையே பாடி கீர்த்தனம்பண்ணவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பிதாவாகிய தேவனை எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, பிதாவை ஸ்தோத்திரம்பண்ணுவது விசுவாசிகளாகிய நம்முடைய கடமை. நாம் பிதாவை எப்பொழுதும் ஸ்தோத்திரம்பண்ண வேண்டும். எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம்பண்ண வேண்டும்.

கீழ்ப்படிந்திருங்கள்
எபே 5 : 21-33

எபே 5:21. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

எபே 5:22. மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

எபே 5:23. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

எபே 5:24. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

எபே 5:25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

எபே 5:26. தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

எபே 5:27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

எபே 5:28. அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்.

எபே 5:29. தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக்காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.

எபே 5:30. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.

எபே 5:31. இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

எபே 5:32. இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்கிறேன்.

எபே 5:33. எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக் கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தெய்வபயத்தோடே கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இது விசுவாசிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமை. நம்முடைய கீழ்ப்படிதல் தெய்வபயத்தோடும் இருக்கவேண்டும், தேவ நாமத்தினிமித்தமாகவும், அவருடைய நாமமகிமைக்காகவும் இருக்கவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிவதினால், நாம் தேவனுக்குப் பயப்படுகிறோம் என்பதை நிரூபிக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிகிறபோது, நமக்குள்ளே சுமுகமான உறவுகளும், சமாதானமான ஐக்கியமும் இருக்கும்.

மனைவிகள் தங்கள் புருஷருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும். புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். தேவன் மனுஷனை சிருஷ்டித்தபோது, தமது தெய்வீக தீர்மானத்தின் பிரகாரம், அவனை அவனுடைய மனைவிக்கு தலையாக சிருஷ்டித்தார். தன் மனைவியை ஆளுகை செய்கிற அதிகாரத்தையும் உரிமையையும், அவளுடைய புருஷனுக்குக் கொடுத்திருக்கிறார். குடும்பத்தில் புருஷனுக்கு மனைவியைவிட அதிக ஞானமும், அதிக அறிவும் இருக்கவேண்டும். அப்போதுதான் புருஷனால் தன் மனைவிக்கு தலையாகயிருக்க முடியும்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். அவரே சரீரத்திற்கு இரட்சகராகயிருக்கிறார். சபையின்மீது கிறிஸ்துவுக்கு அதிகாரமும் ஆளுகையுமுள்ளது. சபையை தீமையிலிருந்தும், நாசமோசங்களிலிருந்தும் பாதுகாக்கும் பொறுப்பு கிறிஸ்துவினுடையது. சபையினுடைய எல்லா தேவைகளையும், சபைக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்துவானவர் சந்திக்கவேண்டும். அவர் சபையைப் பராமரிக்கவேண்டும். சபைக்கு நன்மையான எல்லா காரியங்களையும் அவர் செய்யவேண்டும்.

கிறிஸ்துவைப்போலவே, புருஷனும் மனைவிக்கு தலையாயிருப்பதினால், அவன் தன் மனைவியை பாதுகாக்கவேண்டும். பராமரிக்கவேண்டும். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் (எபே 5:24). மனைவி தன் புருஷனுக்குக் கீழ்ப்படியும்போது, சந்தோஷமாகவும், மனத்தாழ்மையாகவும், கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும். புருஷன் தன் மனைவியினிடத்தில் அன்புகூரவில்லையென்றால், அவன் தன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகிறான். துஷ்பிரயோகம் பண்ணுகிறான். தன்னுடைய மனைவிக்கு விசேஷித்த அன்பும், விசேஷித்த கவனிப்பும், விசேஷித்த பராமரிப்பும் தேவைப்படுகிறது என்பதை புருஷன் உணர்ந்து, அவன் தன் மனைவியினிடத்தில் அன்புகூரவேண்டும்.

புருஷன் தன் மனைவியினிடத்தில் எவ்வாறு அன்புகூரவேண்டும் என்பதை விவரிப்பதற்கு, கிறிஸ்து சபையில் அன்புகூருவதை பவுல் இங்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். கிறிஸ்துவின் அன்பு மாறாதது. அது நிலையானது. சபையில் குறைபாடுகள் இருந்தாலும், சபையார் தோல்விகளைச் சந்தித்தாலும், தப்பிதங்களைச் செய்தாலும், குற்றவுணர்வோடு இருந்தாலும், கிறிஸ்து சபையாரிடத்தில் அன்புகூருகிறார். கிறிஸ்துவின் அன்பு பெரியது. அவர் தம்முடைய சபையை அதிகமாய் நேசிக்கிறார். கிறிஸ்து சபைக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். பாவிகள் இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட வேண்டுமென்பதற்காக, சபைக்குத் தலையாகயிருக்கிற கிறிஸ்து, கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார்.

தாம் சபையினிடத்தில் அன்புகூருவதுபோலவே, புருஷன் தன் மனைவியினிடத்தில் அன்புகூரவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தன்மீது அதிகமாக அன்புகூருகிற புருஷனுக்கு மனைவி எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். புருஷன் தன் மனைவியின்மீது அதிகமாய் அன்புகூருவதினால், அவள் தனக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை புருஷனுக்கு உண்டு. புருஷன் தன் மனைவியின்மீது அதிகமாய் அன்புகூருவதினால், அவனுக்கு எல்லா காரியத்திலும் கீழ்ப்படிந்திருப்பது மனைவியின் கடமை.

கிறிஸ்துவானவர் தம்மைதாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார். சபையை திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்காக கிறிஸ்துவானவர் தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார். மேலும் சபையில் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்காகவும், கிறிஸ்து தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார் (எபே 5:26,27).

சபையானது மகிமையடையும் வரையிலும் அதற்கு கறைதிரை முதலானவைகள் இருக்கத்தான் செய்யும். இந்தப் பிரபஞ்சத்தில் விசுவாசிகள் ஜீவிக்கிறவரையிலும் அவர்கள் பிழையுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். மகிமையில் பிரவேசிக்கும்போதுதான் விசுவாசிகள் பூரண பரிசுத்தமடைவார்கள். கறைதிரை எதுவும் அவர்களிடத்தில் காணப்படாது. இம்மையில் பரிசுத்தப் படுத்தமாக்கப்படுகிறவர்கள், மறுமையில் மகிமையடைவார்கள்.

புருஷர்கள் தங்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவிக்கவேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிற புருஷன் தன்னில்தான் அன்புகூருகிறான். மனைவியானவள் தன் புருஷனோடு ஒரே சரீரமாகயிருக்கிறாள். ஆகையினால் புருஷன் தன் மனைவியை, தன் சொந்த சரீரமாகப் பாவித்து, அவளில் அன்புகூரவேண்டும். தன் சொந்த மாம்சத்தை யாரும் பகைக்கமாட்டார்கள். புருஷன் தன் சொந்த மாம்சத்தில் அன்புகூருவதுபோல, தன் சொந்த சரீரமாகிய மனைவியின்மீதும் அன்புகூரவேண்டும். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லை.

கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறார். அதுபோலவே ஒவ்வொருவனும் தன் சொந்த மாம்சத்தைப் போஷித்துக்காப்பாற்றுகிறான். புருஷன் தன் மனைவியை, தன்னுடைய சொந்த மாம்சமாகப் பாவித்து, அவளை போஷித்துக் காப்பாற்றவேண்டும். அவளிடத்தில் அன்புகூரவேண்டும். சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. நாம் அவருடைய சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம். நாம் கிறிஸ்துவினுடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயுமிருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்து நமக்குரியவர். மனைவி தன் புருஷனுக்குரியவள். புருஷன் தன் மனைவிக்குரியவன்.

அப்போஸ்தலர் பவுல் புருஷனுக்கும் மனைவிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகளை இங்கு விவரித்துச் சொல்லும்போது, "இதினிமித்தம்" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு கிறிஸ்துவும் அவருடைய சரீரமாகிய சபையும் ஒன்றாயிருப்பதினால் என்றும், புருஷனும் அவனுடைய மனைவியும் ஒரே சரீரமாய் இருப்பதினால் என்றும் பொருள்படும். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்திருக்கிறான். இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். இவர்கள் இருவருக்கும் இடையிலுள்ள ஐக்கியம் நெருக்கமானது. இவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பதினால், இவர்களுக்கு இடையில் வேறு யாரும் இவர்களைப்போல நெருக்கமாய் இருக்கமுடியாது. இவர்கள் இருவரும் இசைந்து ஒரே மாம்சமாயிருப்பது மிகப்பெரிய இரகசியம்.

இந்த இரகசியம் பெரியது என்று பவுல் சொல்லுகிறார். மனைவிக்கும் புருஷனுக்கும் இடையிலுள்ள நெருக்கத்தைப்பற்றிச் சொல்லி, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையிலுள்ள நெருங்கிய ஐக்கியத்தைப் பவுல் விவரிக்கிறார். புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள், இந்த இரகசியம் பெரியது, என்று சொல்லிவிட்டு, "நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்" என்று பவுல் இந்த இரகசியத்திற்கு விளக்கம் கொடுக்கிறார்.

இந்த அதிகாரத்தின் முடிவில் கணவனுக்கும் அவன் மனைவிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகளை எடுத்துச்சொல்லுகிறார். ஒவ்வொருவனும் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரவேண்டும். மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்க வேண்டும். அன்பில்லாமல் பயபக்தியில்லை. அன்பு அதிகரிக்கும்போது அது பயபக்தியாகிறது. தன் புருஷனிடத்தில் பயபக்தியாயிருப்பது தேவனுடைய சித்தம் என்பதை அவனுடைய மனைவி அங்கீகரிக்கவேண்டும். தன் புருஷனுக்குக் கீழ்ப்படிவது தேவனுடைய பிரமாணம் என்பதைப் புரிந்துகொண்டு, மனைவி தன் புருஷனுக்குக் கீழ்ப்படியவேண்டும். புருஷனும் தன் மனைவியினிடத்தில் அன்புகூரவேண்டும்.

6 அதிகாரம்

பெற்றோருக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள உறவுகளையும், வேலைக்காரருக்கும் அவர்களுடைய எஜமான்களுக்கும் இடையிலுள்ள உறவுகளையும் பவுல் இங்கு தெளிவாய் எழுதுகிறார் (எபே 6:1-9). விசுவாசிகள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாயிருக்க வேண்டும். இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடு யுத்தம்பண்ண வேண்டும். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ள வேண்டும் (எபே 6:10-18). முடிவுரை (எபே 6:19-24).

பெற்றோரும் பிள்ளைகளும் எபே 6 : 1-4

எபே 6:1. பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.

எபே 6:2. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்.

எபே 6:3. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.

எபே 6:4. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும். இது பிள்ளைகளின் கடமை. பெற்றோருக்குக் கீழ்ப்படியும்போது பிள்ளைகளுடைய இருதயத்தில் பயபக்தி காணப்படவேண்டும். வெளிப்படையாகவும் கீழ்ப்படியவேண்டும். உள்ளாகவும் கீழ்ப்படியவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும். விசேஷமாய்க் கர்த்தரோடு தொடர்புடைய காரியங்களில், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியவேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல காரியங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். பிள்ளைகள் அவற்றிற்குக் கீழ்ப்படியவேண்டும். பிள்ளைகளின் நல்ல ஆரோக்கியத்திற்கு தேவையானவற்றையெல்லாம் பெற்றோர் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்கள். பிள்ளைகள் அவற்றிற்கும் கீழ்ப்படியவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தரைப்பற்றியும் கற்றுக்கொடுக்கிறார்கள். பிள்ளைகள் கர்த்தரைப்பற்றிய காரியங்களில் விசேஷமாய்க் கீழ்ப்படியவேண்டும். இவ்வாறு கீழ்ப்படிவது நியாயமானது.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியும்போது, அதைப் பார்த்து கர்த்தர் சந்தோஷப்படுகிறார். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே கர்த்தரும் அங்கம் வகிக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஆளுகை செய்யவேண்டுமென்பதும், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதும் தேவனுடைய நியமம். இது இயற்கையின் நியமமுமாகும்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியவேண்டுமென்பதை எழுதும்போது, அப்போஸ்தலர் பவுல் பத்துக் கட்டளைகளில், ஐந்தாவது கட்டளையை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன்வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது" (எபே 6:2,3).

பிள்ளைகளுக்கு நன்மை உண்டாயிருக்கும், பூமியிலே அவர்களுடைய வாழ்நாள் நீடித்திருக்கும் என்பதே வாக்குத்தத்தம். இந்தக் கற்பனைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அநேக நன்மைகள் உண்டாயிருக்கும். உலகப்பிரகாரமான ஐசுவரியங்களும் ஆசீர்வாதங்களும் கிடைக்கும். அதோடு சேர்ந்து தேவன் அவர்களுக்குக் கொடுக்கிற நன்மைகளை அநுபவிக்க, அவர்களுடைய வாழ்நாளும் நீடித்திருக்கும். கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளுக்கு தேவன் சகல நன்மைகளையும் ஆசீர்வாதமாகத் தருகிறார்.

நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மை சகல நன்மைகளினாலும் ஆசீர்வதிக்கிறார். கீழ்ப்படிவதற்கு எப்போதுமே ஆசீர்வாதமுண்டு. சுவிசேஷத்தில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. தேவன் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களை, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சுதந்தரித்துக்கொள்ளலாம். நம்முடைய கீழ்ப்படிதலை உற்சாகப்படுத்துவதற்காக, தேவன் நமக்கு ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் பெற்றோர்களின் கடமைகளையும் இங்கு எடுத்துச் சொல்லுகிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தக்கூடாது. பிள்ளைகள் பெற்றோரின் சாயலாக இருக்கிறார்கள். பெற்றோரின் அங்கங்களாக இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களை அன்போடும், மென்மையாகவும், கரிசனையோடும் பராமரிக்கவேண்டும். மிகுந்த அன்போடு அவர்களை ஆளுகை செய்யவேண்டும். நாம் அவர்களை எச்சரிக்கும்போது, அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். அவர்களைக் கோபப்படுத்தக்கூடாது. பிள்ளைகளை எப்போதும் கடிந்துகொள்ளக் கூடாது. கடினவார்த்தைகளைச் சொன்னால்தான் பிள்ளைகள் கீழ்ப்படிவார்கள் என்று நினைத்து, அவர்களை அடக்கி ஆளுகை செய்யக்கூடாது.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்க்கவேண்டும். பிள்ளைகளை நன்றாய் வளர்ப்பது பெற்றோரின் கடமை. ஆகையினால் அவர்களுக்கு நல்ல போதனைகளைக் கொடுக்கவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் போதிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகள் அறிவாளிகளாகவும், மேதைகளாகவும், நல்ல புருஷராகவும் வளர்ந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் நல்ல விசுவாசிகளாகவும் வளரவேண்டும். கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்க்கவேண்டும். அவர்களுக்கு ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். கர்த்தரைப்பற்றிய உபதேசங்களை அவர்களுக்குச் சொல்லித்தரவேண்டும். வேதத்தின் இரகசியங்களை அவர்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும்.

வேலைக்காரர்களும் எஜமான்களும் எபே 6 : 5-9

எபே 6:5. வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின் படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடமற்ற மனதோடும் கீழ்ப்படிந்து;

எபே 6:6. மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.

எபே 6:7. அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து,

எபே 6:8. மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.

எபே 6:9. எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.

வேலைக்காரரின் கடமைகளையும் பவுல் இங்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர்களுடைய கடமைகளை "கீழ்ப்படிதல்" என்னும் ஒரே வார்த்தையில் மொத்தமாகச் சொல்லிவிடலாம். பவுலின் காலத்தில் பொதுவாக அடிமைகளே வேலைக்காரராக யிருந்தார்கள். அக்காலத்தில் அடிமைகளுக்கு சமுதாயத்தில் எந்தவிதமான உரிமையும் கொடுக்கப்படவில்லை. அடிமைத்தனம் வேறு, கிறிஸ்தவ உபதேசம் வேறு என்று அக்காலத்தில் வேறு பிரித்து வைத்திருந்தார்கள். அக்காலத்து சமுதாயத்தில், கிறிஸ்தவர்களும் அடிமைத்தனத்தை அங்கீகரித்தார்கள். கிறிஸ்தவர்களும், தங்களுடைய அடிமைகளை, கடினமாய் நடத்தினார்கள். அவர்களிடத்தில் மனிதாபிமான அன்பு காண்பிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அப்போஸ்தலர் பவுல் எஜமான்களும், அடிமைகளும் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார்.

வேலைக்காரர்கள் கர்த்தருடைய சுயாதீனராகயிருக்கலாம். கர்த்தருடைய சமுகத்தில் வேலைக்காரருக்கு விடுதலையும் உரிமையும் உண்டு. ஆனாலும் வேலைக்காரர்கள் மனுஷருக்கு அடிமைகளாகவே இருந்தார்கள். எஜமான்கள் சரீரத்தின்படி அடிமைகளுக்கு எஜமான்களாக யிருந்தார்கள். அடிமைகளின் சரீரங்களை எஜமான்கள் அடக்கி ஆளுகை செய்தார்கள். அவர்களுடைய சரீரங்களை கட்டுப்படுத்தினார்கள். ஆனால் எஜமான்களுக்கு அடிமைகளுடைய ஆத்துமாக்களையும், அவர்களுடைய மனச்சாட்சிகளையும் அடிமைப்படுத்துகிற உரிமையில்லை. அடிமைகளாக யிருந்தாலும் அவர்களுடைய ஆத்துமாவும் மனச்சாட்சியும் விடுதலையுள்ளதாகவே இருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் வேலைக்காராயிருக்கிற அடிமைகளுக்கு புத்திசொல்லுகிறார். அவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறார்கள். அதுபோலவே, அவர்கள் சரீரத்தின்படி தங்கள் எஜமான்களா யிருக்கிறவர்களுக்கு, பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனதோடும் கீழ்ப்படியவேண்டும் என்று புத்தி சொல்லுகிறார். தங்களுக்கு மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு பயபக்தியோடு கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

வேலைக்காரரின் கீழ்ப்படிதலில் உண்மையிருக்கவேண்டும். அவர்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியவேண்டும். வேலைக்காரர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய், தேவனுடைய சித்தத்தின்படி, தங்கள் எஜமான்களா யிருக்கிறவர்களுக்கு, பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படியவேண்டும். உண்மையுள்ளவர்களாய் ஊழியம் செய்யவேண்டும். வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு வேலை செய்யும்போது உண்மையுள்ள இருதயத்தோடு மனப்பூர்வமாய் ஊழியம் செய்யவேண்டும்.

வேலைக்காரர்கள் தாங்கள் செய்கிற எல்லா வேலைகளிலும் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். மனுஷருக்கு பிரியமாய் இருக்கவேண்டுமென்று விரும்பக்கூடாது. பார்வைக்கு ஊழியம்செய்யக் கூடாது. வேலைக்காரர்கள் எஜமான்களுக்கு வேலைக்காரராகயிருந்தாலும், தாங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்னும் எண்ணம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும். அவர்கள் மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம் செய்யவேண்டும்.

நாம் இந்தப் பூமியில், நம்முடைய எஜமான்களுக்கு உண்மையாயும் மனப்பூர்வமாயும் ஊழியம் செய்யும்போது, நம்முடைய ஊழியங்களை கர்த்தர் அங்கீகரிக்கிறார். நாம் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவோம். ஆகையினால் நாம் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், மனப்பூர்வமாய் ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய எஜமான் நம்மைப் பார்க்கும்போது, அவருடைய கண்களுக்கு முன்பாக நாம் கடினமாய் ஊழியம் செய்வதுபோல மாய்மாலம்பண்ணக்கூடாது. நம்முடைய எஜமானின் பார்வை நம்மைவிட்டு போய்விட்ட பின்பு, நாம் ஒருவேலையும் செய்யாமல் எஜமானை ஏமாற்றக்கூடாது. உலகப்பிரகாரமான எஜமான்களால் ஒருவேளை நம்முடைய மாய்மாலத்தை கண்டுபிடிக்க முடியாமல் போகலாம். ஆனால் கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. பரலோகத்தின் தேவன் நம்மீது கண்ணோக்கமாயிருக்கிறார்.

நமக்கும், நம்முடைய எஜமான்களுக்கும் எஜமானனானவர் பரலோகத்திலிருக்கிறார். அவரிடத்தில் பட்சபாதமில்லை. வேலைக்காரர் இதை அறிந்தவர்களாக, ஒருபோதும் மாய்மாலம் பண்ணக்கூடாது. வேலைக்காரன் அடிமையானவனாக யிருந்தாலும், சுயாதீனமுள்ளவனாக யிருந்தாலும் மனப்பூர்வமாய் வேலைசெய்யவேண்டும். அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான். கர்த்தர் அவனை நோக்கிப் பார்க்கிறார். நாமும் வேலைசெய்யும்போது மனுஷரை நோக்கிப் பார்க்காமல் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

நாம் செய்கிற வேலையை சந்தோஷமாகவும், மனப்பூர்வமாகவும் செய்யவேண்டும். தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய எஜமானுக்கு நாம் உண்மையாய் ஊழியம் செய்வது தேவனுடைய சித்தம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய எஜமான் நீதிமானாக இல்லாமற்போனாலும், நம்முடைய கர்த்தர் நீதியுள்ளவராயிருக்கிறார். ஆகையினால் நாம் செய்கிற வேலைகளை மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்று நல்மனதோடு செய்யவேண்டும். நாம் செய்கிற வேலையில், நம்முடைய மனச்சாட்சி சுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். நாம் செய்கிற நன்மைக்கு கர்த்தரே பலன்கொடுப்பார் என்பதை அறிந்து, மனப்பூர்வமாய் ஊழியம் செய்யவேண்டும்.

உண்மையுள்ள ஊழியக்காரர்கள், தங்களுடைய வேலையின் சம்பளத்தை கர்த்தரிடத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறார்கள். நாம் நம்முடைய எஜமான்களுக்கு பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனப்பூர்வமாய் ஊழியம் செய்யும்போது, நாம் செய்கிய நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவோம்.

ஒருவேளை நாம் உண்மையாய் வேலை செய்தாலும், நம்முடைய எஜமான் நமக்கு தக்கபலனை கொடுக்காமல் போகலாம். நம்முடைய எஜமான் நம்மை வஞ்சிக்கலாம். ஆனால் நாம் செய்கிற நன்மையின்படி கர்த்தர் நமக்குப் பலனைக்கொடுப்பார். நாம் அடிமையாக யிருந்தாலும், சுயாதீனனாகயிருந்தாலும், கர்த்தர் நம்மை கைவிடமாட்டார். நம்முடைய உண்மையான கடின உழைப்புக்கு கர்த்தர் ஏற்ற பலனைக் கொடுப்பார். ஏற்றவேளையில் கொடுப்பார். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. அவரிடத்தில் இப்பூமியிலும் பட்சபாதமில்லை. பரலோகத்திலும் பட்சபாதமில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பிலும் பட்சபாதமில்லை.

அப்போஸ்தலர் பவுல் வேலைக்காரருக்கு ஆலோசனை சொல்லிவிட்டு, அவர்களுடைய எஜமான்களுக்கும் ஆலோசனை சொல்லுகிறார். எஜமான்கள் தங்கள் வேலைக்காரருக்கு செய்ய வேண்டியவைகளைச் செய்யவேண்டும். வேலைக்காரர்மீது கடுஞ்சொல்லைப் பயன்படுத்தக்கூடாது. அவர்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது. இவர்கள் வேலைக்காரருக்கு எஜமான் களாகயிருந்தாலும், எல்லோருக்கும் எஜமானனானவர் பரலோகத்திலிருக்கிறார். கர்த்தரே நாமெல்லோருக்கும் மெய்யான எஜமான். நம்முடைய எஜமான் நம்மீது அன்பாகயிருக்கிறார். நம்மைப் பராமரிக்கிறார். நமக்குச் செய்யவேண்டியவைகளை ஏற்ற வேளையில் செய்கிறார். அதுபோலவே, எஜமான்களும், தங்கள் வேலைக்காரருக்கு, செய்ய வேண்டியவைகளை ஏற்றவேளையில் செய்யவேண்டும். கிறிஸ்துவைப் பொறுத்தவரையில், வேலைக்காரரும் எஜமான்களும், அவருக்கு உடன்வேலைக் காரராயிருக்கிறார்கள். வேலைக்காரருக்கும் எஜமானுக்கும் கிறிஸ்துவின் சமுகத்தில் வித்தியாசமில்லை. கிறிஸ்துவினிடத்தில் பட்சபாதமில்லை.

கிறிஸ்துவானவர் நமக்கு நன்மை செய்யவேண்டுமென்றால், நாமும் பிறருக்கு நன்மை செய்யவேண்டும். கிறிஸ்துவின் கண்களில் நமக்குத் தயவு கிடைக்கவேண்டுமென்றால், நாமும் பிறருக்கு தயவு காண்பிக்கவேண்டும். ஒருவேளை எஜமான்களால் கிறிஸ்துவைப்போல கிருபை நிறைந்தவர்களாக இருக்கமுடியாமற் போகலாம். கிருபையில்லாவிட்டாலும் உக்கிரம் இருக்கக்கூடாது. அன்பான ஆதரவான சொல்லைப் பயன்படுத்த முடியாமல்போனாலும், கடுஞ்சொல்லைப் பயன்படுத்துவதை விட்டுவிடவேண்டும்.

கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, வேலைக்காரரும் எஜமான்களும் ஒரே அந்தஸ்தில் நிறுத்தப்படுவோம். கர்த்தர் நம்மை பட்சபாதமில்லாமல் நியாயம் விசாரிப்பார். வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து வேலை செய்தார்களா என்பதை கர்த்தர் விசாரிப்பார். அதுபோலவே எஜமான்களும் தங்கள் வேலைக்காருக்கு செய்யவேண்டியவை களைச் செய்து, கடுஞ்சொல்லைப் பயன்படுத்தாமல், அவர்களை அன்பாய் ஆளுகை செய்தார்களா என்பதையும் விசாரிப்பார். நாமெல்லோருமே கர்த்தருடைய சமுகத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அதற்கேற்ற பிரகாரமாக, இந்தப்பிரபஞ்சத்தில், தேவன் நம் ஒவ்வொருவருக்கும் நியமித்திருக்கிற கடமைகளை, உண்மையாயும், மனப்பூர்வமாயும் நிறைவேற்றவேண்டும்.

சர்வாயுதவர்க்கம்
எபே 6 : 10-18

எபே 6:10. கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

எபே 6:11. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

எபே 6:12. ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

எபே 6:13. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபே 6:14. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும்;

எபே 6:15. சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;

எபே 6:16. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

எபே 6:17. இரட்சணியமென்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபே 6:18. எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.

நம்முடைய ஜீவியம் யுத்தக்களம்போல இருக்கிறது. மனுஷருடைய ஜீவியங்களில் அநேக போராட்டங்களும், துன்பங்களும் நடைபெறுகிறது. கிறிஸ்துவின் உபதேசம் யுத்தம்பண்ணுவதற்கு நம்மை ஆயத்தம்பண்ணுகிறது. நமக்கு உலகப்பிரகாரமான யுத்தம் இல்லை. எந்த தேசத்தோடும் நாம் யுத்தம்பண்ணவேண்டியதில்லை. ஆனால் பிசாசின் தந்திரங்களோடு நாம் எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவேண்டும். மாம்சதோடும் இரத்தத்தோடும் நமக்கு யுத்தமில்லை. ஆனாலும் துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதி களோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

நம்முடைய போராட்டத்தைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் நமக்கு எச்சரிக்கிறார். இதைப்பற்றி எபேசியருக்குச் சொல்லும்போது, "கடைசியாக, என் சகோதரரே" என்று சொல்லி தன்னுடைய ஆலோசனையை ஆரம்பிக்கிறார். ஒரு கிறிஸ்தவ விசுவாசி, நல்ல போர்வீரராகவும் இருக்கவேண்டும். தனக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற கடமையை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம், கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படவேண்டும். நம்முடைய இருதயம் எதையும் தாங்கக்கூடியதாக இருக்கவேண்டும். பரலோகத்திற்கு செல்லும் பாதையில், நாம் அநேக போராட்டங்களை போராடவேண்டும். யுத்தம்பண்ணுவதற்கு நமக்கு பட்டயமோ அல்லது வேறே ஆயுதமோயில்லை. நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராட வேண்டியதில்லை. பிசாசோடு எதிர்த்து நின்று போராடப்போகிறோம். ஆகையினால் நாம் கர்த்தரில் பலப்படவேண்டும். அவருடைய சத்துவத்தின் வல்லமையில் பலப்படவேண்டும். கிறிஸ்துவுக்குள் தைரியமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

யுத்தம்பண்ணுகிற போர்வீரர் சர்வாயுதவர்க்கத்தை தரித்திருப்பார். தன்னுடைய பாதுகாப்புக்கு என்னென்ன வேண்டுமோ அவையெல்லாவற்றையும் தன்னுடைய சரீரத்தைச் சுற்றி கட்டியிருப்பார். ஆனாலும் அவருடைய இருதயத்தில் பலமில்லையென்றால், அவர் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படவில்லையென்றால், அவரால் தைரியமாய் யுத்தம்பண்ண முடியாது. கோழைகளுக்கு எப்படிப்பட்ட சர்வாயுதமிருந்தாலும், அந்த ஆயுதங்கள் யுத்தம்பண்ணுவதற்கு பிரயோஜனமற்றவை. யுத்தம்பண்ணுகிறவர் கோழையாக இருக்கக்கூடாது. தைரியமுள்ளவராக இருக்கவேண்டும். அப்படிப் பட்டவருக்குத்தான் சர்வாயுதவர்க்கம் பிரயோஜனப்படும்.

நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்திற்கு, ஆவிக்குரிய பெலனும், ஆவிக்குரிய வல்லமையும் தேவை. நம்முடைய சுயபலத்தினால் நம்மால் ஆவிக்குரிய யுத்தம்பண்ண முடியாது. நம்முடைய சுயபலன் நமக்குப்போதுமானதல்ல. கர்த்தரே நமக்குப் போதுமானவர். அவருடைய பெலனே நமக்குப் போதுமானது ஆகையினால் முதலாவதாக நாம் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படவேண்டும். கர்த்தரின் வல்லமையினால் நாம் யுத்தம்பண்ணவேண்டும். யுத்தத்தில் முன்னேறிச் செல்லவேண்டும். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுகிறார். ஆகையினால் கர்த்தரில் பெலப்பட்டிருக்கிற நாம், நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில், விசுவாசத்தோடு தொடர்ந்து முன்னேறிச் செல்லவேண்டும்.

நாம் ஆவிக்குரிய யுத்தம்பண்ணும்போது, பரலோகத்திலிருந்து தேவகிருபைகளையும், தேவனுடைய உதவிகளையும் ஒத்தாசைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும். பிசாசோடு யுத்தம்பண்ணுவதற்கு நமக்கு தேவனுடைய உதவி தேவை. பரலோகத்திலிருந்து நமக்குக் கொடுக்கப்படுகிற ஒத்தாசை, பிசாசோடு யுத்தம்பண்ண நம்மைப் பலப்படுத்தும். கிறிஸ்தவ ஊழியம் செய்வதற்கும், ஆவிக்குரிய யுத்தம் பண்ணுவதற்கும் நமக்கு தேவனுடைய கிருபையும் அவருடைய உதவியும் தேவை. நம்முடைய சுயபலத்தினால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஊழியமும் செய்யமுடியாது, யுத்தமும் பண்ணமுடியாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்பதற்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கம், நம்மை திராணியுள்ளவர்களாக்கும். தேவன் நமக்குக் கொடுக்கிற எல்லா கிருபைகளையும் பெற்றுக்கொண்டு அவற்றை விசுவாசத்தோடு பயன்படுத்தவேண்டும். நாம் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளும் போது, நம்முடைய சரீரத்தின் எந்தப் பகுதியும் நிர்வாணமாயிராது. சத்துருவால் நம்முடைய சர்வாயுதவர்க்கத்தை மாத்திரமே பார்க்கமுடியும். அதற்குள்ளே நம்முடைய சரீரம் பாதுகாப்பாக இருக்கும். சத்துருவால் நம்முடைய சரீரத்தை ஒன்றும் செய்யமுடியாது.

தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறவர்கள், அவருடைய எல்லா கிருபைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வாஞ்சையோடிருக்க வேண்டும். தேவனுடைய பூரண கிருபையே, அவருடைய சர்வாயுதவர்க்கம் என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய சுயஆயுதவர்க்கம் நமக்குப் பயன்படாது. நமக்குச் சொந்தமாக எந்த ஆயுதமுமில்லை. நம்முடைய சுயஆயுதம் நம்மைப் பாதுகாக்காது. சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாது. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் நாம் யுத்தம்பண்ணும்போது நம்முடைய சொந்த சர்வாயுதவர்க்கம் நம்மைப் பாதுகாக்காது. ஆனால் தேவனுடைய சர்வாயுதவர்க்கம் நம்மைப் பாதுகாக்கும். பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க நம்மை திராணியுள்ளவர்களாக்கும்.

தேவன் நமக்காகவே தம்முடைய சர்வாயுதவர்க்கத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். அதை நாம்தான் தரித்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய விசுவாசிகள் ஒவ்வொருவரும், தேவன் அவர்களுக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்பதற்கு நமக்குத் திராணியுண்டாகும். நம்மால் சத்துருவை ஜெயிக்க முடியும். இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நாம் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியும். யுத்தத்தில் நமக்கு சேதாரமுண்டாகாது. நாம் தரித்திருக்கிற தேவனுடைய சர்வாயுதவர்க்கம் நம்மைப் பாதுகாக்கும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நாம் தரித்துக்கொள்ளவில்லையென்றால் நமக்கு பேராபத்து உண்டாகும். ஏனெனில் நம்முடைய யுத்தம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல. மனுஷசத்துருக்களோடு நாம் யுத்தம்பண்ணவில்லை. மனுஷனுக்குள் மாம்சமும் இரத்தமும்தான் இருக்கிறது. மனுஷயுத்தத்தை சரீர பலத்தினால் செய்யலாம். ஆனால் இதுவோ ஆவிக்குரிய யுத்தம். இந்த யுத்தம்பண்ணுவதற்கு நமக்கு ஆவிக்குரிய பெலன் தேவை.

நம்முடைய சத்துருவாகிய பிசாசு தந்திரமுள்ளவன். நமக்கு விரோதமாக அவன் ஏராளமான தந்திரங்களைப் பயன்படுத்துவான். நம்மை வீழ்த்துவதற்கு சதிஆலோசனைகளை செய்வான். நம்மை வீழ்த்துவதற்கு கண்ணிகளை வைப்பான். நம்முடைய ஆத்துமா கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படவேண்டும். நம்முடைய ஆத்துமா நிலையில்லாமல் அலைபாய்ந்து கொண்டிருக்குமென்றால், பிசாசு நம்மை எளிதாக ஜெயித்துவிடுவான்.

பிசாசு சாதாரண சத்துரு அல்ல. அவன் துரைத்தனங்களுள்ளவன். அதிகாரமுள்ளவன். இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் பிசாசோடு சேர்ந்து நமக்கு விரோதமாக யுத்தம் பண்ணும். பிசாசுகளின் எண்ணிக்கை அதிகம். அவற்றின் அந்தகார வல்லமையும் அதிகம். அவற்றின் பொல்லாப்பும் அதிகம். அந்தகார லோகாதிபதிகள் புறஜாதி தேசங்களை ஆளுகை செய்து, அவர்களை தங்களுடைய அடிமைத்தனத்திற்குள் வைத்திருக்கிறார்கள். இதனால்தான் புறஜாதியார் இன்னும் வெளிச்சத்தைக் காணமுடியாமல் இருளிலிருக்கிறார்கள். சாத்தானுடைய ராஜ்யம் இருள் நிறைந்தது. கிறிஸ்துவின் ராஜ்யமோ வெளிச்சமுள்ளது.

பிசாசு மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய சத்துரு அல்ல. அவன் மாம்சப்பிரகாரமான சத்துரு அல்ல. அவன் ஆவிக்குரிய சத்துரு. வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் அவன் பக்கமாயிருக்கின்றன. இவை துன்மார்க்கமான ஆவிகள். இவர்கள் மூலமாக நமக்கு பேராபத்து வரும். ஏனென்றால் இவற்றை நம்மால் பிரத்தியட்சமாகக் காணமுடியாது. நாம் நினையாத நேரத்தில், நாம் எதிர்பார்க்காத வேளையில், பொல்லாத ஆவிகள் நம்மைத் தாக்கும்.

இந்தப் பொல்லாத ஆவிகள் வானமண்டலங்களிலுள்ளன. நாம் வானத்தின் வழியாகத்தான் பரலோகத்திற்குப் போகவேண்டும். பரலோகத்திற்குப் போகிற பாதையில் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, நாம் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதை தடைபண்ண முயற்சி பண்ணுகின்றன. யுத்தம்பண்ணுவதற்கு பிசாசுகள் தங்களுக்குச் சாதகமான, நமக்கு மிகவும் பாதகமான இடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறது. இது பிசாசின் தந்திரம்.

பிசாசுகள் நம்முடைய மாம்சத்தோடும் ஆவிகளோடும் போராடுவதில்லை. அவை இரத்தத்தோடும் நம்முடைய ஆவியோடும், ஆத்துமாவோடும் அவை போராடுகிறது. நம்முடைய ஆத்துமாவோடு சம்பந்தபட்ட காரியங்களை பிசாசுகள் தாக்குகின்றன. பிசாசோடு நாம் எதிர்த்து நிற்கவேண்டுமென்றால் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் நாம் பலப்படவேண்டும். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கவேண்டும். ஆவிக்குரிய யுத்தத்தை, ஆவிக்குரிய ரீதியாகத்தான் யுத்தம்பண்ண முடியும். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கும்போது, கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். நாம் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும்போதும் நமக்கு விசுவாசம் தேவை. ஆவிக்குரிய யுத்தம்பண்ணுவதற்கும் நமக்கு விசுவாசம் தேவை. விசுவாசமில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. நம்முடைய சுயபலத்தினால் ஆவிக்குரிய யுத்தம்பண்ணமுடியாது. பிசாசை எதிர்த்து நிற்பதற்கு தேவனுடைய கிருபையும், அவருடைய உதவிகளும் நமக்குத் தேவை.

பிசாசோடு யுத்தம்பண்ணும்போது நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கவேண்டும். பிசாசின் தந்திரங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுத்துவிடக்கூடாது. அவனுடைய சதிஆலோசனைகளுக்கு நாம் கீழ்ப்படியக்கூடாது. அவன் நம்மைத் தாக்கும்போது தோற்று ஓடிப்போய்விடக்கூடாது. நாம் விசுவாசத்தோடு பிசாசுக்கும் அவனுடைய தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்கவேண்டும். பிசாசு நமக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும்போது நாமும் அவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கவேண்டும். "சாத்தானுக்கு விரோதமாக எதிர்த்து நிற்பது" என்னும் வார்த்தைக்கு, "பாவத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்பது" என்று பொருள்.

தீங்குநாளில் நாம் சாத்தானுடைய தந்திரங்களை எதிர்த்து நிற்கவேண்டும். நம்முடைய சோதனையின் நாட்களும், பாடுகளும் வேதனைகளும் நிறைந்த நாட்களும், "தீங்குநாள்" என்று அழைக்கப்படுகிறது. நாம் சாத்தானையும் அவனுடைய தந்திரங்களையும் எதிர்த்து நின்று, சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவேண்டும். இதற்கு நமக்குள் திராணியிருக்கவேண்டும். இதற்காக தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாம் தோற்று ஓடிப்போனால் பிசாசு நம்மைத் துரத்துவான். நாம் தோற்று ஓடும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபாரத்தை இழந்துபோகிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆவிக்குரிய போராட்டம் உண்டு. இந்தப் போராட்டத்தில் நாம் பிசாசுக்கும் அவனுடைய தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்கவேண்டும். எதிர்த்து நிற்பதுதான் நம் வேலை. சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு நாம் எதிர்த்து நிற்கவேண்டும். இதை மாத்திரம் நாம் செய்தால் போதுமானது. அப்போது சகலத்தையும் நாம் செய்து முடித்தவர்களாய் நிற்போம். பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறவர்கள், சகலத்தையும் செய்து முடித்து, ஜெயம்பெற்றவர்களாயிருப்பார்கள். யுத்தம் நமக்குச் சாதகமாக முடிவுபெறும். ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் சாத்தானை ஜெயிப்போம்.

பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்போது நாம் ஆயுதமில்லாமல் நிற்கக்கூடாது. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, பிசாசுக்கும் அவன் தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் ஆயுதம் தரித்திருக்கவேண்டும். இது உலகப்பிரகாரமான ஆயுதமல்ல. இது பரிசுத்தமான ஆயுதம். தேவனுடைய சர்வாயுதம். தேவனுடைய சர்வாயுதத்தில் என்னென்ன பாகங்களெல்லாம் உள்ளன என்பதை பவுல் இங்கு வரிசையாகச் சொல்லுகிறார். ஆயுதத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று நம்மைத் தற்காக்கும். மற்றொன்று சத்துருவைத்தாக்கி அவனை வீழ்த்தும். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் இவ்விரண்டு பகுதிகளும் உள்ளன.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் கச்சை, மார்க்கவசம், பாதரட்சை, கேடகம், தலைச்சீரா, பட்டயம் ஆகிய பகுதிகள் உள்ளன. இந்த ஆயுதங்களெல்லாவற்றையும் யுத்தவீரன் தன் மார்புப்பகுதியில் தரிக்கவேண்டும். அவனுடைய பின்பகுதியைப் பாதுகாப்பதற்கு ஒரு ஆயுதமுமில்லை. நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். அப்போதுதான் தேவனுடைய சர்வாயுதவர்க்கம் நம்மைப் பாதுகாக்கும். நாம் பிசாசுக்கு பயந்து ஓடிப்போனால், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் ஒன்றும் நம்மைப் பாதுகாக்காது. பிசாசு தோற்று ஓடுகிற நம்முடைய பின்பகுதியைத்தாக்கி, எளிதாக நம்மை வீழ்த்திவிடுவான்.

சத்தியம் என்னும் கச்சையை நம்முடைய அரையில் கட்டியிருக்கவேண்டும். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தின் எல்லா ஆயுதங்களும் இந்தக் கச்சையில் கட்டப்பட்டிருக்கிறது. இது எல்லா ஆயுதங்களோடும் தொடர்புடையது. ஆகையினால்தான் பவுல் கச்சையை முதலாவதாகச் சொல்லுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சத்தியம் இருக்கவேண்டும். மாய்மாலம் இருக்கக் கூடாது. உண்மையில்லாதவர்களால் கர்த்தரைப் பின்பற்ற முடியாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், ஊழியத்திலும் உண்மையிருக்க வேண்டும். உண்மையில்லாதவர்கள் தங்கள் அரையில் கச்சையைக் கட்டாதவர்கள். இவர்களுக்கு கச்சை இல்லாமல்போவதினால், இவர்களுடைய சரீரத்தில் வேறு எந்த ஆயுதத்தையும் கட்ட முடியாது.

கர்த்தருடைய யுத்தவீரர்கள் நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்திருக்கவேண்டும். மார்பு பகுதியில்தான் இருதயம், நுரையீரல் போன்ற முக்கியமான அவயவங்கள் உள்ளன. நம்முடைய ஜீவனுக்கு இவை மிகவும் முக்கியமானவை. ஆகையினால் மார்பு பகுதியை பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். அதற்கு நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் நீதி நமக்குக் கிடைக்கவேண்டும். சத்துரு நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவன் நம்முடைய இருதயத்தைத் தாக்குவான். கிறிஸ்துவின் நீதி நம்முடைய இருதயத்தை அரணாக நின்று பாதுகாக்கும்.

நம்முடைய கால்களில் நாம் பாதரட்சைகளைத் தொடுத்திருக்கவேண்டும். சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தமே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பாதரட்சைகளாக இருக்கிறது. யுத்தவீரர்கள் தரையில் வேகமாக நடக்கவேண்டியவர்கள். தரை மேடுபள்ளமாகவும், முள்நிறைந்ததாகவும் இருக்கும். கற்களும் பாறைகளும்நிறைந்திருக்கும். நாம் நேர்த்தியாக நடப்பதற்கு தரையில் பல தடைகளும் இடையூறுகளும் இருக்கும். காலில் பாதரட்சைகள் இல்லையென்றால் நம்மால் பாதுகாப்பாக நடக்க முடியாது. சத்துருவை விரைவாக நடந்து தாக்க முடியாது. தரையில் நடப்பதற்கு நம்மைத் தகுதிப்படுத்த நம்முடைய கால்களில் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய நடை கெம்பீரமாக இருக்கவேண்டும்.

சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் சுவிசேஷச் செய்தி நிரம்பியிருக்கவேண்டும். நாம் சுவிசேஷ ஊழியர் என்பதை நம்முடைய இருதயம் உணர்ந்து செயல்படவேண்டும். அப்போதுதான் நம்முடைய நடை சீராகவும் வேகமாகவும் இருக்கும். நடையில் வளர்ச்சி இருக்காது. உற்சாகம் இருக்கும். சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக நாம் புறப்பட்டுப்போகிறோம் என்னும் உள்ளான உணர்வு நமக்குள் நிறைந்திருக்கும். நம்முடைய நடையில் ஒரு தீர்மானம் உண்டாகும். ஒரு இலக்கை நோக்கி நாம் முன்னேறிப்போகிறோம் என்னும் தெளிவு நமக்குள் இருக்கும்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் சமாதானத்தின் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் எல்லா சமாதானமும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திலிருந்தே புறப்பட்டு வருகிறது. நம்முடைய இருதயத்தில் சமாதானத்தின் சுவிசேஷம் நிரம்பியிருக்கும்போது, சோதனைகளிலிருந்தும் உபத்திரவங் களிலிருந்தும் நமக்குப் பாதுகாப்பு கிடைக்கும். கால்களில் பாதரட்சைகளைப் போட்டு நாம் நடக்கும்போது, தரையிலுள்ள முள், கல், காலைக்குத்தி வேதனைப்படுத்துகிற ஆயுதங்கள் ஆகியவற்றிலிருந்து நமக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அக்காலத்தில் யுத்தவீரர்கள் நடந்து வரும் பாதைகளில், அவர்களுடைய விரோதிகள் இப்படிப்பட்ட ஆயுதங்களை தரையில் சிதறிப்போட்டிருப்பார்கள். பாதரட்சைகள் இல்லாதவர்களால், வெறுங்காலோடு ஆபத்தான இந்தத் தடையில் இரத்தசேதாரமில்லாமல் நடக்க முடியாது.

கர்த்தருடைய விசுவாசிகளாகிய நாம், பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கும்போது, எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாக நிற்கவேண்டும். விசுவாசம் என்னும் ஆயுதம், மற்ற எல்லா ஆயுதங்களையும்விட மேலானது. விசுவாசமில்லாதவர்களால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய முடியாது. பிசாசுக்கு எதிராக யுத்தம்பண்ண முடியாது. சோதனை வேளையில் விசுவாசமே நம்மைப் பாதுகாக்கும். மார்க்கவசம் நம்முடைய மார்பு பகுதியிலுள்ள முக்கியமான அவயவங்களைப் பாதுகாக்கும். கேடகமோ நம்முடைய சரீரத்தின் எல்லாப் பகுதியையும் பாதுகாக்கும். இதைப் பயன்படுத்தலாம். எந்த இடத்தில் சத்துரு நம்மை தாக்க முயற்சி செய்கிறானோ, அந்த இடத்திற்கு கேடகத்தைக் கொண்டுபோய் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். விசுவாசம் ஒரு கேடகத்தைப் போன்றது. நம்முடைய முழுசரீரத்தையும் பாதுகாப்பதற்கு கேடகத்தைப் பயன்படுத்தலாம்.

பிசாசானவனுக்கு “பொல்லாங்கன்” என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் தனக்குத்தானே பொல்லாங்கு செய்கிறவன். மற்றவர்களையும் பொல்லாங்கு செய்யத் தூண்டுகிறவன். சாதாரண ஜனங்களைக்கூட பிசாசானவன் துன்மார்க்கராக மாற்றிவிடுவான். இவனுடைய சோதனை களுக்கு “அக்கினியாஸ்திரங்கள்” என்று பெயர். இது விஷமுள்ள ஆயுதத்தைப் போன்றது. பட்டயத்தால் வெட்ட முடியாத அவயவத்தை, சத்துரு அக்கினியாஸ்திரத்தைப் பயன்படுத்தி சுட்டெரித்துப் போடுவான். அக்கினியாஸ்திரத்திற்கு தப்பிப்பது கடினம்.

சாத்தானுடைய சோதனைகள் அக்கினியாஸ்திரங்களைப் போன்றவை. இவை ஆத்துமாக்களைத் தாக்கி நரகஅக்கினியில் தள்ளிவிடும். இவன் கர்த்தருடைய பிள்ளைகள்மீது அக்கினியாஸ்திரங்களை எய்கிறான். நமக்கு சோதனைகளைக் கொடுக்கிறான். இவற்றிலிருந்து தப்பிப்பதற்கு நாம் விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டு நிற்கவேண்டும். சாத்தான் அக்கினியாஸ்திரங்களை எய்யும்போது, அவற்றை நம்மிடத்திலுள்ள கேடகத்தினால் தடுத்து நிறுத்தவேண்டும். நம்முடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் சத்துருவின் அக்கினியாஸ்திரம் சுட்டெரித்துப்போடாதவாறு, நம்முடைய விசுவாசம் என்னும் கேடகத்தினால் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

நாம் இரட்சணியமென்னும் தலைச்சீராவை எடுத்துக்கொள்ள வேண்டும். விசுவாசத்தினால் நமக்கு இரட்சிப்பு வருகிறது. சாத்தான் நம்முடைய விசுவாசத்தை நம்முடைய இருதயத்திலிருந்து நீக்கிப்போட முயற்சி செய்வான். நமக்கு சோர்வு உண்டாக்குவான். நம்முடைய நம்பிக்கையை தளரச்செய்வான். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் களிகூரவேண்டும். நம்முடைய விசுவாசத்தைத் தளர்ச்சியடையச் செய்வதற்கு சத்துரு என்னென்ன தந்திரங்களைச் செய்தாலும், நாம் நம்முடைய விசுவாசத்தில் சோர்ந்துபோய்விடக்கூடாது. நம்முடைய இரட்சிப்பைப் பற்றிக்கொள்ளவேண்டும். விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் பிடித்திருக்கவேண்டும்.

தேவவசனமானது ஆவியின் பட்டயம் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய பட்டயம் ஆவியின் பட்டயம். ஏனெனில் இந்தப் பட்டயம் மிகுந்த பலமுள்ளது. இது உலகப்பிரகாரமான பட்டயத்தைப் போன்றதல்ல. இது ஆவியின் பட்டயம். ஆவிக்குரிய பட்டயம். நம்முடைய இருதயத்தில் ஆவியின் பட்டயம் நிறைந்திருக்கவேண்டும். தேவவசனம் நம்முடைய இருதயம் முழுவதும் நிரம்பியிருக்கவேண்டும். அப்போதுதான் பாவம் நம் இருதயத்தில் பிரவேசியாதவாறு நம் இருதயத்தைப் பாதுகாக்க முடியும்.

நம்முடைய ஜெயம், தேவனுடைய சர்வாயுதவர்க்கம் அனைத்தையும் ஒன்றாய்க் கட்டிவைத்திருக்கிற "முடிச்சு" போல இருக்கிறது. நாம் எப்போதும் ஜெபிக்கவேண்டும். எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணவேண்டும். மிகுந்த மனஉறுதியோடு சகல பரிசுத்தவான்களுக்காகவும் விழித்திருந்து ஜெபம்பண்ணவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொரு வேலையையும் அதற்கேற்ற இடத்திலும், அதற்கேற்ற சமயத்திலும் செய்யவேண்டும். "எல்லா சமயத்திலும் ஜெபம்பண்ணுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு, வேறு வேலை எதுவும் செய்யாமல் இருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு தம்முடைய சர்வாயுதவர்க்கத்தைக் கொடுத்திருக்கிறார். அவற்றை எப்படி பயன்படுத்தவேண்டுமோ அப்படி பயன்படுத்தி ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றி பெறவேண்டும். அதேவேளையில், நாம் எல்லா சமயத்திலும் ஜெபம்பண்ணவும்வேண்டும். நம்முடைய கடமைகளையும் நிறைவேற்றவேண்டும். ஜெபமும் பண்ணவேண்டும்.

நாம் ஆவியினாலே ஜெபம்பண்ணவேண்டும். சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஜெபம்பண்ணவேண்டும். தேவனுடைய நல்ல ஆவியானவர் நமக்குக் கொடுக்கிற கிருபையினால் ஜெபிக்கவேண்டும். ஜெபத்தில் விழித்துக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய இருதயத்தில் ஜெபசிந்தனை நிரம்பியிருக்கவேண்டும். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதை ஜெபத்தோடு ஆரம்பிக்கவேண்டும், ஜெபத்தோடு முடிக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மனஉறுதியோடு இருக்கவேண்டும். நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் நமக்கு போராட்டம் உண்டு. போராட்டத்தைக் கண்டு பயந்துவிடக்கூடாது. பிசாசின் தந்திரங்களைப் பார்த்து சோர்ந்து போய்விடக்கூடாது. நாம் மிகுந்த மனஉறுதியோடு, கர்த்தருடைய கிருபையினாலும் பலத்தினாலும், முடிவு வரையிலும் போராடவேண்டும்.

நம்முடைய ஜெபங்களில் நாம் நமக்காக மாத்திரம் ஜெபித்தால் போதாது. சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தில் பரிசுத்தவான்கள் அநேகர் இல்லை. இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கிற வரைக்கும் நம்முடைய பரிசுத்தத்தில் குறைவிருக்கும். ஆனாலும் பரிசுத்தவான்களுக்கு நம்முடைய ஜெபம் தேவைப்படுகிறது. அவர்களுக்கு நம்முடைய ஜெபத்தின் மூலமாய் உதவிபுரியவேண்டும். அவர்களுக்காக விழித்திருந்து வேண்டுதல் செய்யவேண்டும்.

முடிவுரை
எபே 6 : 19-24

எபே 6:19. சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக,

எபே 6:20. நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்.

எபே 6:21. அன்றியும், எனக்கடுத்த காரியங்களும், என் சுக செய்திகளும் உங்களுக்குத் தெரியவரும்படிக்கு, அவைகளையெல்லாம் நமக்குப் பிரியமான சகோதரனும் கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாயிருக்கிற தீகிக்கு உங்களுக்கு அறிவிப்பான்.

எபே 6:22. நீங்கள் எங்கள் செய்திகளை அறியவும், அவன் உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல் செய்யவும், அவனை உங்களிடத்தில் அனுப்பினேன்.

எபே 6:23. பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக.

எபே 6:24. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் தனக்காக ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார். அவர்களுக்கு ஆலோசனை சொன்னபோது, சகல பரிசுத்தவான்களுக்காகவும் அவர்கள் ஜெபிக்கவேண்டுமென்று சொன்னார். இப்போதோ அந்தப் பரிசுத்தவான்களோடு தன்னையும் சேர்த்துக்கொண்டு, தனக்காகவும் விண்ணப்பம்பண்ணுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சகல பரிசுத்தவான்களுக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும். அதிலும் விசேஷமாக தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர் களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். எபேசியர்கள் எந்தெந்தக் காரியங்களுக்காக தனக்கு ஜெபிக்கவேண்டும் என்றும் பவுல் அவர்களுக்குச் சொல்லுகிறார். பவுல் சுவிசேஷத்தைப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசவேண்டும். சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு கர்த்தர் அவருக்கு வாக்குக்கொடுக்கவேண்டும்.

சுவிசேஷம் முழுவதும் ஒரு இரகசியமாகவே இருக்கிறது. தெய்வீக வெளிப்பாடுதான் சுவிசேஷத்தின் இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. அதுவரையிலும் சுவிசேஷம் நமக்கு இரகசியமாகவே இருக்கும். அப்போஸ்தலர் பவுல் தன் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கவேண்டுமென்று விரும்புகிறார். அதற்குரிய வாக்கை கர்த்தர் தனக்கு கொடுக்கும்படியாக, எபேசியர்கள் தனக்காக ஜெபிக்குமாறு வேண்டிக்கொள்கிறார்.

பவுல் வாக்குவல்லவர். சாதுரிய ஞானத்தினால் பேசக்கூடியவர். பவுலும் பர்னபாவும் லீஸ்திராவிலே ஊழியம் செய்தபோது, பவுல் அவர்களுக்குப் பிரசங்கத்தை நடத்தினார். அதனால் அந்த ஊர் ஜனங்கள் பவுலை மெர்க்கூரி என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு பவுல் ஜனங்கள் மத்தியில் பேசும் விசேஷித்த வரத்தைப் பெற்றவர். ஆனாலும் பவுல் தன்னை மிகவும் தாழ்த்தி, சுவிசேஷத்தின் இகசியத்தை அறிவிக்கிறதற்கு, கர்த்தர் தாமே தனக்கு வார்த்தைகளைக் கொடுக்கும்படி, தனக்காக ஜெபிக்குமாறு, எபேசு சபையிலுள்ள விசுவாசிகளைக் கேட்டுக்கொள்கிறார்.

பவுல் கோழையல்ல. மிகுந்த தைரியமுள்ளவர். கர்த்தருடைய ஊழியத்தை வல்லமையாய்ச் செய்கிறவர். ஆனாலும் தான் சுவிசேஷத்தின் இரகசியத்தை தைரியமாய் அறிவிப்பதற்கு, கர்த்தர் தனக்கு உதவிபுரியுமாறு, எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் தனக்காக ஜெபிக்குமாறு வேண்டிக்கொள்கிறார். பவுலுக்கு கர்த்தர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வரத்தைக் கொடுத்திருக்கிறார். பவுல் எல்லா மனுஷரையும் அறிந்திருக்கிறார். யாருக்கு எப்படி பிரசங்கம்பண்ணவேண்டுமென்பது பவுலுக்குத் தெரியும். ஆனாலும் சுவிசேஷத்தைப்பற்றி பேசவேண்டியபடி தான் தைரியமாய்ப் பேசத்தக்கதாக, தனக்காக ஜெபிக்குமாறு, கேட்டுக்கொள்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷத்திற்காக சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாக இருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியதின் நிமித்தம், பவுலைத் துன்பப்படுத்தி சிறையில் அடைத்திருக்கிறார்கள். பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தாலும், கிறிஸ்துவானவர் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற ஊழியத்தை, தொடர்ந்து செய்து வருகிறார். பவுல் விடுதலையோடு இருந்தாலும், சங்கிலியால் கட்டப்பட்டிருந்தாலும் அவர் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதியாகவே இருக்கிறார்.

நாம் எவ்வளவு பெரிய ஊழியக்காரர்களாகயிருந்தாலும், நமக்காக மற்ற பரிசுத்தவான்கள் ஜெபிக்கவேண்டுமென்று விரும்பவேண்டும். நமக்காக ஜெபிக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, நம்மை தம்முடைய ஊழியத்தில் வல்லமையாய்ப் பயன்படுத்துவார்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு பவுல் தீகிக்குவை அறிமுகம் செய்து வைக்கிறார். தீகிக்கு எல்லாருக்கும் பிரியமான சகோதரன். கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரன். தனக்கு அடுத்த காரியங்களையும், தன்னுடைய சுகசெய்திகளையும் அறிவிப்பதற்காக, தீகிக்குவை எபேசியரிடம் அனுப்புகிறார். எபேசியருக்கு எழுதின இந்த நிருபத்தைப் பவுல் தீகிக்கு மூலமாக கொடுத்தனுப்பினார் என்று வேதபண்டிதர்கள் சொல்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவரையொருவர் அறிந்திருக்கவேண்டும். விசுவாசிகளுக்கடுத்த காரியங்களையும், அவர்களுடைய சுகசெய்திகளையும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தெரிந்து வைத்திருக்கவேண்டும். மற்ற விசுவாசிகளைப்பற்றி நாம் தெரிந்து வைத்திருப்பதன் மூலமாய், ஜெபத்தில் நம்மால் அவர்களுக்கு உதவிபுரிய முடியும். அவர்களுடைய தேவைகளுக்கு நாம் ஜெபத்தோடு உதவி செய்யலாம். அவர்களுடைய சுகதுக்கங்களில் நாம் பங்குபெறலாம். தேவைப்படும்போது அவர்களுக்கு ஆறுதல் சொல்லலாம்.

தீகிக்கு எபேசியரின் இருதயங்களை ஆறுதல் செய்வார். பவுல் இதற்காகவே தீகிக்குவை அவர்களிடத்தில் அனுப்புகிறார். சிறைச்சாலையில் பவுலுக்கு உண்டாயிருக்கிற பாடுகளையும், வேதனைகளையும், கட்டுக்களையும் தீகிக்கு அவர்களுக்கு அறிவிப்பார். தனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தச் சோதனையில் பவுல் சோர்ந்து போகாமலிருக்கவேண்டும். விசுவாசிகள் தனக்காக ஏறெடுக்கிற ஜெபம் தன்னைப் பலப்படுத்தும் என்று பவுல் நம்புகிறார். பவுலுக்கு உண்டாயிருக்கிற துன்பங்களையும், பாடுகளையும் பார்த்து எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் சோர்ந்துபோய்விடக்கூடாது. பவுலின் சுகசெய்தியை அவர்கள் கேள்விப்பட்டு கர்த்தரைத் துதிக்கவேண்டும். ஆறுதலடைய வேண்டும்.

தீகிக்கு பவுலுக்குப் பிரியமானவர். கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரர். பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகள்மீது மிகுந்த அன்பும் கரிசனையும் வைத்திருக்கிறார். ஆகையினால் தனக்கு மிகவும் பிரியமான தீகிக்குவை அவர்களிடத்தில் அனுப்புகிறார். தன்னுடைய சுயஆதாயத்திற்காக பவுல் தீகிக்குவை அனுப்பவில்லை. அவர் மூலமாக தன்னுடைய காரியங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுடைய இருதயங்களை ஆறுதல்பண்ணவே பவுல் விரும்புகிறார்.

இந்த நிருபத்தின் முடிவில் பவுல் எபேசு சபையிலுள்ள விசுவாசிகளுக்காகவும், மேலும் எல்லா விசுவாசிகளுக்காகவும் ஒரு பொதுவான ஜெபத்தை ஏறெடுத்து, இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். சகோதரருக்கு சமாதானமும், விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக என்று சொல்லி அவர்களை வாழ்த்துகிறார். விசுவாசிகளுக்கு விசுவாசமும் அன்பும் சமாதானமும் தேவை. இவையே மெய்யான ஆசீர்வாதம். நாம் இந்த மெய்யான ஆசீர்வாதத்தை கர்த்தரிடத்தில் விரும்பி கேட்கவேண்டும். கேட்கிறவர்களுக்கு அவர் கொடுக்கிறவர். நாம் எப்போது கேட்க ஆரம்பிக்கிறோமோ அப்போதே, நம்முடைய இருதயத்தில் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாக ஆரம்பித்துவிடும்.

BELLWETHER INTERNATIONAL

எபேசியர் - விரிவுரை

EPHESIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இந்தச் சமாதானம் பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உண்டாகிறது. இந்த வசனத்தில் எபேசு சபையிலுள்ள எல்லா விசுவாசிகளையும் பவுல் வாழ்த்துகிறார். எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிறார். கிறிஸ்துவினிடத்தில் நாம் வைத்திருக்கிற அன்பு உண்மையான அன்பாக இருக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தர் நம்முடைய அன்பை அங்கீகரிப்பார். கிறிஸ்துவினிடத்தில் நாம் அன்புகூருவதுபோல மாய்மாலம் பண்ணமுடியாது. அவரிடத்தில் நாம் அன்புகூருகிற அன்பு அழியாததாக இருக்கவேண்டும். நிலைத்திருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக என்று சொல்லி பவுல் விசுவாசிகளை வாழ்த்துகிறார்.

கிருபை தேவனிடத்திலிருந்து நமக்கு வருகிற ஈவு. அவர் தம்முடைய கிருபையினால் நமக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கிறார். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்ட நாம் கர்த்தரிடத்தில் உண்மையாய் அன்புகூரவேண்டும். நம்முடைய அன்பு நிலைத்திருக்கவேண்டும். அழியாத அன்புடன் அவர்களிடத்தில் அன்புகூரவேண்டும். கிறிஸ்துவில் அன்புகூருகிற மற்ற விசுவாசிகளை நாமும் வாழ்த்தவேண்டும்.